REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

# தினகரன்
THINAKARAN
தினகரன்
2022 மார்ச் 25 வெள்ளிக்கிழமை
1932 - 2022

வரு. 90 இல. 72 | Friday 25, March, 2022 | 20பக்கங்கள் | 30/-

## ஜனாதிபதி-TNA சந்திப்பு இன்று



நீண்ட நாட்களாக ஒத்திவைக்கப்பட்ட ஜனாதிபதி மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பிரதிநிதிகளுக்கு இடையிலான சந்திப்பு இன்று 25 06

## புலம்பெயர் தமிழர்களுடன் பேச்சு நடத்துவதற்கு ஆர்வம்

### வடக்கு அபிவிருத்திக்கு முதலிடவும் அழைப்பு

புலம்பெயர் தமிழர்களுடன் கலந்துரையாடல்களை நடத்த ஆர்வமாக இருப்பதாக தெரிவித்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, வட மாகாணத்தின் அபிவிருத்தியில் முதலீடு செய்யுமாறும் அவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.



இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அரசியல் விவகாரங்களுக்கான உதவி இராஜாங்க செயலாளர் விக்டோரியா நுலாண்ட், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவை சந்தித்தார். 06

## நாட்டில் உணவுப் பாதுகாப்பு தொடர்பில் சிக்கல் எதுவுமில்லை

### போதியளவு பொருட்கள் சந்தைக்கு விநியோகம்

### விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமமே

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் அத்தியாவசியப் பொருட்களுக்கான விலை அதிகரிப்பு காணப்பட்டாலும் உணவு பாதுகாப்பு தொடர்பில் எந்த சிக்கலும் கிடையாதென விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அரிசி, மரக்கறி உள்ளிட்ட பொருட்கள் போதியளவு நாட்டில் தற்போது உள்ளதாகவும் அவற்றை தட்டுப்பாடின்றி சந்தைக்கு விநியோகிக்கும் பொறுப்பை தாம் 06

## கடுமையான கஷ்டத்தில் தொழில் புரியும்

## முல்லைத்தீவு, மன்னார் மீனவருக்கு இறங்குதுறைக்கே மண்ணெண்ணெய்

### செல்வம் எம்.பியிடம் அமைச்சர் காஞ்சன உறுதி

**லோரன்ஸ் செல்வநாயகம்**

முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் கடற்தொழிலில் ஈடுபட்டுள்ள மீனவர்களுக்கு தடையின்றி மண்ணெண்ணெய்யை பெற்



றுக்கொடுப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென இராஜாங்க அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர தெரிவித்தார்.

வன்னி மாவட்ட பாராளுமன்ற 06

## எரிபொருள், சமையல் எரிவாயு, மின்சார துண்டிப்பு

# புதுவருடத்துக்கு முன் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு

### ஜனாதிபதி, பிரதமர், நிதி அமைச்சர் உறுதியளிப்பு

தமிழ், சிங்கள புது வருடத்துக்கு முன்னர் எரிபொருள், சமையல் எரிவாயு, மின்சாரத் துண்டிப்பு பிரச்சினைகளை தீர்ப்பதற்காக ஜனாதிபதி, பிரதமர் மற்றும் நிதி அமைச்சரின் தலைமையில் பாராளுமன்ற பிரதிநிதிகள் 52 பேர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சித் தலைமையகத்தில் நேற்று (24) நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ், சிங்கள புது வருடத்துக்கு முன்னர் எரிபொருள் கியூ, எரிவாயு கியூ மற்றும் மின்சாரத் துண்டிப்பை நிறுத்துவதற்காக ஜனாதிபதி கோட்டாபய 06

> "நிதியமைச்சர் தலைமையில் 52 எம்.பிக்கள் கொண்ட குழுவும் நியமிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே நேற்று தெரிவிப்பு"




## சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபைக்கு ஜனாதிபதி விஜயம்



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று (24) காலை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபைக்கு கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டார்.

அதிகார சபையின் பணிகளை கண்காணித்த ஜனாதிபதி, சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகளுடன் சுமுகமான உரையாடலையும் மேற்கொண்டார்.

## அனுரவின் நுகேகொடை பேச்சு ஆபத்தானது

## ஆயுத போராட்ட மனோ நிலையை ஜே.வி.பி இன்னும் கைவிடவில்லை

### தேசப்பற்று ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர்

நாட்டில் காணப்படும் பொருளாதார நிலைமை காரணமாக பாதிப்புக்குள்ளாகியுள்ள மக்களை தூண்டிவிட்டு பாரிய அழிவை ஏற்படுத்த ஜாதிக ஜனபல வேகய என்னும் பெயரில் மக்கள் விடுதலை



முன்னணி முயற்சி செய்கின்றது என 'தேசப்பற்று ஐக்கிய தேசியக் கட்சி'யின் பொதுச் செயலாளர் சுகத் ஹேவா பத்திரன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள 06

## நீண்டதூர, விசேட அதிவேக

## ரயில் கட்டணங்கள் நேற்று முதல் அதிகரிப்பு



நகரங்களுக்கிடையிலான, நீண்ட தூர ரயில் சேவைகள் மற்றும் விசேட அதிவேக ரயில் போக்குவரத்து சேவைகளுக்கான பயணக் கட்டணங்கள் நேற்று முதல் அதிகரிக்கப்பட்டுள்ளதாக ரயில் நிலைய அதிபர்கள் சங்கத்தின் தலைவர் சுமேத சோமரத்ன தெரிவித்தார். 06

## சஜித் அணியிலிருந்து எட்டு பேர் ரணிலுடன்

### இருவாரங்களுக்குள் நடக்கும் – மஹிந்தானந்த

**லோரன்ஸ் செல்வநாயகம்**


இரண்டு வாரங்களுக்குள் ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர்கள் 08 பேர் ரணில் விக்கிரமசிங்கவுடன் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொள்ளப் போவதாக அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு பகல் கனவு 06

## தஞ்சம் தேடி வரும் தமிழருக்கு சிறையா?

### சீமான் கண்டனம்

**திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது**



இலங்கையில் பொருளாதார நெருக்கடி காரணமாக தமிழகத்தில் தஞ்சம் கேட்டு, கடல்வழியாக, படகுகளின் மூலம் அடைக்கலம் தேடிவரும் ஈழச் சொந்தங்களை வழக்குகள் 06

## வாகன இறக்குமதிக்கு இதுவரை அனுமதியில்லை

### அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவிப்பு



வாகன இறக்குமதி தொடர்பில் பல யோசனைகள் முன்வைக்கப்பட்ட போதிலும், அத்தியாவசிய பொருட்களை மாத்திரம் இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் முன்னுரிமை அளித்து வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு இதுவரை அனுமதி வழங்கவில்லை என இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் பிரேமநாத் சி.தொலவத்த எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே 06

## தமிழகம் வரும் இலங்கை தமிழர்களுக்கு விடிவு காலம்

### சட்டசபையில் முதல்வர் ஸ்டாலின் உரை




தமிழகத்துக்கு வரும் இலங்கைத் தமிழர்களுக்கு, விரைவில் ஒரு விடிவு காலத்தை தமது மாநில அரசு ஏற்படுத்தித் தரும் என தமிழக முதலமைச்சர் மு.க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டசபையில் நேற்று உரையாற்றியபோது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளதாக இந்திய ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கைத் தமிழர்கள் பல்வேறு துன்பங்களுக்கு ஆளாகியுள்ளனர். இந்தச் சூழலில், 06

## ஒரு வாரத்தில் 733 பேர் பாதிப்பு

## டெங்கு நோயாளர்கள் தொகை திடீர் அதிகரிப்பு



நாடளாவிய ரீதியில் டெங்கு நோய் பரவல் வேகமாக அதிகரித்து வருவதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த வாரத்தில் மாத்திரம் 733 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக அந்த பிரிவு குறிப்பிட்டுள்ளது.

அதன்படி, இந்த வருடத்தில் இதுவரை 12,034 06

## கண்டியில் பாரிய தீ விபத்து; மூவர் தீயில் கருகிப் பலி


### கொலையென பொலிஸார் தெரிவிப்பு

**அக்குறணை குறூப் நிருபர்**



கண்டி கட்டுகஸ்தோட்டை, மெனிக்கும்புற பகுதியில் நேற்று(24) ஏற்பட்ட தீப்பரவலில் 03 பேர் தீயில் கருகி பலியாகினர்.

நேற்று அதிகாலை ஏற்பட்ட இந்த தீப்பரவலில் ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் நிஹால் 06



பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண
**புலம்பெயர் தமிழர் குறித்து அரசு சிந்திக்க வேண்டுகோள்** 03



நெடுந்தீவு, இரணைதீவு கடற் பகுதியில்
**அத்துமீறி மீன்பிடித்த 16 இந்திய மீனவர்கள் கைது** 03



**சூப்பர் பவர் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தும் ரஷ்யா**
உக்ரைன் மீது 28 நாட்களாக விமானத் தாக்குதல் 03


## அதிக விலையில் Gas விற்பனை




அதிக விலைக்கு லிற்றோ எரிவாயு சிலிண்டர் விற்பனை செய்யப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து, கொட்டகலையில் மக்கள் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றினை 06

## எரிபொருள் நிலைய கொள்ளை

## சொத்தி உபாலியின் மகன் STFயினரால் கைது



நாவல பகுதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில், அண்மையில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவம் தொடர்பில் பிரபல குற்றவாளியான 'சொத்தி உபாலி'யின் மகன் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் (STF) இந்த கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்ட இருவரை கைது செய்துள்ளனர். 06

## பிரதேச சபை உறுப்பினர் நூதன போராட்டம்

### பசறை பிரதேச சபை முன்றலில் சம்பவம்



பசறை பிரதேச சபையின் உறுப்பினர் எஸ். கார்த்தீஸ்வரன் தலை மொட்டையடித்து மேலுமொரு நூதனப் போராட்டத்தை நேற்று (24) பசறை பிரதேச சபை முன்றலில் மேற்கொண்டுள்ளார்.

இவர் ஏற்கனவே கொழும்பில் 06

### அடுத்த 10 நாட்களுக்குள்

## ஒரு மில்லியன் Gas சிலிண்டர்கள் சந்தைக்கு விநியோகிக்க தயார்

### லிற்றோ நிறுவனம்



ஒரு மில்லியன் எரிவாயு சிலிண்டர்களை அடுத்த 10 நாட்களுக்குள் சந்தைக்கு விநியோகிக்கவுள்ளதாக லிற்றோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.

மேலும் 3,600 மெட்ரிக் தொன் எரிவாயுவை ஏற்றிய கப்பல் நேற்று(24) நாட்டை வந்தடைந்ததாக அந் நிறுவனத்தின் தலைவர் தெஷார ஜயசிங்க தெரிவித்துள்ளார். 06

### விக்கல் வீராச்சாமி



இங்க பொருளாதாரக் கஷ்டம் எண்டு சொல்லி கொஞ்சப்பேர் இந்தியாவுக்கு கள்ளமா படகுல போயிருக்கிறாங்க பாத்தீங்களே....

எனக்கு சந்தேகம்தான், இப்ப உண்மையில எல்லாருக்கும் கஷ்டம்தான், போன சனத்த பாத்தா அப்படி தெரியல, ஏதும் அரசியல் நாடகமோ...!!!

90 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

தினகரன் 90 ஆவது ஆண்டு நிறைவு உதைபந்தாட்ட கிண்ணம்
பேருவளை ஹெட்டிமுல்ல பேகர்சிட்டி உள்ளக அரங்கில்
27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 2.30க்கு

# THINAKARAN TROPHY




E G Lab
Enteem Gem Laboratory Beruwala
Since 2003

அணித் தலைவர் மற்றும் உறுப்பினர்கள்
(அணிகள்; பேருவளை, தர்காநகர், மங்கொணா)

PM GEMS
IMAM GEMS

## அனுசரணையாளர்கள்



தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 மார்ச் 25 வெள்ளிக்கிழமை

# தினகரன்
THINAKARAN
தினகரன்

**தொழுகை நேரம்**
25 முதல் 27 வரை
சுபஹ் - 04.57
ளுஹர் - 12.18
அஸர் - 03.28
மஃரிப் - 06.21
இஷா - 07.31

**இன்றைய சுபதினம்**
பிலவ வருடம் பங்குனி 11
ராகுகாலம் : பகல் : 10.30 - 12.00வரை
சுபநேரம் : காலை : 09.00 - 10.30வரை
யோகம்: அமிர்த சித்தயோகம்
திதி: அஷ்டமி



**எதிர்க்கட்சியின் பொய் பிரசாரங்கள்:**

# மக்கள் அவசர தீர்மானங்களை எடுத்து விடக்கூடாது

*அரசாங்கத்திற்கு எதையும் மறைக்க வேண்டிய அவசியம் கிடையாது -இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க*



**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் நிலவும் அனைத்து நெருக்கடி நிலைக்கும் அரசாங்கம் விரைவான தீர்வை பெற்றுக் கொடுக்கும். மக்கள் எதிர்க்கட்சியின் தவறான விமர்சனங்களுக்கு ஏமாற வேண்டாமென இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அரசு வங்கிகளுக்கு மத்திய வங்கி அழுத்தம் கொடுத்து வருவதாக தெரிவித்து மக்களை திசை திருப்பும் விமர்சனங்களை எதிர்க்கட்சி மேற்கொண்டு வருவதாக குறிப்பிட்ட அவர், அரச வங்கிகள் பலமாக உள்ளதாகவும் மக்கள் அது தொடர்பில் எந்த சந்தேகமும் கொள்ளத் தேவையில்லையென்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று பெறுமதி சேர் வரி திருத்தச்சட்டமூலம் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போதே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த இராஜாங்க அமைச்சர்:

நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடி உள்ளிட்ட அனைத்து பிரச்சினைகளுக்கும் விரைவில் தீர்வு காண்பதற்கான சகல நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுத்துள்ளது. இத்தகைய நிலையில் மக்கள் எதிர்க்கட்சியின் பொய் பிரசாரங்களை வைத்துக்கொண்டு அவசரமான எந்த தீர்மானங்களையும் எடுக்கக் கூடாது.

எதிர்க்கட்சியினர் எழுப்பும் அனைத்து கேள்விகளுக்கும் அரசாங்கம் சபையில் பதில் கொடுத்தே வருகின்றது. அரசாங்கத்திற்கு எதையும் மறைக்க வேண்டிய அவசியம் கிடையாது.

மத்திய வங்கியை கொள்ளையடித்து தேர்தல் நடத்தியவர்களே தற்போது மத்திய வங்கி தொடர்பில் மக்களுக்கு தவறான தகவல்களை தெரிவித்து வருகின்றனர்.

மக்களை நிர்க்கதிக்குள்ளாக்கும் பல்வேறு நடவடிக்கைகளை எதிர்க்கட்சி மேற்கொண்டு வருகிறது. மக்கள் அதற்கு துணை போக வேண்டாம். அரச வங்கிகள் பலமானதாகவே செயற்படுகின்றன. அந்த வங்கிகள் வீழ்ச்சியடைய ஒருபோதும் அரசாங்கம் இடமளிக்காது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தவக்கால சிந்தனை



### நற்பண்புகளை ஏற்று வாழ்வோம்

"என் ஆண்டவர் என்னோடு இருக்கையில் நான் எதற்கும் அஞ்சமாட்டேன்" என மரியாள் கூறும் துணிச்சலான வரிகள் எம் ஒவ்வொருவர் வாழ்விலும் இறைவிசுவாசத்துக்கு வித்திடுகின்றது.

அத்தோடு அது தேவையற்ற செயல்களையும் சிந்தனைகளையும் நிறுத்திக்கொள்ள உதவும் ஒரு முற்றுப்புள்ளி எனலாம். "இதோ ஆண்டவரின் அடிமை உமது திருவுளப்படி எனக்கு ஆகட்டும்" எனும்அன்னை மரியின் உறுதிமொழியில் வியப்பொன்றுமில்லை. ஏனெனில் இறைவன் மீது மரியன்னை கொண்டுள்ள அளவு கடந்த இறைநம்பிக்கையே இவை எல்லாவற்றுக்கும் அடித்தளமாக அமைந்துள்ளது.

இதோ கருவுற்றிருக்கும் இந்தக் கன்னிப்பெண் ஒரு ஆண் மகனைப் பெற்றெடுப்பார் அவருக்கு "இம்மானுவேல்" என்று பெயரிடுவீர் எனக் கூறியபோது தந்தை ஜோசேப்பின் சிந்தனைகளை சற்று சிந்திப்போம். அத்தோடு இறைமகனின் திருவுளம் எத்தகையது என்பதனையும் சிந்திக்க அது அழைப்பு விடுகின்றது.

"தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து முந்தியிருப்பச் செயல்" மறுபுறமாக "மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை என் நோற்றான் கொல் எனும் சொல்" இங்கு இரு புறமும் கூரிய வாள்களைப் போல அமைந்துள்ள குறள் வரிகள். இவை அன்பின் வழிவந்த கடமையை எமக்கு நினைவுபடுத்துகின்றன.

ஆண்டவரின் பிரசன்னம் எம் ஒவ்வொரு அசைவினிலும் நிழலாடும் போது நாம் எதற்கும் அஞ்சத்தேவையில்லை என்றும் தைரியமாக எதையும் ஏற்று வாழவும்வழிகாட்டுகின்றன. ஏனெனில் கடவுளால் இயலாதது எதுவும் இல்லை."நான் ஆண்டவரின் அடிமை உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்" என்றாள் மரியன்னை. இதன் மூலம் அன்னையாம் திருச் சபையில் இணைந்துள்ள அனைவருக்கும் மரியன்னையின் முன்மாதிரிகளான தாழ்ச்சி, விட்டுக்கொடுத்தல், இறைபக்தி, பிறர் சிநேகம், பகிர்தல் போன்ற நற்பண்புகளை ஏற்று வாழ இந்த தவக்காலத்தில் இறைவன் நம்மை அழைத்து நிற்கின்றார்..

அருட் சகோ.
அ.அன்ரனி டனோஷன் (CMF)...

**பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண:**

# புலம்பெயர் தமிழர் குறித்து அரசு சிந்திக்க வேண்டுகோள்

**பாராளுமன்றத்தில் சாள்ஸ் நிர்மலநாதன் MP உரை**

**லோரன்ஸ் செல்வநாயகம்**
**ஷம்ஸ் பாஹிம்**



நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணாமையும் ஒரு முக்கிய காரணமாகுமென தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம். பி சார்ள்ஸ் நிர்மலநாதன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கு வெளிநாடுகளில் வசதியாக வாழும் புலம்பெயர்ந்த தமிழ் மக்களை எவ்வாறு பயன்படுத்த முடியும் என்பதை அரசாங்கம் சிந்தித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அவர் சபையில் கேட்டுக் கொண்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று 06

# சூப்பர் பவர் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தும் ரஷ்யா

**உக்ரைன் மீது 28 நாட்களாக விமானத் தாக்குதல்**



உக்ரைன் மீதான ரஷ்ய போர் கடந்த 28 நாட்களாக நீடித்து வரும் நிலையில், வான்வெளி, தரைவழி தாக்குதல் மட்டுமின்றி கடல் வழியாகவும் ரஷ்யா கடுமையான தாக்குதல் நடத்தி வருகின்றது.

ரஷ்ய படைகளுக்கு ஈடு கொடுக்கும் வகையில் உக்ரைன் வீரர்களும் எதிர்த்து போராடி வருகின்றனர்.

இந் நிலையில், உக்ரைனில் கடந்த 5 நாட்களில் 5 நிமிடத்துக்கு ஒருமுறை ரஷ்ய போர் விமானங்கள் மரியுபோல் நகர் மீது பறந்து சென்று குண்டுகளை வீசு வருகின்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

உக்ரைன் நகரங்கள் மீது 24 மணி நேரத்தில் 300க்கும் மேற்பட்ட ஏவுகணை தாக்குதல்கள் நடந்திருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உக்ரைனில் முக்கிய நகரங்களை பிடிக்க ரஷ்யா 06

**நெடுந்தீவு, இரணைதீவு கடற் பகுதியில்**

# அத்துமீறி மீன்பிடித்த 16 இந்திய மீனவர்கள் கைது

**யாழ்.விசேட நிருபர்**

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 16 இந்திய மீனவர்கள் நேற்று (24) வடக்கில் இரு பகுதிக ளில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று நெ டுந்தீவு அருகே இந்திய மீனவர்க ள் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது அப்பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்ட இலங்கை கடற்படையினர் ஒரு படகையும் அதிலிருந்த 4 மீனவர்களையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்களை மயிலிட்டி துறைமுகம் அழைத்து வந்து கடற்றொழில் மற்றும் 06




# பாகிஸ்தானில் உயர் கல்விவாய்ப்பு

## பாகிஸ்தான் – இலங்கை உயர் கல்வி ஒத்துழைப்பு திட்டம்

# அல்லாமா இக்பால்

## இலங்கை மாணவர்களுக்கான புலமைப் பரிசில் திட்டம்

அல்லாமா மொஹம்மட் இக்பால் புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் பாகிஸ்தான் உயர்கல்வி ஆணைக்குழுவானது இலங்கை மாணவர்களுக்கான புலமைப்பரிசில் திட்டத்தினை அறிவித்துள்ளது. மருத்துவம், பொறியியல், விவசாயம், முகாமைத்துவம், கணனி விஞ்ஞானம் மற்றும் ஏனைய பலதுறைகளில்தேர்வுசெய்யப்பட்ட 1000 மாணவர்களுக்கு அவ்வவ்துறைகளில் அவர்களது ஆளுமையை விருத்தி செய்யும் முகமாக இப்புலமைப் பரிசில் வழங்கப்படுகின்றது.

இலங்கை மற்றும் பாகிஸ்தானிய மாணவர்களுக்கிடையில் அறிவுப் பரிமாற்றம், கலாசாரங்கள் மற்றும் மரபுகள் பற்றிய சிறந்த புரிதலை மேம்படுத்துவதை இந்த திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் உயர்தரவரிசையில் உள்ள பாகிஸ்தான் பல்கலைக்கழகங்களில் கல்வியினை தொடர்வார்கள். இலங்கை மாணவர்கள் பாகிஸ்தானிய சமூகம் மற்றும் அதன் மதிப்புகள் பற்றி அறிந்து கொள்வதோடு தலைமைத்துவ திறன்களையும் பெற்றுக்கொள்வார்கள். மேலும்,பாகிஸ்தானிய மாணவர்கள் மற்றும் சமூகக் குழுக்களுக்கு இலங்கை மற்றும் அதன் கலாசாரத்தைப் பற்றி அறிந்துகொள்ளவும் இத்திட்டம் உதவுகின்றது. முழுக் கல்விக் கட்டணம், பராமரிப்புக் கொடுப்பனவு, விடுதிக் கட்டணம், புத்தகம் கொடுப்பனவுகள் மற்றும் ஒரு தடவைக்கான பிரயாணக் கட்டணம் என்பன இந்த புலமைப் பரிசிலில் அடங்குகின்றது. இந்தப் புலமைப் பரிசிலுக்கு பெண்கள் அதிகமாக விண்ணப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

### படிப்புகள்/ துறைகள்

இந்த புலமைப்பரிசிலானது BS, MS மற்றும் Ph.D என அனைத்து துறைகளுக்கும் வழங்கப்படுகின்றது. பொறியியல், அடிப்படை மற்றும் இயற்கை விஞ்ஞானம்,சமூக விஞ்ஞானம், கட்டிடக்கலை, நுண்கலை, வணிகக் கல்வி, கணினி விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம் விவசாய விஞ்ஞானம் ஊடகம் & தொலைத்தொடர்பு கற்கைகள், மொழித்துறை கற்கைகள் துறைகளும் இதில் அடங்கும். பாகிஸ்தான் பிரதமரின் அறிவுறுத்தலின் படி MBBS (மருத்துவத்துறை) படிப்பிற்காக குறிப்பாக 100 புலமைப்பரிசில்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

**முழு நிதியுதவி புலமைப்பரிசு:**
இது கல்விக் கட்டணம், பராமரிப்பு கொடுப்பனவுகள், விடுதிக் கட்டணங்கள் மற்றும் புத்தகக் கட்டணம் ஆகியவற்றை உள்ளடக்கியது.

| பட்டப்படிப்பு திட்டம் | பாடம் | வெற்றிடம் |
|---|---|---|
| விஞ்ஞானமாணி (B.Sc) (4 வருடங்கள்) | பொது | 150 |
| | பொறியியல் | 50 |
| | மருத்துவம் | 40 |
| MS/MPhil (2-ஆண்டுகள்) | அனைத்து பாடங்களும் | 50 |
| PhD (கலாநிதி) | அனைத்து பாடங்களும் | 10 |
| | மொத்தம் | 300 |

**பகுதி நிதியுதவி புலமைப்பரிசு:**
இது கல்விக் கட்டணத்தை மட்டும் உள்ளடக்கியது. கல்விக் கட்டணத்தைத் தவிர்ந்த ஏனைய கூடுதல் செலவுகள் இலங்கை மாணவர்களால் மேற்கொள்ளப்படும்

| பட்டப்படிப்பு திட்டம் | பாடம் | வெற்றிடம் |
|---|---|---|
| விஞ்ஞானமாணி (B.Sc) (4 ஆண்டுகள்) | பொது | 40 |
| | பொறியியல் | 20 |
| | மருத்துவம் | 10 |
| MS/MPhil (2-ஆண்டுகள்) | அனைத்து பாடங்களும் | 20 |
| PhD (கலாநிதி) | அனைத்து பாடங்களும் | 10 |
| | மொத்தம் | 100 |

### தேவையான தகைமைகள் மற்றும் தகுதிகள்

| | |
|---|---|
| **மருத்துவத்துறை, பல் மருத்துவம் மற்றும் மருந்தியல்** | ஜீ.சீ.ஈ உயர்தரம் அல்லது அதற்குச் சமமான பரீட்சை (முன் மருத்துவம்) குறைந்தபட்சம் 65% மதிப்பெண்களுடன். |
| **பொறியியல்** | ஜீ.சீ.ஈ உயர்தரம் / அல்லது அதற்குச் சமமான பரீட்சை (முன் பொறியியல்) குறைந்தபட்சம் 65% மதிப்பெண்களுடன். |
| **இளங்கலை பட்டப்படிப்புத் திட்டம்** | ஜீ.சீ.ஈ உயர்தரம் / அல்லது அதற்குச் சமமான பரீட்சை தேவையான பாடங்களில் குறைந்தபட்சம் 60% மதிப்பெண்களுடன். |
| **முதுகலை பட்டப்படிப்பு திட்டம்** | பட்டதாரி அளவில் 60% மதிப்பெண்களுடன், தொடர்புடைய பாடத்தில் 16 ஆண்டுகள் கல்வி |
| **கலாநிதி பட்டப்படிப்பு திட்டம்** | முதுநிலை மட்டத்தில் CGPA 3.00/4.00 உடன், தொடர்புடைய பாடத்தில் 18 ஆண்டுகள் கல்வி. முதுநிலை மட்டத்தில் ஒரு ஆராய்ச்சி ஆய்வறிக்கை |

**முக்கிய குறிப்பு:**
- புலமைப் பரிசில்கள் தகுதியின் அடிப்படையில் வழங்கப்படும்.
- இணைவதற்கான இறுதித் திகதியில்,இளங்கலைப் பட்டதாரிகளுக்கான வயது எல்லை 23 வயதுக்கு மேற்படாமல் இருக்க வேண்டும் மற்றும் முதுகலை பட்டப் படிப்புக்கு ஆசிரியர் அல்லாத விண்ணப்பதாரிகளுக்கு 35 வயதுக்கும், ஆசிரிய விண்ணப்பதாரிகளுக்கு 40 வயதுக்கும் மேற்படாமல் இருக்க வேண்டும்.
- விண்ணப்பதாரர்களுக்கு தகுதித் தேர்வு மதிப்பெண் மற்றும் கல்விச் சான்று மதிப்பெண்களின் அடிப்படையில் தேர்வு செய்யப்படுவார்.
- உயர் கல்வி கற்பிக்கப்படும் மொழி ஆங்கிலமாகும்.
- பாகிஸ்தானில் கல்வியை முடித்த பின்னர் இலங்கையில் சேவை செய்ய வேண்டும்
- ஏற்கனவே வேறு ஏதேனும் பாகிஸ்தானின் உயர் கல்வி ஆணைய உதவித் தொகையைப் பெற்றுள்ள விண்ணப்பதாரர் விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்.
- விண்ணப்பதாரர் வழங்கிய தகவலின் அடிப்படையில் தகுதிப் பட்டியல் தயாரிக்கப்படும்.
- பகுதியளவு நிதியுதவி பெற்றால் கல்விக் கட்டணம் மட்டுமே பல்கலைக்கழகத்திற்குச் செலுத்தப்படும் மீதமுள்ள செலவினத்தை விண்ணப்பதாரர்கள் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை**
- விண்ணப்பதாரர்கள் பாகிஸ்தான் உயர் கல்வி ஆணைய இணையதளமான http://eportal.hec.gov.pk/paksl மூலம் தங்களது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம்.
- இது பற்றிய மேலதிக விபரங்களை http://hec.gov.pk/site/pksl இல் பெற்றுக் கொள்ளலாம்.
- அனைத்து விண்ணப்பதாரிகளும் கொழும்பில் உள்ள பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராலயம் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் பாகிஸ்தான் உயர் கல்வி ஆணையம் நடத்தும் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.
- தவறான, பிழையாக தகவல்களை வழங்கியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருப்பின் புலமைப் பரிசிலை எந்தநேரத்திலும் நிறுத்தும் உரிமை பாகிஸ்தான் உயர் கல்வி ஆணையத்திற்கு உண்டு.

**இணையதளத்தில் விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதற்கான கடைசித் திகதி ஏப்ரல் 30, 2022 ஆகும்.**
விண்ணப்பம் நேரடியாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**ஜெஹான்செப் கான்**
**திட்டப் பணிப்பாளர் (பாக்-இலங்கைத் திட்டம்)**
**உயர் கல்வி ஆணையம்,**
**எச்-8. இஸ்லாமாபாத்.**
**பாகிஸ்தான்.**
**info.paksl@hec.gov.pk**

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

பிலவ வருடம் பங்குனி மாதம் 11ம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ஷஃபான் பிறை 21

### குறள் தரும் சிந்தனை



கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம் அஃதின்றேல்
புண்ணென்று உணரப் படும்

*கருணையுள்ளம் கொண்டவருடைய கண்ணே கண் என்று கூறப்படும். இல்லையானால் அது கண் அல்ல; புண்*

## எதிரணியின் திட்டத்தை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்!

எமது நாட்டில் கடந்த சில மாதங்களாக பொருளாதார நெருக்கடி நிலவி வருகின்றது. டொலர் பற்றாக்குறையானது பல்வேறு துறைகளிலும் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. எரிபொருட்களுக்கு அவ்வப்போது பற்றாக்குறை ஏற்படுகின்றது. இதன் காரணமாக எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் நீண்ட கியூ வரிசையைக் காண முடிகின்றது. எரிபொருள் பற்றாக்குறையானது அனைத்துத் துறைகளிலும் தாக்கங்களைச் செலுத்துகின்றது.

போக்குவரத்துச் செலவினம் காரணமாக அனைத்துப் பொருட்களினதும் விலைகள் அதிகரித்துள்ளன. அதேசமயம் எரிவாயு பற்றாக்குறை காரணமாக உணவுப் பொருட்களின் விலைகளும் அதிகரித்துள்ளன. சில இடங்களில் உணவகங்கள் பூட்டப்பட்டுக் கிடப்பதையும் காண முடிகின்றது. பாணின் விலையும் அதிகரித்து விட்டது.

மறுபுறத்தில் மின்சார விநியோகத்திலும் சிக்கல்கள் உள்ளன. எமது நாட்டின் மின்சாரத் தேவையில் சுமார் நாற்பது சதவீதமான மின்சாரம் மாத்திரமே நீர்மின்னுற்பத்தி நிலையங்களில் இருந்து உற்பத்தி செய்யப்படுகின்றது. மிகுதியான மின்சாரம் நுரைச்சோலை அனல் மின்னுற்பத்தி நிலையத்தினாலும், திரவ எரிபொருளைப் பயன்படுத்தி ஜெனரேட்டர்கள் மூலமும் உற்பத்தி செய்யப்படுகின்றது.

திரவ எரிபொருள் விநியோகத்தில் ஏற்பட்டுள்ள இடையூறுகள் காரணமாக மின்சார உற்பத்தியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. திரவ எரிபொருள் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்வதென்பது அதிக செலவினம் நிறைந்ததாகும். ஆனாலும் வேறு வழியின்றி அவ்வழியையே நமது நாடு நாட வேண்டியுள்ளது. திரவ எரிபொருளுக்கு பற்றாக்குறை ஏற்படும் போதெல்லாம் மின்சார உற்பத்தியும் பாதிக்கப்படுகின்றது. எனவே மின்சாரவெட்டை நாடெங்கும் அமுல்படுத்த வேண்டிய தேவை இலங்கை மின்சாரசபைக்கு ஏற்படுகின்றது.

இவை அனைத்துக்குமான அடிப்படைக் காரணம் டொலருக்கான பற்றாக்குறை ஆகும். டொலர் பற்றாக்குறை ஈடு செய்யப்பட்டு விடுமானால் பொருட்களின் விலைகளும் குறைந்து விடும், எரிபொருளுக்கான நெருக்கடியும் இருக்கப் போவதில்லை. மின்சார விநியோகத்தில் உள்ள இடையூறுகளும் நீங்கி விடுவதற்கு இடமுண்டு. மக்களின் சிரமங்களும் பெருமளவில் குறைந்து விடும்.

இன்று உருவாகியுள்ள நெருக்கடியானது விரைவில் சீராகி விடுமென்றே எதிர்பார்க்கப்படுகின்றது. அரசாங்கத்தின் அமைச்சர்களும் அவ்வாறுதான் கூறுகின்றனர். இன்றைய நெருக்கடியானது தற்காலிகமானதென்றே அவர்கள் தெரிவிக்கின்றனர். அதுவரை பொறுமை காக்க வேண்டியது எமது கடமையாகும்.

ஏனெனில் இன்றைய நெருக்கடி எவ்வாறு ஏற்பட்டதென்பதை நாட்டு மக்களில் விஷயமறிந்தவர்கள் மாத்திரம் நன்கறிவர். கொவிட் தொற்று ஏற்படுத்திய விளைவுதான் இது. கொவிட் தொற்று தீவிரமடைந்ததும் அரசு பணத்தை வாரியிறைக்காமல் விட்டிருந்தால் நாட்டில் இன்றைய நிதி நெருக்கடி தோன்றியிருக்கவே மாட்டாது. ஆனால் மனிதப் பேரவலங்கள் விபரிக்க முடியாத அளவில் ஏற்பட்டிருக்கும். உயிரிழப்புகளின் எண்ணிக்கை மிக மோசமாக அதிகரித்திருக்கும்.

ஆனால் பொறுப்புமிக்க அரசாங்கமொன்றினால் அவ்வாறு அலட்சியமாக இருந்து விட முடியாது. இலங்கை அரசாங்கமும் அவ்வேளையில் தனக்குரிய கடமைப் பொறுப்பை முழுநிறைவாகவே ஆற்றியிருந்தது. கொவிட் தொற்றுக்குள்ளானோரைப் பராமரித்தல், அவர்களது குடும்பத்துக்கு நிவாரணப் பொதிகளை வழங்குதல், நாட்டு மக்களில் வறுமைக் கோட்டுக்கு உட்பட்டோருக்கு ஐயாயிரம் ரூபாவை வழங்கியமை என்றெல்லாம் அரசாங்கம் செலவிட்ட நிதி ஏராளம்.

நாட்டை மாதக்கணக்கில் மூடி வைத்திருந்தபடியே அனைத்து அரசாங்க ஊழியர்களுக்கும் எதுவித தடையோ, தாமதமோ இன்றி மாதாந்த வேதனத்தை வழங்கி வந்தது அரசாங்கம். நாட்டின் தேசிய உற்பத்தி ஒட்டுமொத்தமாகவே அதல பாதாளத்துக்குச் சென்றிருந்த காரணத்தினால், அரசின் வருமான வழிகள் அத்தனையுமே ஸ்தம்பிதமடைந்திருந்தன. ஆனாலும் அத்தனை நெருக்கடிகளிலும் அரசாங்கம் நாட்டு மக்களைக் கைவிடவில்லை.

கொவிட் தடுப்பு நடவடிக்கைகளுக்காக அரசாங்கம் இதுவரை செலவிட்டுள்ள நிதி பெருந்தொகையாகும். கொவிட் அச்சுறுத்தலில் இருந்து மக்களைப் பாதுகாக்க வேண்டுமென்பதே அரசின் எண்ணமாக இருந்தது. அந்தச் செலவினத்தின் விளைவுகளையிட்டு அவ்வேளையில் அரசு பொருட்படுத்திக் கொள்ளவில்லை. மக்கள் நலன் மாத்திரமே அரசின் பிரதான குறிக்கோளாக இருந்தது.

பெருந்தொகை நிதி கொவிட் தடுப்பு நடவடிக்கைகளுக்காக வாரியிறைக்கப்பட்டதன் காரணமாக நாடு பொருளாதார சிக்கலுக்குள் அகப்பட்டுக் கொண்டுள்ளது. அன்று அரசாங்கத்தின் அத்தனை நிவாரணங்களையும் மக்கள் பெற்றுக் கொண்ட போது எதிரணியினர் கருத்துக் கூறவில்லை. அரசாங்கம் அதிக பணத்தைச் செலவிடுகின்றதென அவர்கள் அப்போது கூறவில்லை.

ஆனால் இன்று எதிரணியினர் அரசை கண்டபடி விமர்சிக்கின்றனர். கொவிட் தடுப்பு நடவடிக்கையினால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியே இதுவென்பதை எதிரணியினர் மறைக்க முற்படுகின்றனர். மக்களைத் தூண்டி விட்டபடி வேடிக்கை பார்க்கின்றனர். மக்கள் மத்தியில் தவறான தகவல்களை வழங்கி குழறுபடியை உண்டாக்கி வருகின்றனர். இது தவறான அரசியல் பாதையாகும். எதிரணியினரின் மிக மோசமான அரசியல் கலாசாரத்தை மக்கள் முதலில் புரிந்து கொள்வதே இன்று பிரதானம். இன்றைய பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான திட்டங்களை அரசு வகுத்துள்ளது. அதற்கான ஆதரவை வழங்க வேண்டியது மக்களின் கடமையாகும்.

editor.tkn@lakehouse.lk

# இந்திய வம்சாவளி மக்கள் மீது பாரதம் உட்பட முழு உலகும் அக்கறை காண்பிக்க வேண்டும்

## பிரதமர் நரேந்திர மோடிக்கான ஆவணக்கடிதம் மனோ கணேசன் எம்.பி தலைமையில் தமிழ் முற்போக்கு கூட்டணியினால் இந்திய உயர்ஸ்தானிகரிடம் கையளிப்பு



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் சமர்ப்பிப்பதற்கென, இந்திய வம்சாவளி மலையக தமிழ் இலங்கையர் சார்பான அபிலாசைகள் அடங்கிய ஆவணக் கடிதத்தை தமிழ் முற்போக்கு கூட்டணி நேற்றுமுன்தினம் (23) இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேயிடம் கையளித்தது. தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தலைமையிலான குழுவினர் இக்கடிதத்தை இந்திய உயர்ஸ்தானிகரிடம் கையளித்தனர்.

கொழும்பிலுள்ள இந்திய இல்லத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன், பிரதித் தலைவர் வே. ராதாகிருஷ்ணன், உதயகுமார் எம்.பி, கே.டி. குருசாமி, பேராசிரியர் சோ.சந்திரசேகரம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தியத் தரப்பில் உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, துணை உயர்ஸ்தானிகர் வினோத் கே. ஜேகப், அரசியல் துறை செயலாளர் பானு பிரகாஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இது தொடர்பில் தமிழ் முற்போக்கு கூட்டணி தெரிவித்துள்ளதாவது:

மனம் திறந்த கலந்துரையாடலுடன் இந்தச் சந்திப்பு மிகவும் திருப்திகரமாக அமைந்தது. இலங்கையில் வாழும் தமிழர் சனத்தொகையில் சுமார் அரைப்பங்கினரான இந்திய வம்சாவளி மலையகத் தமிழ் இலங்கையர் தொடர்பான கூடிய அக்கறையை செலுத்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான இந்திய அரசாங்கம் உறுதி பூண்டுள்ளதாக இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே தெரிவித்தார்.

இந்த நிலையில், இலங்கையின் முழுமை மிக்க குடிமக்களாக ஏனையோருடன் சமத்துவமாக வாழ விரும்பும் மலையகத் தமிழ் இலங்கையர் தொடர்பான இந்த அதிகாரபூர்வ ஆவணம் மிகவும் பயன் தருகிறது என அவர் மேலும் கூறினார்.

மலையகத் தமிழ் மக்களின் அனைத்து அபிலாசைகளையும் ஒருசேர பிரதிபலிக்கும் கோரிக்கைகள் உள்ளடங்கிய இத்தகையை ஆவணத்தைத் தயாரித்து முன்வைத்துள்ளமை தொடர்பில் தமிழ் முற்போக்கு கூட்டணியிடம் தனது மகிழ்ச்சிகளையும், பாராட்டுகளையும் உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே தெரிவித்தார்.

இதன் அபிலாசை ஆவணக் கடிதத்தை உடனடியாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் அவதானத்துக்கு முறைப்படி அனுப்பி வைப்பதாக தூதுவர் கோபால் பாக்லே, தமிழ் முற்போக்கு கூட்டணி தூதுக்குழுவுக்கு உறுதியளித்தார்.

மேலும், இனி வரும் எதிர்காலத்தில், இந்திய மற்றும் தமிழக அரசியல், சமூக, பரப்புகளில் இந்திய வம்சாவளி மலையகத் தமிழ் இலங்கையர் அதிக கவனத்தை பெற வேண்டும் எனவும், அதற்கான ஒத்துழைப்புகளை இந்த அரசு சார்பில் இந்தியத் தூதகரம் வழங்கும் எனவும் அவர் மேலும் கூறினார்.

அடுத்த வாரம் இலங்கைக்கு வருகை தரவுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ஜெய்சங்கர், தமிழ் முற்போக்குக் கூட்டணியை சந்திக்கும் போது இது தொடர்பில் மேலும் கலந்துரையாடப்படும். பிம்ஸ்டெக் (BIMSTEC) மாநாடு முடிந்தவுடன், இந்த ஆவணக் கோரிக்கைகள் தொடர்பில் விரிவாக கலந்துரையாட விரும்புவதாகவும் தூதுவர் கோபால் பாக்லே மேலும் தெரிவித்தார்.

கூட்டணித் தலைவர் மனோ கணேசன், இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேயிடம் கூறியதாவது:

இந்திய வம்சாவளி மலையகத் தமிழ் இலங்கையர் தொழிலாளர்களாக, இலங்கைத் தீவுக்கு முதன்முதலில் 1823 ஆம் ஆண்டு



கொண்டு வரப்பட்டனர். நிதி வர்த்தகம் உட்பட ஏனைய தொழில் நடவடிக்கைகளுக்காகவும் மென்மேலும் தமிழர்கள் அதன் பின்னர் இலங்கை வந்தனர்.

அடுத்த ஆண்டு 2023 உடன் இந்த வரலாறு, இருநூறு ஆண்டுகளைத் தொடுகிறது. அதை நாம் விரிவாக நினைவுகூர உள்ளோம். இந்த இருநூறு ஆண்டுகளில் ஒரு சமூகமாக நாம் பெற்றுள்ள வளர்ச்சி, பெறாத வளர்ச்சி, முகம் கொடுக்கின்ற இன்னல்கள் ஆகியவற்றை ஆய்வு செய்து அதுகுறித்து ஆவன செய்ய தமிழ் முற்போக்கு கூட்டணி திடசங்கற்பம் பூண்டுள்ளது. அதன் ஆரம்பமே இந்த ஆவணமாகும்.

1823 ஆம் ஆண்டு வேளையில் இலங்கை, இந்தியா ஆகிய இரண்டு நாடுகளையும் ஆண்ட பிரித்தானிய அரசின் கவனத்துக்கும் இதை நாம் கொண்டுவர உள்ளோம். பிரித்தானிய அரசுக்கும் எமது மக்கள் தொடர்பில் கடப்பாடு இருக்கிறது. 1823ஆம் ஆண்டுக்கு, எட்டு ஆண்டுகளுக்கு முன்னர்தான் 1815 இல் கண்டி இராச்சியத்தை ஆண்ட இந்திய வம்சாவளி மதுரை நாயக்க மன்னர் வம்சத்தின் சுமார் 300 ஆண்டுகால ஆட்சி, பிரித்தானியரால் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. இந்நாட்டில் உழைப்பதற்கு மட்டுமல்ல ஆளவும் நாம் வந்துள்ளோம் என்பதை இது காட்டுகிறது.

இலங்கையில் வடக்கு, கிழக்கில் வாழும் தமிழர்களுடன் நாம் பிரிக்க முடியாத நல்லுறவு கொண்டுள்ளோம். அவர்களின் இன்னல்களை துடைக்க இந்தியா பலதும் செய்கிறது. அது தொடர வேண்டும். அதேவேளை அதே அக்கறையை எமது மக்கள் மீதும் இந்தியா உட்பட உலகம் காட்ட வேண்டிய வேளை இன்று வந்து விட்டது.

சுமார் பதினைந்து இலட்சம் இந்திய வம்சாவளி மலையகத் தமிழ் இலங்கையரில் பத்து வீதமே தோட்ட தொழிலாளர்கள் ஆவர். ஒட்டுமொத்த மலையகத் தமிழ் இலங்கையரும் தோட்டத் தொழிலாளர்கள் அல்ல என்பதையும், எமது சமூகத்தில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியையும் இந்திய உட்பட உலகம் புரிந்து கொள்ள வேண்டும்.

அதேவேளை பத்து வீதமான சுமார் ஒன்றரை இலட்சம் தோட்டத் தொழிலாளர்களும் அவர்களது குடும்ப உறவுகள் மற்றும் தோட்டங்களில் இன்னமும் வாழ்பவர்கள் உள்ளிட்ட சுமார் நான்கு இலட்சம் மக்களே இலங்கையிலேயே மிகவும் பின்தங்கிய பிரிவினராவர்.

அவர்களை கைதூக்கி தேசிய மட்டத்துக்கு உயர்த்த இந்தியா, பிரிட்டன் உட்பட உலகத்துக்கு கடப்பாடு இருக்கின்றது. இதை வலியுறுத்தி உரிய செயற்பாடுகளை முன்னெடுக்க தமிழ் முற்போக்கு கூட்டணி திடசங்கற்பம் பூண்டுள்ளது. எமது உறுதிப்பாட்டை நாம் எந்த சவால்களுக்கும் முகம் கொடுத்து செய்து முடிப்போம்.

# கிழக்கின் முதலாவது புல் தரை கிரிக்கெட் அரங்கு மட்டக்களப்பில் ஏப்ரல் 3 இல் அங்குரார்ப்பணம்

## சனத் ஜயசூரிய, அர்ஜூன ரணதுங்க, அரவிந்த டி சில்வா, ரொமேஷ் களுவிதாரன, சமிந்த வாஸ் கலந்து கொள்வர்

கிழக்கு மாகாண கிரிக்கெட் வீரர்களுக்கு மகிழ்ச்சி தரும் வகையில், அம்மாகாணத்தின் முதலாவது புற்தரை (Turf) கிரிக்கெட் அரங்கு ஏப்ரல் மாதம் 03 ஆம் திகதி மட்டக்களப்பில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்து வாழும் கோட்டைமுனை விளையாட்டுக் கழக அங்கத்தவர்களின் நிதி உதவியோடு இந்த மைதானம் மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை வடக்குப் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள சத்துருக்கொண்டானில், கோட்டைமுனை விளையாட்டுக் கிராம அமைப்பினால் நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றது.

கோட்டைமுனை விளையாட்டுக் கிராம அமைப்பானது பல்லின மக்கள் வாழ்கின்ற மட்டக்களப்பு மாவட்டத்தின் கிரிக்கெட் விளையாட்டினை மேம்படுத்தும் நோக்குடன் இந்த மைதானத்தை நிர்மாணம் செய்திருக்கின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

கடந்த 2017ஆம் ஆண்டு இலங்கையின் முதல் டெஸ்ட் அணித்தலைவர் பந்துல வர்ணபுரவின் ஆளுகையில் இந்த மைதானத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இந்த மைதானம் முன்னரே கட்டி முடிக்க எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், கொவிட்19 வைரஸ் தொற்று அடங்கலாக நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக அது நிறைவேறாமல் இருந்தது.

தற்போது பிரமாண்டமான முறையில் அமைக்கப்பட்டிருக்கும் இந்த மைதானத்தில் 30 கிரிக்கெட் வீரர்கள் ஒரே நேரத்தில் தங்கி பயிற்சிகளை மேற்கொள்ளக் கூடிய வசதிகள் செய்யப்பட்டிருப்பதோடு, மைதானத்தின் நடுவே ஐந்து புற்தரை களங்கள் (Wickets) அமைக்கப்பட்டிருக்கின்றன.

அதேநேரம் வீரர்களின் பயிற்சிக்காக இங்கே ஆறு வலைப்பயிற்சி மையங்களும் உருவாக்கப்பட்டிருப்பதோடு, அதிநவீன இலத்திரனியல் ஸ்கோர் பலகை (Scoreboard), நகர்த்தக் கூடிய கறுப்பு வெள்ளை பார்வைத் திரை (Screen) என்பனவும் காணப்படுகின்றன. அத்துடன் இந்த மைதானத்தில் இருக்கும் புற்களை தொடர்ச்சியாக பராமரிப்புச் செய்வதற்காக விஷேடமாக வெளிநாட்டில் இருந்து தருவிக்கப்பட்ட இயந்திரங்களும், அதிநவீன நீர்க்கருவிகளும் காணப்படுகின்றன.

இந்த மைதானத்தின் எல்லை அளவுகள் சுமார் 80 மீற்றர் வரையில் இருப்பதுடன், இந்த மைதானம் மட்டக்களப்பு மாவட்டத்தில் சுற்றுலாப் பிரயாணிகளின் ஒரு ஈர்ப்பிடமாகவும் இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த மைதானத்தை உருவாக்கியவர்களின் எதிர்பார்ப்பு மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து ஒரு வீரராவது தேசிய கிரிக்கெட் அணியில் விளையாட வேண்டும் என்பதாக உள்ளது என கோட்டைமுனை விளையாட்டுக் கிராம அமைப்பின் உறுப்பினர்களில் ஒருவர் தெரிவித்திருந்தார்.

இதேவேளை இந்த மைதானத்தின் அங்குரார்ப்பண நிகழ்வின் போது இலங்கை கிரிக்கெட் அணியின் 1996 ஆம் ஆண்டு உலகக் கிண்ண நாயகர்கள் மற்றும் மட்டக்களப்பு ஹீரோஸ் (Batti Heroes) பங்குபெறும் கண்காட்சி T20 போட்டி ஒன்றும் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றது.

இந்தக் கண்காட்சிப் போட்டியில் இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர்களான சனத் ஜயசூரிய, அர்ஜ்ன ரணதுங்க, அரவிந்த டி சில்வா, ரொமேஷ் களுவிதாரன மற்றும் சமிந்த வாஸ் போன்ற முன்னணி வீரர்கள் கலந்து கொள்ளவிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.





எஸ்.எஸ்.அமிர்தகழியான்...
மட்டக்களப்பு

# தமிழகத்திலுள்ள இலங்கைத் தமிழர்களுக்கு விடிவு காலத்தை ஏற்படுத்தித் தருவோம்!

## முதலமைச்சர் ஸ்டாலின் உறுதி

தமிழகத்தில் வாழ்கின்ற இலங்கைத் தமிழர்களுக்கு தமிழக அரசு விரைவில் விடிவுகாலத்தை ஏற்படுத்தித் தரும் என்று தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் சட்டசபையில் நேற்றுமுன்தினம் உறுதியளித்துள்ளார்.

தமிழகத்துக்கான வரவுசெலவுத் திட்டம் கடந்த 18 ஆம் திகதி சட்டசபையில் தாக்கல் செய்யப்பட்டது. இதையொட்டி வேளாண் துறைக்கான தனி பட்ஜெட் அடுத்த நாள் தாக்கலானது.

இந்த நிலையில் மார்ச் 21, 22, 23 ஆகிய திகதிகளில் பட்ஜெட் மீதான விவாதம் நடைபெற்றது.

கடைசி நாளான விவாதத்தின் போது முதல்வர் ஸ்டாலின் பேசினார். அப்போது அவர் கூறுகையில் "இலங்கையில் பொருளாதார நெருக்கடியால் சிக்கித் தவிக்கும் இலங்கைத் தமிழர்கள் தமிழகத்திற்கு வந்துள்ளனர். அவர்களுக்கு தமிழக அரசு விரைவில் விடிவுகாலத்தை ஏற்படுத்தித் தரும். இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையை சட்டரீதியாக கையாள்வது குறித்து மத்திய அரசு மற்றும் மத்திய அமைச்சர்கள், அதிகாரிகளுடன் பேசி முடிவெடுக்கப்படும்" எனக் குறிப்பிட்டார்.



# பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்

## மாநாட்டை ஏற்பாடு செய்தமை நேர்மையான ஒரு முயற்சி; அரசியல் இலாபம் பெறுவதற்கு அல்ல!

## சர்வகட்சி மாநாட்டில் ஜனாதிபதி

**நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண, அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென்று, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார். குறுகியகால மற்றும் நீண்டகால உத்திகளை முன்னெடுப்பதன் மூலம் பொருளாதாரத்தை ஸ்திரமான நிலைக்கு கொண்டு வர வேண்டிய தன் அவசியத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.**





நேற்றுமுன்தினம் (23) முற்பகல் கோட்டை ஜனாதிபதி மாளிகையில், சர்வகட்சி மாநாட்டை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன, மக்கள் ஐக்கிய முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தேசிய காங்கிரஸ், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள், ஐக்கிய மக்கள் கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஸ்ரீ லங்கா மகஜன கட்சி, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தேசிய முஸ்லிம் கூட்டமைப்பு, மக்கள் விடுதலை அமைப்பு, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி ஆகிய கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர்.

லங்கா சமசமாஜ கட்சியின் பேராசிரியர் திஸ்ஸ விதாரண மற்றும் வண. அத்துரலியே ரத்தின தேரர் ஆகியோர் 11 பங்காளிக் கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தி இம்மாநாட்டில் கலந்து கொண்டனர்.

நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடிக்கான முன்மொழிவுகள் மற்றும் ஆலோசனைகளை எதிர்பார்த்து இந்த மாநாடு கூட்டப்பட்டிருந்தது. கட்சித் தலைவர்களும் பிரதிநிதிகளும் எழுத்து மூலமாகவும், வாய்மொழியாகவும் தங்கள் முன்மொழிவுகளை சமர்ப்பித்தனர். நாட்டிற்காகவும் மக்களுக்காகவும் தங்களின் அதிகபட்ச பங்களிப்பையும் அர்ப்பணிப்பையும் சர்வகட்சி மாநாட்டிற்கு எதிர்காலத்தில் வழங்குவதாகவும் கட்சித் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால், தற்போதைய பொருளாதார நிலைமையை மாநாட்டில் முன்வைத்தார்.

சர்வகட்சி மாநாடு நேர்மையான ஒரு முயற்சி ஆகும். இதில் எந்தவித அரசியல் இலாபமோ, குறுகிய நோக்கமோ கிடையாது எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அரசாங்கத்தின் அழைப்பை ஏற்றதுடன், அதனை தேசிய தேவையாகக் கருதி பங்கேற்ற அனைத்துக் கட்சிகளுக்கும் ஜனாதிபதி தனது நன்றியைத் தெரிவித்தார். கலந்து கொள்ளாத ஏனைய கட்சிகளும் வருகை தந்து, தமது நிலைப்பாட்டை சர்வகட்சி மாநாட்டின் முன்னிலையில் தெரிவிக்குமாறும் ஜனாதிபதி கேட்டுக் கொண்டார்.

சமர்ப்பிக்கப்பட்ட அனைத்துக் கருத்துகள் மற்றும் ஆலோசனைகளை மீளாய்வு செய்வதற்கு பொறிமுறை ஒன்றை உருவாக்கி பயனுள்ள முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதற்காக குழுவொன்றை அமைக்க முடியுமென்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள், ஆளுங் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள், ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத், ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க, பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க ஆகியோர் உள்ளிட்ட பலரும் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர்.













### கருத்துகள் மற்றும் ஆலோசனைகளை வழங்குவதற்கு வருகை தந்த அனைத்து கட்சிகளுக்கும் நன்றி; பங்கேற்காத கட்சிகளுக்கும், தமது நிலைப்பாட்டை தெரிவிப்பதற்கு அழைப்பு

# ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக 11வது பட்டமளிப்பு விழா இன்று



**ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக் கழகத்தின் 11வது பட்டமளிப்பு விழா இன்று (25) ஹம்பாந்தோட்டையில் அமைந்துள்ள மாகம் றுகுணுபுர சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறுகிறது. இன்று 584 பட்டதாரிகள் பட்டம் பெறுவதாக பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் ஏ.ஆர். முகம்மட் மாஹீர் தெரிவித்தார்.**

ஊவா மாகாணத்தின் தலைநகரான பதுளையில் அமைந்துள்ள ஊவா வெல்லெஸ்ஸ பல்கலைக்கழகம், இலங்கையின் 14வது பல்கலைக்கழகமாக 2005 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இப்பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டு 17 வருடங்கள் கடந்து விட்ட நிலையில், இலங்கையின் உயர்கல்வி வரலாற்றில் தனக்கென தனியான இடம் பதித்துள்ளது. ஏனைய பல்கலைக்கழகங்களின் கற்கைகளிலுருந்து வேறுபட்டு, முயற்சியாண்மையை கருவாகக் கொண்டு இலங்கையின் இயற்கை வளங்களுக்கு பெறுமதி சேர்ப்பதற்கான பாட நெறிகளை தன்னகத்தே கொண்ட நவீன சவால்களுக்கு முகம் கொடுக்கும் கல்விச் சமூகத்தை உருவாக்குவதில் வெற்றி நடை பயில்கின்றது. இப்பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்று வெளியாகும் பட்டதாரிகளில் சுமார் 80 வீதமான பட்டதாரிகள் தொழில்வாய்ப்புகள் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நான்கு பீடங்களுடனும் பதினொரு வகையான பாடத்துறைகளையும் இப்பல்கலைக்கழகம் கொண்டுள்ளது.

1. விலங்கு விஞ்ஞானமும் ஏற்றுமதி விவசாயமும் பீடத்தில் விலங்கு விஞ்ஞானம், நீர்வாழ் வளங்களும் தொழில்நுட்பமும், ஏற்றுமதி விவசாயம், தேயிலை தொழில்நுட்பமும் பெறுமதி சேர்ப்பும், பனை இனத்தாவரம் மற்றும் இறப்பர் பால் தொழில்நுட்பமும் பெறுமதி சேர்ப்பும்.

2. பிரயோக விஞ்ஞானம் பீடத்தில் விஞ்ஞானமும் தொழில்நுட்பமும், கனிப் பொருள் வளங்களும் தொழில்நுட்பமும், கைத்தொழில் தகவல் தொழில்நுட்பம்.

3. முகாமைத்துவம் பீடத்தில் தொழில் முனைவில் வணிக மேலாண்மை, முயற்சியாண்மையும் முகாமைத்துவமும் ,மனிதவள மேம்பாட்டு முகாமைத்துவம், விருந்தோம்பல் சுற்றுலா மற்றும் நிகழ்ச்சிகள் முகாமைத்துவம்

4. தொழில்நுட்ப ஆய்வுகள் பீடத்தில் பொறியியல் தொழில்நுட்பம், உயிர் முறைமைகள் தொழில்நுட்பம், தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பம் ஆகிய பட்டப் பயில் நெறிகளை தன்னகத்தே கொண்டுள்ளது.

இப்பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர ஆவார். பதிவாளராக ஹிபதுல் கரீம் கடமையாற்றுகிறார். 17 பேராசிரியர்கள், 100க்கு மேற்பட்ட சிரேஷ்ட விரிவுரையாளர்கள், 90க்கு மேற்பட்ட விரிவுரையாளர்கள், 200க்கு மேற்பட்ட நிர்வாகம் சார் ஊழியர்கள் உள்ளனர்.

ஊவா வெல்லெஸ்ஸ பல்கலைக்கழகம் சர்வதேச ரீதியிலும் தேசிய ரீதியிலும் பல வெற்றிச் சான்றிதழ்களையும் பரிசில்களையும் பெற்றுள்ளது. புதிய கண்டுபிடிப்புகளை நோக்கிய ஆய்வுரீதியான புத்தகங்களையும் இதழ்களையும் வெளியிட்டுள்ளது. பல்கலைக்கழக மாணவர்கள் விளையாட்டுத் துறையில் வெற்றிக் கிரீடங்களை பெற்றுள்ளனர்.

தற்கால கல்வித்துறையின் தேவைகளுக்கு அமைவாக நவீன நூல்களை தன்னகத்தே கொண்டு நவீன தொழில்நுட்ப இயந்திரங்களின் உதவியுடன் வெற்றிகரமாக செயற்பட்டுவரும் நூலகம் சிறப்பாக இயங்குகின்றது.

ஊவா வெல்லெஸ்ஸ பல்கலைக்கழகமானது வெளிவாரி கற்கை நெறிகளையும் முதுகலைமாணி கற்கை நெறிகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. விரைவில் மருத்துவபீடமும் இப்பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

**எம்.ஏ.அமீனுல்லா...**

# மருதமுனையின் மூத்த கல்வி ஆளுமை ஓய்வுநிலை அதிபர் பீர்முஹம்மத்



**மருதமுனையின் கல்விப் பின்புலத்தின் மூத்த கல்வி ஆளுமையாக ஓய்வுநிலை அதிபரும், அகில இலங்கை சமாதான நீதவானுமான எஸ்.எம்.பீர்முஹம்மத் விளங்குகின்றார். மருதமுனையின் கல்வி முன்னெற்றத்தில் அவர் அர்ப்பணிப்போடு பங்காற்றியவர். எல்லோருடனும் நட்பைப் பேணிவருபவர்; ஆற்றலும், ஆளுமையும் உள்ளவர். மாணவர்களுக்கு வழிகாட்டுவதில் சிறந்த வழிகாட்டி.**

கல்வித்துறையிலும், சமூக சேவையிலும், விளையாட்டுத்துறையிலும், சாரணீயத் துறையிலும், சமூக, சமய மேம்பாட்டிலும் ஆழமாகத் தடம் பதித்து இன்றுவரை பயணித்துக் கொண்டிருப்பவர். ஆசிரியராக, அதிபராக, பள்ளிவாசல் தலைவராக, செயலாளராக, கிராம அபிவிருத்திச் சங்கம், கிராமோதய சபை ஆகியவற்றின் தலைவராக பணியாற்றிய அவர் நீதிமன்றங்களின் ஜூரி சேவையிலும் தடம்பதித்தவர்.

இவர் மருதமுனையைச் சேர்ந்த சீனிமுஹம்மது மரைக்கார், றுக்கையா உம்மா தம்பதிக்கு 1947ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27ஆம் திகதி மருதமுனையில் பிறந்தவர்.பேராதனை பல்கலைக்கழகத்தில் பொதுக் கலைத் துறைப் பட்டம் பெற்றவர். அத்துடன் ஆசிரியப் பயிற்சியும் அதனோடிணைந்த விளையாட்டுத் துறைப் பாட நெறியையும் நிறைவு செய்தவர்.

அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சிபெற்றவர், அதைத்தொடர்ந்து 1996ஆம் ஆண்டு மஹறகம தேசிய கல்வி நிறுவகத்தில் பாடசாலை முகாமைத்துவத்தில் டிப்ளோமா பட்டம் பெற்றார். அதன் பின்னர் 1995ஆம் ஆண்டு பாடசாலை அதிபர்களுக்கான வதிவிடப் பயிற்சியை நிறைவு செய்தவர்.

இவர் 1968 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதலாம் திகதி ஆசிரியர் நியமனம் பெற்று கல்முனை கல்வி வலயத்தில் நற்பிட்டிமுனை அல் அக்ஷா மகாவித்தியாலயத்தில் கடமையேற்றார். மருதமுனை அல்ஹிறா வித்தியாலயம், பாண்டிருப்பு அல்மினன் வித்தியாலயம், மருதமுனை அல் மனார் மத்திய கல்லூரி தேசிய பாடசாலை, கல்முனைக்குடி அல்அஸ்ஹர் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கடமையாற்றியுள்ளார்.

பின்னர் அநுராதபுரம் மாவட்டத்தில் அழகப்பெருமாகம முஸ்லிம் வித்தியாலயம், ஈத்தல் வெட்டுனுவெள முஸ்லிம் வித்தியாலயம், பமுனுகம முஸ்லிம் மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கற்பித்த நிலையில் பிரத்தியேக கற்பித்தல் சேவையை கல்முனை ஸாஹிறாக் கல்லூரியில் மேற்கொண்டார். இக்காலப் பகுதியில் கல்முனை கொத்தணிப் பாடசாலைகள் இணைப்பாளர் சேவையையும் செய்து வந்தார். 1989 ஆண்டு அதிபர் நியமனம் பெற்று பாண்டிருப்பு அல்மினன் வித்தியாலயத்தில் கடமையாற்றி, இறுதியாக ஆசிரியர் நியமனம் பெற்ற பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றிய நிலையில் 1997ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதி 29 வருட கல்விச் சேவையில் இருந்து ஓய்வு பெற்றார்.

**பி.எம்.எம்.ஏ.காதர்...**
(மருதமுனை தினகரன் நிருபர்)

இந்தோனேஷியாவில் நடைபெறும்

# பாராளுமன்ற சங்க ஒன்றியத்தின் 144வது அமர்வில் இலங்கை எம்.பிக்கள் பங்கேற்பு







*இந்தோனேஷியாவின் பாளி நகரில் நடைபெற்றுவரும் பாராளுமன்ற சங்க ஒன்றியத்தின் 144ஆவது அமர்வில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தும் முகமாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன வெகுசனஊடக அமைச்சர் டலஸ் அழகப்பெரும பாராளுமன்ற உறுப்பினர்களான காவிந்த ஜயவர்தன, சாணக்கியன் இராசமாணிக்கம், ராஜிக்கா விக்கிரமசிங்க மற்றும் பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.*

*கடந்த 20 முதல் இன்று 25 ஆம் திகதி வரை நடைபெறும் இந்த அமர்வில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன மாநாட்டின் பிரதான உரையை நிகழ்த்தினார்.*

## டெங்கு நோயாளர்கள்...

டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ள அதேவேளை யாழ்ப்பாண மாவட்டத்திலும் அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

## ரயில் கட்டணங்கள்...

'சில ரயில் போக்குவரத்துக்கான கட்டணங்கள் 60 சத வீதத்தாலும், சில ரயில் போக்குவரத்து கட்டணம் 50 சத வீதத்தாலும் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் சுமேத சோமரத்ன மேலும் குறிப்பிட்டார். மலையகம் மற்றும் வடக்கு நகரங்களுக்கு இடையிலான ரயில் மார்க்கங்களின் ஆசன முன்பதிவு கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. அதற்கமைய நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் இந்தக் கட்டண அதிகரிப்பு அமுலுக்கு வந்துள்ளதாக ரயில்வே திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

## வாகன இறக்குமதிக்கு...

அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களுக்கு, வாகனங்களை டொலர்களில் திருப்பி அனுப்புவதற்கு அனுமதி வழங்குவது தொடர்பில் தாம் முன்வைத்த முன்மொழிவை பரிசீலிக்க முடியுமா என டொலவத்த கேள்வி எழுப்பியுள்ளார். இது அதிகரித்து வரும் வாகனங்களின் விலையைக் குறைக்கவும், டொலரில் வரி செலுத்துவதால் அரசுக்கு டொலரை வழங்கவும் உதவும் என்றார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர், டொலர் நெருக்கடி தீர்ந்த பின்னரே வாகனங்கள் மற்றும் அத்தியாவசியமற்ற பொருட்களை இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படும் என்றார்.

## நாட்டில் உணவுப் பாதுகாப்பு...

மேற்கொண்டு வருவதாகவும் அமைச்சர் சபையில் தெரிவித்தார்.

அதேவேளை, எதிர்வரும் புதுவருட பண்டிகைக் காலங்களில் அரசாங்கத்தின் கைவசமுள்ள அரிசியை சந்தைக்கு விடுவித்து மக்களுக்கு குறைந்த விலையில் அரிசியைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## கண்டியில் பாரிய தீ விபத்து;...

தல்துவ தெரிவித்துள்ளார்.

தீப்பரவல் காரணமாக 04 வீடுகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை, மகள் மற்றும் மற்றொரு இளைஞன் ஆகியோர் உயிரிழந்ததுடன், தாய் காயமடைந்த நிலையில் கண்டி போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

தீப்பரவல் ஏற்பட்டமைக்கான காரணம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கட்டுகஸ்தோட்டை, மெனிக்கும்புர பிரதேசத்தில் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாக பிந்திக் கிடைத்த செய்திகளின்படி தந்தை, மகள் மற்றும் அவரது காதலன் ஆகியோர் வீடொன்றினுள் எரித்துக் கொல்லப்பட்டுள்ளதாக கட்டுகஸ்தோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த மகளின் காதலன் என கூறப்படும் நபரே இந்த தீ வைப்பை மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

தீ விபத்தில் உயிரிழந்த ஈஸ்வரதேவன் என்பவர் கட்டுகஸ்தோட்டை ரணவன வீதியில் வெற்றிலை வியாபாரம் செய்து வந்துள்ளார். பலத்த தீக்காயங்களுக்குள்ளானவர் சிகிச்சைக்காக கண்டி தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், அவர் எரிகாயங்களுடன் மரணித்த மகளின் தாய் என அடையாளம் காணப்பட்டுள்ளார். ஒரு சிறிய தகரக்கொட்டில் வீட்டில் அந்தக் குடும்பம் வசித்து வந்ததுள்ளது. கட்டுகஸ்தோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஜனாதிபதி TNA...

(வெள்ளிக்கிழமை) இடம்பெறவுள்ளது. இந்த சந்திப்பில், செல்வம் அடைக்கலநாதன் தலைமையிலான டெலோ எனப்படும் தமிழீழ விடுதலை கழகம் தவிர்ந்த தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஏனைய பங்காளிக் கட்சிகள் கலந்துகொள்ளவுள்ளன. இதன்போது தமிழ் மக்களுடைய அரசியல் தீர்வு குறித்தே அதிக அவதானம் செலுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## சஜித் அணியிலிருந்து...

காணாமல் எதிர்க்கட்சித் தலைவர் பதவியையாவது பாதுகாத்துக்கொள்ளப்பாருங்களென அமைச்சர் அளுத்கமகே சபையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவைப் பார்த்து தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச விசேட கூற்றொன்றை முன்வைத்து, நாட்டில் உணவுப்பாதுகாப்பு, வலுசக்தி பாதுகாப்பின் உறுதியற்ற தன்மை தொடர்பில் கேள்வி ஒன்றை எழுப்பினார்.

அதற்கு அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே பதிலளித்தார். அதன் போது அவர், அரசாங்கத்தின் வேலைத்திட்டத்துக்கு ஆதரவளிக்க எதிர்க்கட்சி உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா எம்முடன் இணைந்துகொள்வாரென்றார். அதற்கு ஹர்ஷ டி சில்வா எம்.பி பதிலளிக்கையில், நான் மாத்திரமல்ல, நாங்கள் அனைவருமே ஆளும் தரப்பில் விரைவில் அமர்வோம் என தெரிவித்தபோதே அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே குறுக்கிட்டு இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கம் அமைப்பதற்கு முன்னர் சஜித் பிரேமதாச எதிர்க்கட்சித் தலைவர் பதவியை பாதுகாத்துக்கொள்ள வேண்டும். ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் 10 பேர் ஐக்கிய தேசியக் கட்சிக்கு செல்வதற்காக. ரணில் விக்ரமசிங்கவுடன் கலந்துரையாடி வருகின்றனர். அவர்களில் எட்டுப் பேர் இன்னும் இரண்டு வாரங்களில் ரணிலுடன் சேர்ந்துகொள்ள உள்ளார்கள். அவர்களுடைய பெயரை வேண்டுமானாலும் நான் சொல்வதற்கு தயார் என்றார்.

## சொத்தி உபாலியின்...

சந்தேக நபர்களில், ஒருவர் பல வருடங்களுக்கு முன்னர் உயிரிழந்த பிரபல குற்றவாளியான 'சொத்தி உபாலி'யின் மகன் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் 27 மற்றும் 29 வயதுடைய கொழும்பு 8 ஐ வசிப்பிடமாகக் கொண்டவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

முச்சக்கர வண்டியில் வந்த 5 பேர் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இருந்த ஊழியர்களை தாக்கி மிரட்டி அந்த வளாகத்தில் இருந்த பணத்தை கொள்ளையடித்துவிட்டு அங்கிருந்து தப்பியோடிவிட்டனர். நாவல பகுதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வெள்ளிக்கிழமை (18) இரவு இச்சம்பவம் இடம்பெற்றது.

## முல்லைத்தீவு, மன்னார் மீனவருக்கு...

உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனிடம் இராஜாங்க அமைச்சர் நேற்று பாராளுமன்றத்தில் இவ்வாறு உறுதியளித்தார். மண்ணெண்ணெய் கிடைக்காத மீனவர்களுக்கு அவர்களது இறங்குதுறைகளுக்கே அதனைப் பெற்றுக் கொடுக்க வழிவகை செய்யப்படுமென்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று பெறுமதி சேர் வரி திருத்த சட்டமூலம் தொடர்பான விவாதத்தில் உரையாற்றிய தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்.பி செல்வம் அடைக்கலநாதன்,வடக்கில் பல்வேறு பிரதேசங்களிலும் மீனவர்கள் மண்ணெண்ணெய் கிடைக்காமல் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக குறிப்பிட்டார். அதற்குப் பதிலளித்த இராஜாங்க அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர,

வடக்கில் எரிபொருள் விநியோகத்தை அரசாங்கம் மேற்கொண்டுள்ள போதும் மண்ணெண்ணெய் விநியோகம் மற்றும் விற்பனை நடவடிக்கைகளை தனியாரே செய்து வருகின்றனர்.

எவ்வாறாயினும் நாம் சம்பந்தப்பட்ட எரிபொருள் நிலையங்களுக்கு மீனவர்களின் விபரங்கள் கொண்ட பட்டியலை அனுப்பியுள்ளோம்.

அவ்வாறு மன்னார், முல்லைத்தீவு பிரதேசங்களிலுள்ள மீனவர்களுக்கு மண்ணெண்ணெய் கிடைக்காவிட்டால் அந்த மீனவர்களின் இறங்குதுறைகளுக்கே மண்ணெண்ணெய்யை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.(ஸ)

## தஞ்சம் தேடி வரும்...

பதிவு செய்து கைது செய்வது கொடுமையென சீமான் கூறியுள்ளார்.

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார வீழ்ச்சியின் விளைவினால் அத்தியாவசியப் பொருட்களின் விலை பன்மடங்கு உயர்ந்து, அந்நாட்டுக் குடிமக்கள் அன்றாடச் செலவினங்களைக்கூட எதிர்கொள்ள முடியாது, வறுமைக்கும், ஏழ்மைக்கும் உள்ளாகி, தவித்து வருவதாக வெளிவந்துள்ள செய்திகள் கவலை அளிக்கின்றன. இத்தகைய நிலையில், தமிழகத்தில் தஞ்சம்கேட்டு, கடல்வழியாக, படகுகளின் மூலம் அடைக்கலம் தேடிவரும் ஈழச்சொந்தங்களை வழக்குகள் பதிவு செய்து கைது செய்வது மேலும் துன்பத்திற்குள்ளாக்குவது கொடுமை. அதிலும் பெற்றோர்களையும் குழந்தைகளையும் பிரித்து சிறையிலும் முகாம்களிலும் அடைப்பது கடும் கண்டனத்திற்குரியது. அனைத்தையும் இழந்து வரும் நம்மக்களை ஆரத் தழுவி அரவணைத்து, திபெத்திய ஏதிலிகளுக்கு இந்நாடு வழங்கியிருக்கிற சலுகைகளையும், வசதிகளையும் போல, நம் சொந்தங்களுக்கும் செய்து கொடுத்து, அவர்களைக் காக்க முன்வர வேண்டுமென்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

## ஒரு மில்லியன் Gas சிலிண்டர்கள்...

நேற்று முன்தினம் (23) நாட்டை வந்தடைந்த கப்பலிலிருந்து எரிவாயுவை இறக்கும் நடவடிக்கை நிறைவடைந்துள்ளதாகவும் அந்த எரிவாயு தொகையை சந்தைக்கு விநியோகிக்கும் நடவடிக்கையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எரிவாயுவிற்கான நெருக்கடி நிலையை முடிவுக்கு வர இன்னும் ஒரு வாரம் செல்லும் என லிற்றோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.

## தமிழகம் வரும் இலங்கை...

இலங்கைத் தமிழர்கள் அண்மையில் தமிழகத்துக்கு வரும் செய்தியை தாமும் பார்த்துள்ளதாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார். இது குறித்து நேற்றுமுன்தினம் அதிகாரிகளை அழைத்து கலந்துரையாடியதுடன், மத்திய அரசின் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளைத் தொடர்புகொண்டு இதனை எவ்வாறு கையாள வேண்டும் என்ற சட்டரீதியான கலந்துரையாடல் இடம்பெறுகின்றது. விரைவில் இதற்கு ஒரு விடிவு காலத்தை தமிழக அரசு ஏற்படுத்தித் தரும் என மாநில முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இருந்து இந்தியாவிற்கு தஞ்சம் கோரி சென்ற 16 பேர், தமது தாய் நாட்டில் நிலவும் கடும் பொருளாதார நெருக்கடி காரணமாக, புகலிடம் கோரி இடம்பெயர்ந்ததாக தெரிவித்தனர்.

## அதிக விலையில்...

முன்னெடுத்தனர். நுவரெலியா ஹற்றன் பிரதான வீதியை மறித்து அவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். கொட்டகலை நகரில் உள்ள லிற்றோ எரிவாயு வர்த்தக நிலையமொன்றினால் நேற்றைய தினம் மக்களுக்கு எரிவாயு கொள்கலன் விநியோகிக்கப்பட்டுள்ளது. எனினும், 4,200 ரூபா என்ற அடிப்படையில் அதிக விலைக்கு கொள்கலன் ஒன்று விற்பனை செய்யப்பட்டதையடுத்து, அங்கு அமைதியின்மை ஏற்பட்டது.

அதனை தொடர்ந்து கொட்டகலை நகரில் மக்கள், வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சம்பவ இடத்திற்கு பொலிஸார் வரவழைக்கப்பட்டதுடன், பின்னர் கொட்டகலை வர்த்தக சங்கத்தின் தலையீட்டில் அந்த லிற்றோ எரிவாயு கொள்கலன்களை உரிய விலைக்கு விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

## பிரதேச சபை உறுப்பினர்...

போராட்டக்கள மைதானத்தில் பிச்சை எடுக்கும் நூதனப் போராட்டமொன்றினையும் மேற்கொண்டிருந்தார்.

ஆட்சியாளர்களின் தவறான நிருவாகத்தினால், நாடு அதளபாதாளத்திற்கு சென்றுள்ளது.

அத்தியாவசியப் பொருட்களின் விலையுயர்வு மற்றும் தட்டுப்பாடு, எரிபொருள் உள்ளிட்ட எரிவாயு ஆகியனவற்றைப் பெற மக்கள் நீண்ட வரிசைகளில் காத்திருக்க வேண்டிய நிலை ஆகியவற்றினால் மக்கள் சொல்லெண்ணாத் துயரங்களை எதிர்கொண்டுள்ளனர்.

நாடு அனைத்துத் துறைகளிலும் வங்குரோத்து நிலையினை அடைந்துவிட்டது. இவ் அவல நிலையினை ஏற்படுத்திய ராஜபக்ஷக்களின் கூட்டத்தினரையும், ஆட்சியாளர்களையும் கண்டித்தும் மேற்படி மொட்டையடிப்பு போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

சுமார் இரு மணித்தியாலங்கள் நீடித்த இந்த மொட்டையடிப்புப் போராட்டத்தையடுத்து, பசறை பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்ற பசறை பிரதேச சபையின் மாதாந்த அமர்விலும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பிரதேச சபை உறுப்பினர் கலந்து கொண்டு, நாட்டில் பொதுமக்கள் எதிர்நோக்கும் அனைத்து பிரச்சினைகள் குறித்த பிரேரணையை முன்வைத்து ஆட்சியாளர்களைக் கண்டிக்கும் கண்டனப் பிரேரணையொன்றையும் முன்வைத்து உரையாற்றினார்.

## புலம்பெயர் தமிழர்களுடன்...

இந்த சந்திப்பு ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் இடம்பெற்றிருந்தது.

நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற சர்வகட்சி மாநாட்டில் முன்வைக்கப்பட்ட விடயங்கள், அதன் முன்னேற்றம் மற்றும் வெள்ளிக்கிழமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நடைபெறவுள்ள கலந்துரையாடல் தொடர்பில் ஜனாதிபதி, விக்டோரியா நுலாந்திடம் விளக்கமளித்தார்.

இதன்போது கருத்து வெளியிட்ட இராஜாங்கச் செயலாளர் விக்டோரியா நுலாண்ட், கனடா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் உள்ள புலம்பெயர் மக்களுடன் பேச்சுக்களை நடத்துவதன் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டினார்.

அமெரிக்காவில் உள்ள பசுமைத் தொழில்நுட்பத்தை இலங்கைக்கு அறிமுகப்படுத்தவும் இணையம் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறைகளின் வளர்ச்சிக்கு ஆதரவளிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

நாட்டில் கல்வி வசதிகள் தொடர்பில் கவனம் செலுத்திய உதவிச் செயலாளர், தனியார் துறையினரின் பங்களிப்புடன் உயர்கல்வி வாய்ப்புகளை விரிவுபடுத்த முடியும் என சுட்டிக்காட்டினார்.

இந்த சந்திப்பின் போது கருத்து வெளியிட்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, புலம்பெயர் தமிழர்களுடன் கலந்துரையாடல்களை நடத்த ஆர்வமாக உள்ளதாகவும், வடமாகாணத்தின் அபிவிருத்தியில் முதலீடு செய்யுமாறும் அவர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

நாட்டின் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில் சர்வதேச நாணய நிதியத்திடம் செல்ல தீர்மானித்துள்ளதாகவும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

## ஆயுத போராட்ட மனோ நிலையை...

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

1987இல் இந்திய இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட வேளையில் ஏற்பட்ட மக்கள் எதிர்ப்பை தங்களது அரசியல் நோக்கத்தை வெற்றி கொள்வதற்காக பயன்படுத்திய மக்கள் விடுதலை முன்னணி அன்று தேசபிரேமி மக்கள் இயக்கமாக ஆஜராகி இருந்தது.

நாட்டில் பொது மக்களின் சொத்துக்களை அழித்து, எதிரான கொள்கைகளைக் கொண்ட அரசியல்வாதிகள், கலைஞர்கள், ஊடகவியலாளர்களை மாத்திரமல்லாது தேரர்களைக் கூட கொலை செய்து 60,000க்கும் அதிகமான இளைஞர்களை இல்லாமல் செய்த அக்காலப் பகுதி இன்றும் மக்களுக்கு ஞாபகம் உள்ளது .

நேற்று முன்தினம் நுகேகொடயில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றிய மக்கள் விடுதலை முன்னணி தலைவர் அநுரகுமார திசாநாயக்க, அரசியலமைப்பு மற்றும் சட்டத் திட்டங்களை நூலகத்தில் கல்விக்காக உபயோகப்படுத்தும் புத்தகமாக மாற்றவேண்டுமென கூறினார். அத்துடன் பொது மக்கள் இயக்கத்தின் ஊடாக தற்போதுள்ள அரசை கவிழ்த்து அரச அதிகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு அணிதிரளுமாறு அவர் அங்கு தனது ஆதரவாளர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

இது 1971 புரட்சிக்கு அண்மித்த சமயத்தில் கொழும்பு ஹைட் பார்க்கில் நடைபெற்ற கூட்டத்தில் அன்றைய மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் ரோகன விஜேவீர தெரிவித்த கூற்றுக்கு சமமான கூற்றாகும்.

இதுவரை காலமும் நாம் ஆட்சியாளர்களை தெரிவு செய்ததும், விரட்டியதும் அகிம்சையான இறையாண்மை சக்தியான, வாக்குகளை அளித்தலின் மூலமாகும். ஆனால் தற்போதுள்ள அரசை மக்கள் இயக்கத்தின் ஊடாக தேர்தலுக்கு முன்னர் கவிழ்ப்பதற்கு தயாராகுமாறு அவர் பகிரங்கமாக தெரிவித்துள்ளார்.

இந்த மக்கள் இயக்கம் எனப்படுவது என்ன? இரண்டு முறை தோல்வியடைந்த ஆயுதப்போராட்டத்தின் மூன்றாவது சுற்றா?

இரண்டு முறை தோல்வியடைந்த பாஸிசவாத, பயங்கரவாத நடவடிக்கைகளை பின்பற்றுவதற்கு ஜாதிக ஜனபல வேகய என்னும் பெயரில் ஆஜராகி மக்கள் விடுதலை முன்னணி செயல்படுமானால் அந்த முயற்சியை தோல்வியடையச் செய்வதற்கு அனைத்து ஜனநாயக அணிகளும் நிபந்தனையின்றி இணைய வேண்டும் என்பது தேசப்பற்று ஐக்கிய தேசியக் கட்சியின் கருத்தாகுமென கட்சியின் பொதுச் செயலாளர் சுகத் ஹேவா பத்திரன தெரிவித்துள்ளார்.

## புலம்பெயர் தமிழர் குறித்து... (03ஆம் பக்கத் தொடர்)

*பெறுமதி சேர் வரி திருத்த சட்டமூலம் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.*

*சபையில் அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,*

*மூன்று தமிழ் பேசும் நீதிபதிகளுக்கான தேவை உள்ளது. எனினும் அண்மையில் மேல் நீதிமன்ற நீதிபதிகளாக நியமிக்கப்பட்ட 13 பேரும் சிங்களவர்களாகவே உள்ளனர்.*

*நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு இதற்கு முன்பு நாட்டை ஆட்சி செய்த ஆட்சியாளர்கள் முழுமையாக பொறுப்புக்கூற வேண்டும். தமிழ்மக்களை அடக்கி ஆட்சியைக் கொண்டு நடத்த நினைத்தவர்கள் தற்போது அதன் பிரதி பலன்களை அனுபவிக்க நேர்ந்துள்ளது.*

*தற்போதைய அரசாங்கத்தின் கொள்கைகளிலேயே தவறுகள் உள்ளன. 1983 ஆம் ஆண்டு ஏற்பட்ட இனக்கலவரத்தின் பின்னர் நாட்டுக்கு வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வருவதற்கு அனுமதி மறுக்கப்பட்டதாலேயே நாட்டின் பொருளாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டது.*

*தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காணாமை முக்கிய பங்காக அமைகின்றது.*

*புலம்பெயர் நாடுகளிலுள்ள எமது தமிழ் மக்கள் அங்கு மிகவும் பலமான நிலையில் வசிக்கின்றார்கள். நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் எவ்வாறு அவர்களை பயன்படுத்துவது என்பது தொடர்பில் அரசாங்கம் சிந்திக்க வேண்டும்.*

*தற்போதைய சூழலில் வெளிநாட்டிலிருந்து 10 இலட்சத்துக்கு மேல் பணம் அனுப்பப்பட்டால் அது ஏன் அனுப்பப்படுகின்றதென வங்கிகளினால் மேலதிக விபரங்கள் கேட்கப்படுகின்றன. இதனால் வங்கிகள் மூலம் பணம் அனுப்ப புலம்பெயர் தமிழர்கள் அச்சப்படுகின்றார்கள். இவ்வாறான நிலைமைகளும் டொலர் பற்றாக் குறைக்கு ஒரு காரணமாகும்.*

*ஏற்கனவே தமிழர்களுக்கு எதிராக செயற்பட்டதன் காரணமாகவே வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இங்கு வர அச்சப்பட்டார்கள். தற்போது வெளிநாடுகளிலுள்ள புலம்பெயர் தமிழர்களும் இங்கு முதலீடுகளை செய்யமுடியாதுள்ளதென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.*

## புதுவருடத்துக்கு முன் சகல...

ராஜபக்ஷவினால் விசேட திட்டமொன்று செயல்படுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி, பிரதமர் மற்றும் நிதி அமைச்சரின் தலைமையில் அமைச்சரவை அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களென இக்குழுவுக்கு 52 பேரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

நாடு முழுவதுமுள்ள அனைத்து பிரதேசங்களையும் இணைத்ததாக இந்தக் குழு பெயரிடப்பட்டுள்ளது. அனைத்து எரிவாயு மற்றும் எரிபொருள் இருப்பு தொடர்பாக ஆய்வு நடத்தி மக்களுக்கு போதுமானளவு பெற்றுக் கொடுக்கவும் மின் துண்டிப்பு தொடர்பாக ஆய்வு நடத்தி அது தொடர்பாக தீர்வைப் பெற்றுக் கொடுக்கவும் இதன் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

எரிபொருள் மற்றும் எரிவாயு பெற்றுக் கொடுப்பதிலுள்ள சிக்கலான நிலை மற்றும் பல்வேறு மாபியாக்களை நீக்கி மாவட்ட மட்டத்தில் மக்களுக்கு தேவையான எரிபொருள் மற்றும் எரிவாயுவை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுவதன் மூலம் எதிர்வரும் தமிழ், சிங்கள புது வருடத்துக்கு முன்னர் எரிவாயு மற்றும் எண்ணெய்க்கான வரிசையை முடிவுக்குக் கொண்டு வந்து மக்களுக்கு நிம்மதியை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாகவும் அமைச்சர் இங்கு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே,

நாம் புது வருடத்துக்கு முன்னர் எரிபொருள் பிரச்சினையை தீர்ப்போம். நுகர்வோர் இன்று, தேவைக்கு அதிகமாக கொள்வனவு செய்வது பிரச்சினைக்கு காரணமாக உள்ளது. தற்போது எரிபொருள் தட்டுப்பாடானது வியாபாரமாக மாறி உள்ளது.

எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்குச் சென்றால் 3,500 ரூபாவுக்கு கேன்களில் எரிபொருளை வாங்கிச் சென்று 5,000 ரூபாவுக்கு விற்று விடுகின்றனர். முன்னர் நாள் ஒன்றுக்கு ஐயாயிரம் மெற்றிக் தொன் விற்பனை செய்யப்பட்டது. ஆனால் இன்று நாளொன்றுக்கு 7,000 மெற்றிக் தொன்னிலிருந்து 8,000 மெற்றிக் தொன் வரை விற்பனையாகிறது.

இதுவே எரிபொருளுக்கான தட்டுப்பாட்டுக்கு காரணம்.

தற்போது எரிபொருளுக்கான வரிசை குறைந்துள்ளது. எதிர்காலத்தில் அது மேலும் குறைய வாய்ப்புள்ளது. எரிவாயு கியூ, பெற்றோல் கியூ, மின்சாரத் துண்டிப்பு மற்றும் பொருட்களின் விலை அதிகரிப்பு தொடர்பாக மக்கள் அதிக கவனம் செலுத்தி வருகின்றனர்.

இம்மாத இறுதிக்குள் எரிவாயு பிரச்சினையை முற்றாக தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும்.

ஒரு எரிவாயு கப்பலால் 5,000 மில்லியன் ரூபா நட்டம் ஏற்படுகின்றது.ஆனால் அந்த நட்டத்தை கருதாது மக்களுக்கு தேவையான எரிபொருளை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

## சூப்பர் பவர் குண்டுகளை... (03ஆம் பக்கத் தொடர்)

*கடும் போராட்டம் நடத்தி வருகிறது. துறைமுக நகரான மரியுபோல் மீது ரஷ்ய போர் கப்பல்கள் கடந்த 3 வாரங்களாக தொடர் தாக்குதலை நடத்தி வரும் நிலையில், சூப்பர் பவர் வெடிகுண்டுகளை வீசி தாக்குதல் நடத்தி வருவதாக அமெரிக்க பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.*

*மேலும் ரஷ்யாவின் போர் விமானங்கள் அலை அலையாக பறந்து சென்று வெடிகுண்டுகளை வீசி தாக்குதல் நடத்தி வருகிறது.*

*கடந்த 5 நாட்களில் 5 நிமிடத்துக்கு ஒருமுறை ரஷ்ய போர் விமானங்கள் மரியுபோல் நகர் மீது பறந்து சென்று குண்டுகளை வீசியுள்ளது.*

## அத்துமீறி மீன்பிடித்த 16... (03ஆம் பக்கத் தொடர்)

*நீரியல் வளத்துறை திணைக்களத்தினரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.*

*இதேபோல இரணைத்தீவு அருகே அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 12 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன் முழங்காவில் கடற்படை முகாமிற்கு அழைத்து வந்து கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை திணைக்களத்தினரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.*

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

# ஏல விற்பனை அறிவித்தல்

## இலங்கை வங்கி

**1968ஆம் ஆண்டு 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டு 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் 22ஆம் பிரிவின் கீழ் (397ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்**

1. **கடன் தொடர்பு இலக்கங்கள்: 75441600 மற்றும் 77841716**

ஹிதியமுல்ல சந்தி, ஹெட்டிபொல வீதி, குளியாப்பிட்டிய எனும் முகவரியில் அமைந்துள்ள பிலிப்லீ குளோபல் கம்பனியின் ஈட்டு ஆதனத்தின் விற்பனை. இல. 58/7 முத்துராஜ மாவத்தை (ஹெந்தல ஒழுங்கை) மாபோல, வத்தளை, எனும் முகவரியைச் சேர்ந்த திரு. ரத்துகமகே பிலிப் ஜயசிறி பெர்னாண்டோ மற்றும் திருமதி ஷெங்யன் லி ஆகியோர் இதன் பணிப்பாளர்களாவர்.

2. இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் 19ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய 2019.11.08ஆம் திகதி வெளியிடப்பட்ட இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 2149ஆம் இலக்க வர்த்தமானியிலும் **2019.10.28ஆம் திகதி டெய்லி நியூஸ். தினமின மற்றும் தினகரன்** ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவையிலுள்ள முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் 26ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகளையும் பணங்களையும் அறவிடும் பொருட்டு கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனத்தையும் கட்டடங்களையும் **இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ** என்னும் முகரியைச் சேர்நத **T&H ஒக்ஷன், ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்ன அவர்கள் 11.05.2022ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு** அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட அட்டவணை**

வடமேல் மாகாணம் குருநாகல் மாவட்டம் கட்டுகம்பொர ஹத்பற்று யட்டிகஹ கோரளை (வடக்கு) பண்டுகஸ்நுவர பிரதேச செயலகப்பிரிவில் படுவஸ்நுவர பிரதேச சபை எல்லைகளுள் ஹிதியமுல்ல கிராம உத்தியோகத்தர் பிரிவு இல. 1405இல் ஹிதியமுல்ல கிராமத்தில் அமைந்துள்ள **'கோங்கஹமுல பில்லேவ மற்றும் தலுபொத்தேஹேன தற்போது வத்த மீகஹமுலவத்த, அம்பகஹமுலவத்த மற்றும் லொலுகஹமுலவத்த'** என அழைக்கப்படும் ஒன்றிணைக்கபபட்ட காணிகளின் உரிமம் பெற்ற நில அளவையாளர் எச்.ஏ.எம்.சீ. பண்டார தயாரித்த 06.12.2011 திகதியிட்ட 5066ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள துண்டு 1 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை நிர்ணயிக்கப்பட்டதுமான காணித்துண்டு **வடக்கில்** தற்போது டப்ளியூ.எம்.ரீ.எம்.எல். பெர்ணான்டோ என்பவரால் உரிமை கோரப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் எச்.ஏ.எம்.சீ. பண்டார தயாரித்த 1994.07.24ஆம் திகதிய 1065ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள 01ஆம் இலக்கக் காணித்துண்டின் மிகுதிப் பகுதியையும் தற்போது ஆர்.டீ. திலகரத்ன என்பவரால் உரிமை கோரப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் டபிள்யு.ஏ. சிறிசேன தயாரித்த 2006.08.22ஆம் திகதிய 543ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள 02ஆம் இலக்கக் காணித்துண்டையும், **கிழக்கில்** தற்போது டபிள்யு.எம்.ரீ.எம்.எல். பெனாண்டோ என்பவரால் உரிமை கோரப்படும் 1065ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள 01ஆம் இலக்கக் காணித்துண்டையும் தற்போது ஆர்.டீ.ரத்நாயக்க என்பவரால் உரிமை கோரப்படும் 543ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 02ஆம் இலக்கக் காணித்துண்டையும் வீதியையும் (நெடுஞ்சாலை) 543ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள 05ஆம் இலக்கக் காணித்துண்டையும் தற்போது ஜீ.எம். சேனாரத்ன என்பவரால் உரிமை கோரப்படும் வை.எம்.ஏ. யாப்பா தயாரித்த 1993.04.05ஆந் திகதிய 3547ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள 03ஆம் இலக்க காணித்துண்டின மிகுதிப் பகுதியையும், **தெற்கில்** குறித்த 543ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள 05ஆம் இலக்க காணித்துண்டையும் தற்போது ஜீ.எம். சேனாரத்ன என்பவரால் உரிமைகோரப்படும் 3547ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள 03ஆம் இலக்கக் காணித்துண்டையும் ஜீ.பீ. ரத்நாயக்க மற்றும் பிறரால் உரிமை கோரப்படும நெல் வயலையும, **மேற்கில்** கே.ஏ.ஆர். ஜயசுமன என்பவரால் உரிமை கோரப்படும் 3547ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள 02, 04ஆம் இலக்கக் காணித்துண்டுகளையும் எல்லைகளாகக் கொனடுள்ளது. **ஒரு ஏக்கர் இரண்டு றூட் பதினேழு தசம் ஆறு பேர்ச்சுகள் (ஏ1.றூ2.பே17.6)** பரப்பளவையும் அதன்கண் காணப்படும் மரங்கள், பயிர்கள், கட்டடங்கள் என அனைத்தையும் கொனடுள்ள இக்காணி குளியாப்பிட்டிய காணிப்பதிவகத்தில் பக்கம் Q29/10இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி**

**திரு. R.M.S. ராஜபக்ஷ**
**பிரதான முகாமையாளர்.**

**இலங்கை வங்கி,**
**தனியார் கிளை.**

---

புதன்கிழமை www.nlb.lk NLB
திகதி 23.03.2022 உத்தியோகபூர்வ முடிவுகள்

**மஹஜன சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம் : 4715
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 14,214,750.00
ஆங்கில எழுத்து O
வெற்றி இலக்கங்கள் 1 0 3 4 5 2
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 12,653,860.00

**Mega POWER** மெகா பவர் கோடி 23+
சீட்டிழுப்பு இலக்கம் 1063
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,656,360.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 243,309,702.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து H
சுப்பர் இலக்கம் 14
வெற்றி இலக்கங்கள் 11 35 45 55

**தன நிதானய**
சீட்டிழுப்பு இலக்கம் : 745
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,540,120.00
ஆங்கில எழுத்து I
வெற்றி இலக்கங்கள் 01 37 46 68
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 103,776,928.00

**ஜாதிக சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம் : 1227
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,279,680.00
வெற்றி இலக்கினம் சிம்மம்
வெற்றி இலக்கங்கள் 2 7 3 6 2 3
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,718,858.80

தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416


The Housewives' companion
Classifieds on
Daily News



Repeat
Your
Ad
For
Better
Offers


# அட்டோணி தத்துவத்தை இரத்து செய்தல்

மதுற மிஹிறான் த சில்வா வீரசிங்ஹ தே.அ.அ.இல 882804933V, இல. 28 மிஹிலியா வீடமைப்புத் திட்டம், வில்லவ. கண்டி வீதி, குருநாகல் எனும் முகவரியில் வசிப்பவரும் அளுத்கம ஆசாரிகே வாசனா சஜானி (தே.அ.அ.இல. 877852601V) மேற்கூறப்பட்ட முகவரியில் வசிப்பவருமாகிய நாங்கள் இல 1003 கொண்டதும், 31.08.2018ம் திகதியிடப்பட்டதும் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு திருமதி உதயசாந்தினியால் சான்றளிக்கப்பட்ட மீளப் பெறமுடியாத அட்டோணி தத்துவத்தினை.

**மற்றும்**

மதுற மிஹிறான் த சில்வா வீரசிங்ஹ (தே.அ.அ. இல. 882804933V). அளுத்கம ஆசாரிகே வாசனா சஜானி (தே. அ. அ. இல: 877852601V) மற்றும் இல.24ம் கணு வீரஹிறி மஹா வஸ்கடுவ, வஸ்கடுவ எனும் முகவரியில் வசிக்கும் ஜாமுனி ஷிரியானி த சில்வா (தே.அ.அ.இல 567901882V) ஆகிய நாங்கள், 1282 கொண்டதும் 29.11.2018 தேதியிடப்பட்டதும் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு திருமதி கே. உதயசாந்தினி அவர்களால் சான்றளிக்கப்பட்ட மீளப்பெறமுடியாத அட்டோணித்தத்துவத்தினையும் இல. 61 டி.எஸ். சேனாநாயக மாவத்த கொழும்பு-08 இல் உள்ள பிரைம் பினான்ஸ் பிஎல்சியிற்கு வழங்கியிருந்தோம்.

இவ்விரு அட்டோணி தத்துவங்களையும் 14.03.2022 முதல் மீளப்பெற்று செயலற்றதாகவும் செய்கின்றோம் என்பதை இத்தால் அனைத்து இலங்கையர்களுக்கும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம். மேலும் அவற்றின் மூலம் எடுக்கப்படும் எந்தவொரு நடவடிக்கைக்கும் நாங்கள் பொறுப்பல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

# வீமங்சா தம்மகுப்த மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

குணதிலக ராஜபக்ஷ ஆகிய நான், இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் 53(1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் "வீமங்சா தம்மகுப்த மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்" எனப்படும் சட்டமூல மொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த நம்பிக்கைப்பொறுப்பைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும்.

(அ) லௌகீக மற்றும் இல்வாழ்க்கையில் சிறந்த பயனுறுதிமிக்கதொரு வாழ்க்கைத் தரத்தை கட்டியெழுப்பும் பொருட்டு ஆன்மிகம், கல்வி, சமூக கலாசார மற்றும் பொருளாதாரம் ஆகிய நான்கு சித்தாந்தங்களையும் பௌத்த வழிகாட்டல்களுக்கு அமைவாக விருத்தி செய்வதற்கு தேவையான பங்களிப்பினையும் ஒத்துழைப்பினையும் நல்குதல்.

(ஆ) பௌத்த மக்களை மூவித புண்ணிய கருமங்களில் ஈடுபடுத்துவதற்குத் தேவையான செயல் நுணுக்கங்களை நடைமுறைப்படுத்துதல்.

(இ) உள ஆரோக்கிய மேம்பாட்டு நிலையத்துடனான விடுமுறை இல்லமொன்றை முன்னெடுத்தல்.

**பிறவும்.**

**குணதிலக ராஜபக்ஷ**
**பாராளுமன்ற உறுப்பினர்**

# INVITATION FOR BIDS

## MUSALI PRADESHIYA SABHA, MANNAR DISTRICT

### *LOCAL DEVELOPMENT SUPPORT PROJECT (LDSP) PROJECT ID: P 163305*

[1]. The Democratic Socialist Republic of Sri Lanka has received a loan from the World Bank (WB) towards the cost of the Local Development Support Project (LDSP). Part of this loan will be used for payments under the contract named below.

[2]. The Chairman, Local Authority Procurement Committee (LAPC), on behalf of Musali Pradeshiya Sabha, Mannar District now invites sealed bids from eligible and qualified bidders for the works listed in the table below.

| S/ No. | Contract No. | Name of the Contract | Estimated Civil Cost (Rs. Mn.) | ICTAD Minimum Grade Required | Required Bid Security | | Contract Period |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Bond Amount (Rs.) | Validity Period up to | |
| 1. | MN/MUPS/ LDSP/2021/ W/01 | Construction of Primary Health Care Centre at Koolankulam | 7.68 | C7 | 77,000.00 | 02.08.2022 | 91 days |

[3]. Bidding will be conducted through National **Competitive Bidding (NCB) procedure.**

[4]. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have valid CIDA registration in Building Construction for the Grade mentioned in the table above and possess valid business or company registration.

[5]. Qualification requirements to qualify for contract award are given in Section 5 of the Schedule in the Bidding Document.

[6]. Interested bidders may obtain further information from **Chairman, Musali Pradeshiya Sabha, Chilawathurai, Mannar** [Telephone No: **0232051672** Fax No: **0232051672**] and inspect the bidding documents at the address: **Musali Pradeshiya Sabha, Chilawathurai, Mannar from 09.00 Hrs to 15.00 Hrs.**

[7]. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Chairman, Musali Pradeshiya Sabha, Chilawathurai, Mannar** from **25.03.2022 until 18.04.2022 from 09.00 Hrs to 15.00 Hrs.** upon payment of a non-refundable fee of **Four Thousand Rupees. (Rs. 4,000.00) for each work**. The method of payment will be **by cash.**

[8]. Bids shall be delivered in duplicate to the address: **Chairman, Local Authority Procurement Committee (LAPC), Musali Pradeshiya Sabha, Chilawathurai, Mannar** *on* **or before 19th April 2022** at **10.30 Hrs**. Late bids will be rejected. Bids will be opened at above place soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.

[9]. Bids shall be valid up to **05th July 2022**

[10]. All bids shall be accompanied by a "*Bid-Security*", as mentioned in the table above. Bid Security shall be valid up to the date mentioned in the table above, shall be same as in Schedule Clause 16.

[11]. Pre-bid meeting will be held on **07.04.2022** at **10.30 Hrs** at the **Musali Pradeshiya Sabha, Chilawathurai, Mannar**

The address (es) referred to above is (are):

**Chairman,**
**Local Authority Procurement Committee ( LAPC ).**
**Musali Pradeshiya Sabha,**
**Chilawathurai,**
**Mannar.**
**Tel/Fax No: 0232051672**

# இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே வழங்கப்பட்டுள்ள பொருட்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் கோருகின்றார்.

| கேள்வி இலக்கம் | கேள்வியின் பெயர் | விலைமனுப் பிணைத் தொகை (ரூபாவில்) | பெசேவ அடங்கலாக ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| **CES/FP/06/PT/6288(EL)** | **06 Nos. Encoder for the Elevator of STS Cranes at JCT** | 30,000 | 1,000.00 | 2022.04.21 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| **CES/FP/04/PT/6281(MP)** | **08 Nos. Rotary Actuators fitted to RAM Spreaders at JCT** | 75,000 | 1,000.00 | 2022.04.21 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான மொத்த ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படும். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும், எந்தவொரு விலைமனுதாரரும் முகவரொருவராக, உபமுகவராக, பிரதிநிதியொருவராக அல்லது எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளரின் அல்லது ஒரு வழங்குநராக பெயர் குறிப்பிடப்படுபவராக செயற்பட விரும்பின், பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் தம்மை பதிவு செய்து உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

3. விலைமனுதாரர்கள் நிகரான பண்டங்களை வழங்குவதில் ஆகக் குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.


4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல் மற்றும் பண்டங்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

5. 2022 மார்ச் 25 ஆம் திகதியிலிருந்து 4 ஆம் நிரலில் சுட்டிக்காட்டியுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.

6. விலைமனுக்கள் அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் நேரடியாகவே சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிட்டுள்ள விலைமனுப்பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பண்டங்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**

**தொலைபேசி இலக்கங்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இலக்கங்கள்: 2381652, 2470443**


BE BETTER INFORMED! News you can trust now free on your mobile phone.
Dinamina
Daily News
Thinakaran
AVAILABLE AT

Visit - apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!
LAKE HOUSE

# பிழை திருத்தம்

2022.03.10ம் திகதி தினமின, தினகரன், டெயிலி நியூஸ் ஆகிய மூன்று பத்திரிகைகளிலும் பிரசுரமான பெறுகை அறிவித்தலில் தொடர் இல. 08 இல் குறிப்பிடப்படும் விடயங்கள் கீழ்க்காணுமாறு திருத்தப்படுவதாக அறிவித்துக் கொள்கிறேன்.

**டபிள்யூ. மார்க் ஏ.எப். குணசேக்கர**
**தலைவர்**
**வத்தளை மாபோலை நகர சபை**

**வத்தளை மாபோலை நகர சபையில்**

| தொடர் இல | கடை அறை அமைந்துள்ள இடம் | மாதாந்த குறைந்த பட்ச கேள்வி ரூ. | கேள்வி வைப்புத் தொகை மீளளிக்கப் படும் ரூ. | கேள்விப் படிவக் கட்டணம் மீளளிக்கப் படாத | காலம் |
|---|---|---|---|---|---|
| 08. | மாபோலை வர்த்தக கட்டிடத் தொகுதி கோழியிறைச்சிக் கடை -03 | 36,000.00 (வருடாந்த மாதாந்த வாடகை 10% இனால் அதிகரிக்கும்) | 108,000.00 | 2,500.00 | 2022.04.01 - 2025.03.31 |

# போதனா வைத்தியசாலை - குளியாப்பிட்டிய

# வடிகான் தொகுதியை புதுப்பித்தல்களிற்காக விலைமனுக்கோரல்

# Improvements of Disposal System and Treatment Plant

01. குளியாப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் வடிகான் தொகுதியைப் புதுப்பிப்பதற்காக இவ் வைத்தியசாலையின் பெறுகைக்குழுவினால் தகைமையுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 2022.04.29 அன்று பி.ப. 2.00 வரை முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| தொடர் இலக்கம் | குறியீட்டு இலக்கம் | ஒப்பந்த விபரம் | ICTAD தரம் | மீளளிக்கப்படாத கட்டணம் ரூபா | விலைமனு பிணைத் தொகை | உத்தேச செலவினம் ரூபா மில். |
|---|---|---|---|---|---|---|
| 01 | THKUL/ ACC/FM09/ Cons/08/2022 | Improvements of Disposal system and Treastment Plant | C6 and above (Water supply & Sewerage/ Building Construction) | 3,000.00 | 200,000.00 | 11.1 |

02. தகைமை பெற்றுள்ள இதற்காக ஆர்வம் காட்டும் ஒப்பந்தக்காரர்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள விலைமனுப்படிவங்களை, மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கு நிகரான மீளளிக்கப்படாத கட்டணத்தை சிறாப்பருக்குக் காசாகச் செலுத்தி, 2022.03.25 முதல் 2022.04.28 வரை வார வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலப்பகுதியில் இவ்வைத்தியசாலையின் கணக்குப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.
03. சமர்ப்பிக்கப்படும் அனைத்து விலைமனுக்களுடனும், அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமானத்திற்கான, இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப் பெற்றுள்ள அங்கீகரிக்கப்பட்ட வணிக வங்கியொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட விலைமனுப் பிணையமொன்று கண்டிப்பாகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அது 2021.08.26ஆம் திகதி வரை செல்லுபடியாகுதல் வேண்டும் என்பதுடன் பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, குளியாப்பிட்டிய" என்ற பெயருக்கு வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.
04. உரியவாறு பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்கள், "மூலப் பிரதி", "நகல் பிரதி" எனக் குறிப்பிட்டு தனித்தனி உறைகளில் சேர்த்து அவற்றை முத்திரையிடப்பட்ட ஒருறையில் சேர்த்து, தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்தத்தின் பெயர் குறிப்பிடப்பட்டு, 2022.04.29 அன்று பி.ப. 2.00 இற்கு அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில், பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, குளியாப்பிட்டிய" என்ற பெயருக்கு அனுப்பப்படல் வேண்டுமென்பதுடன். நேரடியாக ஒப்படைப்பதானால், கணக்குப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.
05. இவ் அலுவலகத்தில், விலைமனுப்படிவங்களை இலவசமாகப் பரிசீலனை செய்துகொள்ளலாம்.
06. 2022.04.21 அன்று மு.ப. 11.00 இற்கு பணிப்பாளர் பணிமனையில் பெறுகை முன்னோடிக்கூட்டம் ஒன்று நடைபெறும்.
07. தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
08. 2022.04.29 அன்று பி.ப. 2.15 இற்கு இவ் வைத்தியசாலையின் அலுவலக கட்டிடத்தின் கேட்போர் கூடத்தில் விலைமனுத் திறத்தல் மேற்கொள்ளப்படுவதுடன், அவ் வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரின் அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.
09. இவ் விலைமனு தொடர்பான மேலதிக விபரங்களை, 037-2281261 நீடிப்பு 295/ 309 அல்லது 037-2284597 என்ற தொலைபேசி இலக்கங்களை அழைத்து குளியாப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் கணக்குப் பிரிவில் அறிந்துகொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**போதனா வைத்தியசாலை,**
**குளியாப்பிட்டிய,**
2022 மார்ச் 24

கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு

அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனம்

50th 1971 - 2021

# கேள்வி கோரல்

## போபிட்டி கிரிஉல்லயில் அமைந்துள்ள கூட்டுத்தாபனத்தின் கிரஷர் வேலைத் தளத்திலிருந்து ABC போக்குவரத்து செய்வதற்காக டிப்பர் வாகன உரிமையாளர்களைப் பதிவு செய்தல்

ABC போக்குவரத்துச் செய்வதற்காக டிப்பர் வாகனங்களைப் பெற்றுக்கொள்வதற்கு டிப்பர் உரிமையாளர்களைப் பதிவு செய்து கொள்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ABC போக்குவரத்து வேலைத் தளத்திலிருந்து 35 கி.மீ. முதல் 75 கி.மீ. வரையான இடங்களுக்குள் போக்குவரத்து செய்தல் வேண்டும்.

**விண்ணப்பதாரரினால் விண்ணப்பத்தில் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.**

01. விண்ணப்பதாரரின் பெயர் மற்றும் முகவரி:
02. தொலைபேசி இல. / தொலைநகல் இல. / மின்னஞ்சல் முகவரி:
03. வியாபாரப் பதிவிலக்கம் மற்றும் திகதி:
04. டிப்பர் வாகனங்களின் எண்ணிக்கை:
05. வழங்கக்கூடிய கடன் கால எல்லை மற்றும் தொகை:

மேற்குறிப்பிடப்பட்ட விடயங்களை தெளிவாகக் குறிப்பிட்டு உங்களால் தயாரித்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 2022-04-05ஆம் திகதி அல்லது அதற்கு முன் எமக்குக் கிடைக்கச் செய்யவும்.

பூர்த்திசெய்யப்பட்ட கேள்விப்படிவங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "ABC போக்குவரத்துச் செய்வதற்காக டிப்பர் வாகனங்களைப் பெற்றுக்கொள்ளல்" எனக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் தலைவர், கூட்டுத்தாபன பெறுகைக் குழு, அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனம், இல. 7, பொருபன வீதி, இரத்மலானை எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். அவ்வாறல்லாவிடில் வழங்கல் பிரிவு தலைவரின் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

தொலைநகல் இல. : **011-2638013**
மின்னஞ்சல் முகவரி: : **sm.suppliers@yahoo.com**
தொலைபேசி இல. : **0112-607560/0112-607566 / 0112-632146**

இது தொடர்பான மேலதிக விபரங்களை வழங்கல் பிரிவு தலைவரிடமிருந்து அல்லது போபிட்டிய கொங்கிறீட் முற்றவெளி, பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**பொது முகாமையாளர்,**
**அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனம்,**
**இல. 7, பொருபன வீதி,**
**இரத்மலானை.**

*'உட்கட்டமைப்பு வசதிகள் துறையின் முன்னோடிகள்'*

# பகிரங்க அறிவித்தல்

**பெரேரா அன்ட் சன்ஸ் (பேக்கர்ஸ்) (பிறைவட்) லிமிட்டட் (கம்பனி இல - PV4086)**
**மற்றும்**
**பெரேரா அன்ட் சன்ஸ் ரெஸ்டூரன்ட்ஸ் (பிறைவட்) லிமிட்டட் (கம்பனி இல PV 2984) ஐ ஒன்றிணைப்பு**

கம்பனி இல PV 4086 இன் கீழ் பதிவு செய்யப்பட்ட பெரேரா அன் சன்ஸ் (பேக்கர்ஸ்) (பிரைவட்) லிமிட்டட் மற்றும் கம்பனி பதிவு இல.2984 இன் கீழ் பதிவு செய்யப்பட்ட, பெரேரா அன்ட் சன்ஸ் ரெஸ்டூரன்ட்ஸ் (பிரைவட்) லிமிட்டட் சட்டத்தின் 242 பிரிவின் பிரகாரம் ஓர் தனி நிறுவனமாக ஒன்றிணைக்கப்படுவதாக (சட்டம்) 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242 (3) பிரிவின் விதிகளுக்கமைய இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

ஒன்றிணைக்கப்பட்ட கம்பனியின் பெயராக பெரேரா அன்ட் சன்ஸ் (பேக்கர்ஸ்) (பிரைவட்) லிமிட்டட் இருக்கும் அத்துடன் கம்பனிகள் பதிவாளர் நாயகத்தினால், அனுமதிக்கப்பட்ட குறித்த தினத்தில் கூட்டிணைப்பு அமுலுக்கு வரும் ஒன்றிணைக்கப்பட்ட கம்பனியான பெரேரா அன் சன்ஸ் (பேக்கர்ஸ்) (பிரைவட்) லிமிட்டட் இன் பதிவு அலுவலகம் இல - 122-124-MDH ஜயவர்தன மாவத்த, மாதின்னாகொட, இராஜகிரியவில் இருக்கும் பிரிவு 242 (4) இன் கீழான ஒருங்கிணைப்பை அங்கீகரித்த தீர்மானம் ஒன்றிணைப்பு முன்மொழிவாகக் கருதப்படும் அத்துடன் எந்த பங்குதாரர்கள் அல்லது ஒன்றிணைக்கப்பட்ட கம்பனியொன்றின் கடன் கொடத்தவர்கள் அல்லது ஓர் கடமையின் கீழான எந்த நபருக்கும், கொழும்பு -03, ரொட்டுன்டா கார்டன்ஸ், இல.12, செயலாளர்களின் பதிவு அலுவலகத்தில் பரிசீலனைக்காக காணப்படும்.

**சபையின் கட்டளைப் பிரகாரம்,**
**மனேஜ்மன்ட் எப்ளிகேசன்ஸ் (பிரைவட்) லிமிட்டட்**
**செயலாளர்கள்**
**இல.12, ரொட்டுன்டா கார்டன்ஸ்**
**கொழும்பு - 03**
**25 மார்ச் 2022**

# விலைமனுக்கோரல்
## வலயக் கல்வி அலுவலகம் - ஹொரன

ஹொரன வலயக் கல்வி அலுவலகத்தை சார்ந்த பாடசாலைகளுக்கான மரத்தளபாடங்கள் மற்றும் கணினிகள் மற்றும் பிற உபகரணங்கள் கொள்முதல் செய்வதற்காக **2022.04.20 ஆந் திகதி பி.ப.1.00 மணி** வரை முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.

**01. தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள்**

சிரார்களுக்கான மேசை/ சிரார்களுக்கான கதிரை/ நடுநிலை மேசை/ நடுநிலை கதிரை/குழந்தைகளுக்கான கதிரை/ குழந்தைகளுக்கான மேசை/ ஆசிரியர்களுக்கான கதிரை/ நிர்வாகிகளுக்கான கதிரை/ நூலகத்திற்கான கதிரை/ இரும்பு அலுமாரி

**02. கணினிகள் மற்றும் பிற பாகங்கள்**

மேசை கணினிகள்/ மல்டி மீடியா புரொஜெக்டர்/ நகல் எடுக்கும் இயந்திரம்/
அச்சு இயந்திரம் (Mono Printer) /அச்சு இயந்திரம் (Dot Matrix)/ அச்சு இயந்திரம் (High Speed, Line Matrix) அச்சு இயந்திரம் (Laser)

மேலே பட்டியலிடப்பட்டுள்ள ஒரு பொருளுக்கான விலைகளை மேற்கோள் காட்ட முடியும். மீள் அளிக்கப்படாத கட்டணமான **ரூ.1,000.00** ஐ வலயக் கல்வி அலுவலகத்தில் சரப்பிடம் செலுத்தி கட்டணம் செலுத்தியமைக்கான பற்றுச் சீட்டினை ஆசிரியர் நிர்வாக கிளையின் கொள்முதல் பிரிவில் சமர்ப்பித்த பின்னர் மனுக்களை பெற்றுக்கொள்ள முடியும்.

**மனு ஆவணங்கள் வழங்கப்படும் திகதி**
**2022.03.25 ஆந்** திகதி முதல் **2022.04.19 ஆந்** திகதி **மு.ப.9.00 தொடக்கம் பி.ப.2.45** வரை (வாரத்தில் வேலை நாட்களில் மட்டும்)

**விலை மனுக்கள் திறக்கப்படும் நேரம்**

**2022.04.19 ஆந் திகதி பி.ப.1.00 மணிக்கு** மனு ஏற்றுக்கொள்ளல் முடிவுற்ற உடனேயே, **2022.04.19 ஆந் திகதி பி.ப.1.00 மணிக்கு** மனுக்கள் திறக்கப்படும்.

பூரணப்படுத்தப்பட்ட மனு ஆவணங்களை **2022.04.19 ஆம் திகதி பி.ப.1.00 மணிக்கு** முன்னர் தலைவர், கொள்முதல் குழு, வலயக் கல்வி அலுவலகம், ஹொரன எனும் முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாக ஆசிரியர் நிர்வாக கிளையில் வைக்கப்பட்டுள்ள மனுப்பெட்டியில் இடுதல் வேண்டும். முழுமையாக பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்களை நிராகரிக்கும் உரிமையினை டென்டர்குழு கொண்டுள்ளது.

மனுக்கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் மனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். இது தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள **034-2265372 ஊடாக வலயக் கல்வி பணிப்பாளர் (நிர்வாகம்)** பெற்றுக்கொள்ள முடியும்.

**தொலைப்பேசி / பெக்ஸ் : 034-2262663**
**2022.03.25**

**தலைவர்,**
**கொள்முதல் குழு,**
**வலயக் கல்வி அலுவலகம்,**
**ஹொரன.**

# இலங்கை பரீட்சைத் திணைக்களம்
## க.பொ.த. (உ.தரப் பரீட்சை - 2021 (2022)
## செய்முறைப் பரீட்சை

இப்பரீட்சையின் பின்வரும் பாடங்களுக்கான எழுத்துப் பரீட்சைகளுக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளுக்கான செய்முறைப் பரீட்சையை நாடளாவிய ரீதியில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்பதை இத்தால் அறியத்தருகின்றோம்.

| பாட எண் | பாடம் | செய்முறைப் பரீட்சை நடைபெறவுள்ள திகதிகள் |
|---|---|---|
| 52 | நாட்டியம் (தேசிய) | 2022.03.29 இருந்து 2022.04.10 ஆம் திகதி வரை |
| 53 | நாட்டியம் (பரதம்) | 2022.03.29 இருந்து 2022.04.10 ஆம் திகதி வரை |
| 54 | கீழைத்தேய சங்கீதம் | 2022.03.29 இருந்து 2022.04.10 ஆம் திகதி வரை |
| 55 | கர்நாடக சங்கீதம் | 2022.03.29 இருந்து 2022.04.10 ஆம் திகதி வரை |
| 56 | மேலைத்தேய சங்கீதம் | 2022.03.29 இருந்து 2022.04.10 ஆம் திகதி வரை |

நாடளாவிய ரீதியில் தற்போது நிலவுகின்ற கொவிட் 19 நோய் நிலைமை காரணமாக சுகாதார சேவைப் பணிப்பாளரின் ஆலோசனைக்கமைய மேற்குறிப்பிட்ட தினங்களில் ஏதேனும் மாற்றங்கள் இருப்பின் அது தொடர்பாக செய்முறைப் பரீட்சைத் தினத்திற்கு முன்பாக ஊடகங்கள் மூலமாக அறியத்தரப்படும். அது தொடர்பாக உரிய பரீட்சார்த்திகள் விசேட கவனத்தில் கொள்ள வேண்டியது மிக முக்கியமானது.

**செய்முறைப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் பரீட்சார்த்தி தோற்ற வேண்டிய இடம், திகதி என்பன அனுமதி அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அவற்றை எக்காரணத்திற்காகவேனும் பின்னர் மாற்றம் செய்ய முடியாது.**

மேற்குறித்த பாடங்களுக்கான பாடசாலைப் பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் அதிபர்களுக்கும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் விண்ணப்பப்படிவத்திலுள்ள தபால் முகவரிக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக பரீட்சைத் திணைக்களத்தின் இணையத்தளத்தினூடாக www.doenets.lk பதிவிறக்கம் செய்து கொள்வதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இவ்வருடமும் பரீட்சார்த்திகளின் சுகாதார பாதுகாப்புக்காக 52- நாட்டியம் (தேசிய), 53- நாட்டியம் (பரதம்) பாடங்களுக்காக தாம் பயன்படுத்தும் மேளத்தையோ அல்லது உரிய வாத்தியக்கருவிகளை பயன்படுத்துவதற்காக எடுத்துச் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இப்பரீட்சை தொடர்பாக ஏதாவது விசாரணைகள் இருப்பின் இலங்கை பரீட்சைத் திணைக்களத்துடன் பின்வரும் தொலைபேசி எண்கள் மூலம் தொடர்பு கொள்ள முடியுமென்பதை கருத்திற் கொள்ளவும்.

நேரடித் தொலைபேசி எண்: 1911
011-2784208, 011-2784537, 0112786616
தொலைநகல் இலக்கம்: 011-2784422
பொதுத் தொலைபேசி எண்: 011-2786200, 011-2784201, 011-2785202 } நீடிப்பு 263, 265, 280, 282, 433

**எல்.எம்.டீ. தர்மசேன**
**பரீட்சை ஆணையாளர் நாயகம்**

**6/31/உ.தரம்/செ.ப/2021**
**பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேற்றுக் கிளை,**
**இலங்கை பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்த, பத்தரமுல்ல.**
**2022.03.25**

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz it's what you want Classified
Green Light for Online Transfer
Lake House Branch
Acc. No. 0000000377
Inquiries :- Ramani - 077 7 278 948/ 011 2 429 347 | Piyumi - 011 2 429 383 | Gayani - 011 2 429 342/ 343
077 7 270 067
E-mail - classified@lakehouse.lk

Best way to fulfil your Future Dreams
SUNDAY OBSERVER Marriage Proposals
E-mail your advertisements to,
classified@lakehouse.lk
Piyumi- 0112 429 383 Ramani - 0112 429 347 | Gayani - 0112 429 343 / 342



தினகரன் 90 ஆவது ஆண்டு நிறைவு உதைபந்தாட்ட கிண்ணம்
பேருவளை ஹெட்டிமுல்ல பேகர்சிட்டி உள்ளக அரங்கில்
27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 2.30க்கு

# THINAKARAN TROPHY







# இலங்கை வங்கி

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள நகரத்தில் புதிய வங்கிக் கிளையொன்றை அமைப்பதற்கு குத்தகை அடிப்படையில் பொருத்தமான கட்டடமொன்று தேவைப்படுகின்றது.

## ஹிங்குரக்கொடை

**உத்தேசக் கட்டடம் பின்வரும் வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.**

- மாடிகளற்ற கட்டடம் எனின் அதன் தரைப்பரப்பு 4,000 சதுர அடிகளைக் கொண்டதாக இருத்தல் வேண்டும். இரண்டு மாடிக் கட்டடம் எனின் அதன் மேற்றளமும் தரைத்தளமும் தலா 2000 சதுர அடிகளைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.
- கட்டடத்திற்கும் வீதிக்கும் குறைந்தபட்சம் 25 அடி இடைவெளி காணப்பட வேண்டும் என்பதோடு கட்டடமானது பிரதான வீதிக்கு முகப்பாக நகரத்தின் மத்தியில் அமைந்திருத்தல் வேண்டும்.
- வாகனங்களை நிறுத்தி வைப்பதற்குப் போதுமான இடவசதி இருத்தல் வேண்டும். (சுமார் 05 வாகனங்கள்)
- 60 அம்பியர் மூன்று கட்ட மின்சாரம், நீர் வசதி, ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனத்தின் தொலைபேசி இணைப்பு மற்றும் ஆண், பெண் இருபாலாரும் வெவ்வேறாகப் பாவிக்கக் கூடிய மலசலகூட வசதி, அவசர நேரங்களில் வெளியேறக் கூடிய வாசல் மற்றும் ஏனைய அடிப்படை வசதிகளுடன் காணப்படல் வேண்டும்.
- தரைக்குத் தரையோடுகள் பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
- மின்பிறப்பாக்கி இயந்திரத்திற்கு 10'x10' அளவிலான நல்ல காற்றோட்டம் உள்ள அறை கட்டடத்திற்கு பின்புறம் இருத்தல் வேண்டும். (அவ் அறையானது இரும்புக் கம்பி போடப்பட்டு பாதுகாப்பானதாக இருத்தல் வேண்டும்.)
- நீரைச் சேமித்து வைக்க 1000 லீட்டர் கொள்ளளவைக் கொண்ட நீர்த்தாங்கி ஒன்று இருத்தல் வேண்டும்.
- சக்கர நாற்காலியில் செல்லக்கூடிய நுழைவாயில் இருத்தல் வேண்டும்.
- கட்டடத்துக்கான தீக்காப்புறுதிச் சான்றிதழ் இருத்தல் வேண்டும்.
- கட்டடத்தின் மின்சுற்றுக்கள் சரியாக அமைக்கப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்த மின் பொறியியலாளரால் வழங்கப்பட்ட சான்றிதழ் இருத்தல் வேண்டும்.

இது தொடர்பில் ஆர்வம் காட்டும் கட்டட உரிமையாளர் கட்டட வரைபடம், காணித்துண்டின் வரைபடம், உரிமைத்துவ உறுதி போன்ற ஆவணங்களின் பிரதிகளுடன் எதிர்பார்க்கும் மாதாந்த வாடகையைக் குறிப்பிட்டு 14 நாட்களுக்குள் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "**ஹிங்குரக்கொடை கிளைக்கான பொருத்தமான கட்டடம்**" எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

உதவிப் பொது முகாமையாளர்
(வட மத்திய மாகாணம்)
இலங்கை வங்கி, வட மத்திய மாகாண அலுவலகம்,
அனுராதபுரம்.
தொலைபேசி : 025 223 5679 / 025 223 5680
தொலைநகல் : 025 223 5685
மின்னஞ்சல் : bocncp@boc.lk

1975 BOC CALL CENTRE www.boc.lk

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்



## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

## ரூ.45,000 மில்லியன் திறைசேரி முறிகளை வழங்கல்

10.25% 2025 "A" தொடர்களின் கீழ் ரூ. 25,000 மில்லியனையும் 13.00% 2029 "B" தொடர்களின் கீழ் ரூ. 20,000 மில்லியனையும் கொண்ட திறைசேரி முறிகள் 2022 மார்ச் 29ஆம் திகதி இடம்பெறும் ஏலங்களின் அடிப்படையில் வழங்கப்படுகின்றன.

| தொடர்கள் | 10.25% 2025 'A' | 12.00% 2031'A' |
|---|---|---|
| ISIN* | LKB01025C157 | LKB01529E014 |
| முன்வைக்கப்பட்ட தொகை | ரூ. 25,000 மில்லியன் | ரூ. 20,000 மில்லியன் |
| நறுக்கு வீதம் | 10.25% ஆண்டொன்றிற்கு | 13.00% ஆண்டொன்றிற்கு |
| வழங்கப்பட்ட திகதி | 2015 மார்ச் 15 | 2014 மே 01 |
| முதிர்வுத்திகதி | 2025 மார்ச் 15 | 2029 மே 01 |
| நறுக்கு கொடுப்பனவுகள் செலுத்தப்படும் திகதிகள் | 15 மார்ச் & 15 செப்தெம்பர் | 01 மே & 01 நவெம்பர் |
| ஒன்று சேர்ந்த வட்டி வீதம் | ரூ. 100.00 இற்கு ரூ. 0.4735 | ரூ.100 இற்கு ரூ. 5.4227 |
| ஏல விற்பனைத் திகதி | 2022 மார்ச் 29, செவ்வாய்க்கிழமை | |
| விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப் படுவதற்கான இறுதித்திகதியும் நேரமும் | 2022 மார்ச் 29, செவ்வாய்க்கிழமை, மு.ப. 11.00 மணி | |
| தீர்ப்பனவுத் திகதி | 2022 ஏப்பிரல் 01 | |
| விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை | ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/=) அத்துடன் ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/- பெருக்கங்களிலிருந்து) | |

முதனிலை வணிகர்களிடமிருந்து உண்மையான விலைகளின் (நறுக்குக் கொடுப்பனவுத் திகதியிலிருந்து தீர்ப்பனவு செய்யும் நாள் வரையான ஒன்று சேர்ந்த வட்டி நீங்கலாக) அடிப்படையில் விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. விலைக்குறிப்பீடுகள் இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீடு சமர்பிக்கின்ற வசதியினூடாக மாத்திரமே மேற்கொள்ளப்படல் வேண்டும்.

ஒவ்வொரு தொடர்/ISIN தொடர்பிலும் சந்தை நிலைமைகளுக்கமைய முன்வைக்கப்பட்ட தொகையினை விஞ்சாத ஏதேனும் தொகையினை இலங்கை மத்திய வங்கி ஏற்றுக்கொள்ளலாம்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி முறிகளை கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.**

| | | | |
|---|---|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடெட் | 2206297 | என்எஸ்பீ பன்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடெட் | 2425010 |
| இலங்கை வங்கி | 2541938 | மக்கள் வங்கி | 2206783 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் லிமிடெட் | 2317777 | சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 | செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வ்வெஸ்ட் கெப்பிட்டல் ரெஸரீஸ் லிமிடெட் | 2639883 | வெல்த்றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடெட் | 2675096 |

* பன்னாட்டு பிணையங்கள் அடையாள இலக்கம்

**எம்.இசட்.எம். ஆசிம்**
**பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/ பதிவாளர்**

**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம் : www.cbsl.gov.lk**





# உள்ளூர் தொழில்முனைவோருக்கு ஒரு பொன்னான வாய்ப்பு

MADE IN SRI LANKA

உங்கள் தயாரிப்புகளை உலகச் சந்தைக்கு எடுத்துச் சென்று, நாட்டிற்குத் தேவையான

## அந்நியச் செலாவணியை (DOLLARS)

கொண்டு வந்து பொருளாதாரத்தை ஏன் **ஆதரிக்கக் கூடாது?**

பெருமைமிக்க இலங்கையராக இருக்க
**நீங்கள் தயாரா?**

**பிறகு உங்களையும் நாட்டையும் இருளில் இருந்து வெளியேற்றுங்கள்!**

உங்கள் நிறுவனத்தை பிரபஞ்சமாக விரிவுபடுத்துங்கள்
நிறுவனங்களுக்கான தாய் விடான

## மேட் இன் ஸ்ரீலங்கா

இன் ஆன்லைன் வர்த்தக தளம்
இப்போது பதிவு செய்ய திறக்கப்பட்டுள்ளது.

விவரங்களுக்கு
www.madeinsrilanka.org 071 700 25 81

NEDA
Powered by National Enterprise Development Authority
MINISTRY OF INDUSTRIES

# சர்வதேச செய்திகள்

## கிழக்கு ஐரோப்பாவில் நேட்டோ துருப்புகள் மேலும் அதிகரிப்பு



நேட்டோ தனது கிழக்கு பக்கமாக படைகளை அதிகரிக்க அனுமதி அளிக்கவுள்ளதாக அந்த அமைப்பின் செயலாளர் நாயகம் ஜேன்ஸ் ஸ்டெல்டன்பர்க் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பு தொடர்பில் நேட்டோ அவசர மாநாட்டுக்கு முன்னர் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே கடந்த புதன்கிழமை அவர் இதனைத் தெரிவித்தார்.

ஹங்கேரி, ஸ்லோவாக்கியா, பல்கேரியா மற்றும் ருமேனியா நாடுகளுக்கு மேலும் துருப்புகளை அனுப்ப அவர் உறுதி அளித்துள்ளார்.

இரசாயன, உயிரியல் மற்றும் அணு ஆயுதங்களுக்கு எதிராக பெரும் பாதுகாப்பு அளிப்பது உட்பட உக்ரைனுக்கு மேலும் உதவிகளை அளிக்கவும் நேட்டோவில் இணக்கம் எட்டப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தங்கள் நாட்டிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால் உக்ரைனுக்கு எதிராக அணு ஆயுதங்களை பயன்படுத்தத் தயார் என்று ரஷ்யா எச்சரிக்கை விடுத்துள்ள நிலையில் உக்ரைனுக்கு அணு ஆயுதத் தடுப்பு கருவிகள் வழங்க நேட்டோ அமைப்பு நாடுகள் உதவ முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் பெல்ஜியம் தலைநகர் பிரசல்ஸ் பயணமாகி இருக்கும் நிலையில் அந்நாட்டு நேரப்படி நேற்று வியாழக்கிழமை நேட்டோ அவசர மாநாடு மற்றும் ஐரோப்பிய தலைவர்களுடன் ஏனைய சந்திப்புகளில் பங்கேற்க இருந்தார்.

பல்டிக் தொடக்கம் கருங்கடல் வரை நீண்டுள்ள நேட்டோவின் கிழக்கு எல்லையில் சுமார் 40,000 நேட்டோ துருப்புகள் உள்ளன. "அமைதியை பெற முடியாத சூழலில் புதிய அவசர நிலை ஒன்று ஏற்பட்டுள்ளது" என்று ஸ்டெல்டன்பர்க் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

## வடகொரியா தடை செய்யப்பட்ட பலிஸ்டிக் ஏவுகணைச் சோதனை




வட கொரியா 2017 ஆம் ஆண்டுக்குப் பின் முதல் முறையாக தடை செய்யப்பட்ட கண்டம் விட்டு கண்டம் பாயும் பலிஸ்டிக் ஏவுகணையை சோதித்திருப்பதாக தென் கொரியா கூறியுள்ளது.

இந்த ஏவுகணை 1,100 கிலோமீற்றர்கள் பாய்ந்து 6,000 கிலோமீற்றர் உயரச் சென்றதாக ஜப்பான் அதிகாரிகள் மதிப்பிட்டுள்ளனர்.

நேற்று சோதிக்கப்பட்டிருக்கும் இந்த ஏவுகணை ஒரு மணி நேரத்திற்கு மேல் பறந்து ஜப்பானின் தெற்கு கடல் பகுதியில் விழுந்துள்ளது. வட கொரியா அண்மைக் காலத்தில் தொடர்ச்சியான ஏவுகணை சோதனைகளை நடத்தி வருகிறது.

இதில் செய்மதியை நிறுவுவதற்காக என்று குறிப்பிடும் சில ஏவுகணை சோதனைகள் உண்மையில் கண்டம் விட்டு கண்டம் பாயக்கூடியவை என்று அமெரிக்கா மற்றும் தென் கொரியா குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்புடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து 2017 ஆம் ஆண்டில் நீண்ட தூர ஏவுணை சோதனையை வட கொரியத் தலைவர் கிம் ஜொன் உன் நிறுத்தி வைத்திருந்தார்.

இந்த வாக்குறுதி தொடர்ந்தும் அமுலில் இருக்காது என்று கிம் கடந்த 2020 ஆம் ஆண்டு கூறி இருந்தார்.

வட கொரியா பலிஸ்டிக் ஏவுகணை அல்லது அணு ஆயுத சோதனை மேற்கொள்வது ஐ.நாவால் தடை செய்யப்பட்டள்ளது. இவ்வாறான முந்தைய சோதனைகளுக்கு எதிராக வட கொரியா மீது தடைகள் விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனினும் வட கொரியா இந்த ஆண்டு மேற்கொண்ட 13 ஆவது பலிஸ்டிக் ஏவுகணை சோதனையாக நேற்றைய சோதனை அமைந்தது.

## உக்ரைனில் ரஷ்ய படையெடுப்புக்கு ஒரு மாதம்: போர் முடிவின்றி நீடிப்பு



உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பு ஒரு மாதத்தை தொட்டுள்ள நிலையில் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டு மில்லியன் கணக்கானவர்கள் அகதிகளாக்கப்பட்டிருப்பதோடு பல நகரங்களும் பேரழிவுகளை சந்தித்துள்ளன. எனினும் உக்ரைனின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் ரஷ்ய படைகள் ஸ்தம்பித்திருக்கும் சூழலில் இந்தப் போர் முடிவதற்கான எந்த சமிக்ஞையும் இன்றி நீடித்து வருகிறது.

கடந்த பெப்ரவரி 24 ஆம் திகதி ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின், உக்ரைன் மீது முழு வீச்சில் படையெடுப்புக்கு உத்தரவிட்டார். இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் ஐரோப்பாவின் மிகப்பெரிய தாக்குதலாக மாறி இருக்கும் இந்தப் போர் மேற்கத்திய நாடுகள் தலையிட்டால் ஓர் அணு ஆயுதப் போராக மாறும் அச்சம் எற்பட்டுள்ளது.

இந்தப் போரின் முதல் வாரத்தில் ரஷ்யப் படை வேகமாக தாக்குதலை நடத்தியபோதும் அதனால் உக்ரைனின் முக்கிய நகரங்களை கைப்பற்றுவது இதுவரையில் முடியாமல் போயுள்ளது. இதனால் நகரங்களை முற்றுகையில் வைத்திருக்கும் ரஷ்யா அங்கு வான், ஏவுகணை மற்றும் பீரங்கி தாக்குதல்களை இடைவிடாது நடத்தி வருகிறது.

இதன்போது மருத்துவமனைகள், தேவாலயங்கள் மற்றும் வீடுகள் என பொதுமக்கள் இலக்குகள் மீதும் தொடர்ச்சியாக தாக்குதல் நடத்தப்பட்டு வருகின்றன. இது ஜனாதிபதி ஜோ பைடன், ரஷ்ய ஜனாதிபதி புட்டினை போர் குற்றவாளி என்று அழைப்பதற்கு காரணமாகியுள்ளது.

உக்ரைன் தலைநகர் கியேவ் மீது ரஷ்யப் படை தொடர்ச்சியாக தாக்குதல் நடத்திய போதும் அந்த நகரை சுற்றிவளைப்பதில் தோல்வியை சந்தித்து வருகிறது.

இதில் முற்றுகையில் இருக்கும் தெற்கு நகரான மரியுபோல் மோசமான தாக்குதலுக்கு இலக்காகி வருகிறது. நகர் மீது பல வாரங்களாக இடம்பெற்று வரும் குண்டு மழையால் குறைந்தது 2,300 பேர் கொல்லப்பட்டு நகரின் பெரும்பகுதி அழிக்கப்பட்டிருப்பதாக உக்ரைன் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். அந்த நகரில் குடிநீர், மின்சாரம் இன்றி சுமார் 100,000 பேர் தொடர்ந்து சிக்கித் தவிக்கின்றனர். அங்கு உணவு விநியோகங்களும் தீர்ந்து வருகின்றன.

இதுவரை ஒரே ஒரு பிரதான நகராக கெர்சோன் மாத்திரமே ரஷ்யாவிடம் வீழ்ந்துள்ளது.

இந்தப் போரின் உயிர்ச் சேதம் உறுதி செய்யப்படாதுள்ளது. ரஷ்யாவுக்கு எதிரான தேசியப் போராட்டத்தின் அடையாளமாக மாறி இருக்கும் உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கி, 121 உக்ரைனிய சிறுவர்கள் உட்பட ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டிருப்பதாக கடந்த புதன்கிழமை கூறினார்.

14,000 ரஷ்யப் படைகளை கொன்றதாகவும், நூற்றுக்கணக்கான டாங்கிகள், கவச வாகனங்கள், பீரங்கிகள் மற்றும் விமானங்களை அழித்ததாகவும் உக்ரைன் கூறியபோதும் அதனை சுயாதீனமாக உறுதி செய்ய முடியவில்லை. அமெரிக்காவின் மதிப்பீட்டின் படி குறைந்தது 7000 ரஷ்யர்கள் கொல்லப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. 3.6 மில்லியன் உக்ரைனியர் நாட்டை விட்டு வெளியேறி இருப்பதோடு மேலும் 6.5 மில்லியன் மக்கள் உள்நாட்டில் இடம்பெயர்ந்திருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை குறிப்பிட்டுள்ளது.

இந்தப் போர் சர்வதேச பொருளாதாரம் மற்றும் பூகோள அரசியல் ஒழுங்கை குழப்பி உள்ளது.

உக்ரைன் மீதான ரஷ்ய படையெடுப்பு ஆரம்பித்து நேற்று ஒரு மாதம் நிறைவடைந்த நிலையில், உக்ரைனுக்கு தங்களுடைய ஆதரவைக் காட்டுவதற்காக உலகெங்கிலும் உள்ள மக்கள் வீதிகளில் இறங்கி போராட வேண்டும் என்று அந்நாட்டு ஜனாதிபதி செலென்ஸ்கி வேண்டுகோளை விடுத்துள்ளார்.

தனது சமீபத்திய காணொளியில் அவர் வழக்கத்துக்கு மாறாக உக்ரைன் மொழியில் அல்லாது ஆங்கிலத்தில் பேசினார். ரஷ்யாவின் போர் உக்ரைனுக்கு எதிரானது மட்டுமல்ல, எல்லா இடங்களிலும் உள்ள மக்களின் சுதந்திரம் தொடர்புடையது அது – ரஷ்யாவின் மசகு எண்ணெய் வளத்தை பயன்படுத்துவதை உலகம் நிறுத்த வேண்டும் என்றும் செலென்ஸ்கி கேட்டுக் கொண்டார்.

"உங்கள் அலுவலகங்கள், வீடுகள், பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் இருந்து வீதிகளுக்கு வாருங்கள், அமைதியின் பெயரால் உக்ரைனை ஆதரிக்கவும், சுதந்திரத்தை ஆதரிக்கவும், எங்களுடைய வாழ்க்கையை ஆதரிக்கவும் வாருங்கள்" என்று செலென்ஸ்கி அந்த காணொளியில் அழைப்பு விடுத்தார்.

## சீன விமான விபத்தின் உடல் பாகங்கள் மீட்பு



மலைப்பிரதேசத்தில் கடந்த திங்கட்கிழமை விழுந்து விபத்துக்குள்ளான சீனாவின் சைனா ஈஸ்டர்ன் ஜெட் விமானத்தில் இருந்தவர்களின் உடல் பாகங்கள் மீட்புக் குழுவினரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கையை நிர்வாகம் இன்னும் உறுதி செய்யாதபோதும், விமானத்தில் இருந்த 132 பேரில் எவரும் உயிர் தப்பியதற்கான வாய்ப்பு இல்லை என்று கூறப்படுகிறது. தெற்கு சீனாவில் பறந்து கொண்டிருந்த இந்த விமானம் திடீரென்று செங்குத்தாக விழுந்து நொறுங்கியதற்கான காரணத்தை விசாரணையாளர்கள் இன்னும் கண்டறியவில்லை.

எனினும் விமானி அறையின் குரல் பதிவை கொண்ட கறுப்புப் பெட்டி கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் நிலையில் விபத்துக்கான காரணம் வெளிச்சத்திற்கு வரும் என்ற நம்பிக்கை எழுந்துள்ளது.

விபத்து இடம்பெற்ற பகுதியில் கடும் மழை பொழிவது மீட்புப் பணிகளில் சிரமத்தை ஏற்படுத்தியுள்ளது.

## அல்பிரைட் காலமானார்



அமெரிக்க வரலாற்றில் முதலாவது பெண் இராஜாங்கச் செயலாளராக பதவி வகித்த மெடலின் அல்பிரைட் தனது 84 ஆவது வயதில் காலமானார்.

நீண்ட காலம் அமெரிக்க இராஜதந்திரி ஒருவராக செயற்பட்ட அல்பிரைட் 1997இல் பில் கிளின்டன் அரசில் இராஜாங்க செயலாளர் பதவியை ஏற்றார். சிறந்த இராஜதந்திரியாக பாராட்டப்பட்ட அவர், கொசோவோவில் இன அழிப்பை முடிவுக்குக் கொண்டுவர முயற்சி மேற்கொண்டார்.

புற்று நோயால் பாதிக்கப்பட்ட அவர் உயிரிழந்ததை குடும்பத்தினர் உறுதி செய்தனர். "குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் சூழ அவர் உயிர்நீத்தார்" என்று குடும்பத்தினர் வெளியிட்ட அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

அவரது மரணத்திற்கு அமெரிக்க முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் சர்வதேச தலைவர்களும் அனுதாபம் வெளியிட்டுள்ளனர்.

## ஐ.நா பாதுகாப்பு சபையில் ரஷ்ய தீர்மானம் தோற்றது



உக்ரைனில் மனிதாபிமான உதவிகளை அளிப்பது தொடர்பில் ஐ.நா பாதுகாப்புச் சபையில் ரஷ்யா கொண்டுவந்த தீர்மானம் தோல்வி அடைந்துள்ளது. கடந்த புதன்கிழமை இடம்பெற்ற வாக்கெடுப்பில் இந்த தீர்மானத்திற்கு ஆதரவாக ரஷ்யா மற்றும் சீனா மாத்திரமே வாக்களித்த நிலையில் எஞ்சிய 13 நாடுகளும் வாக்களிப்பை தவிர்த்தன.

ரஷ்யா கொண்டுவந்த இந்தத் தீர்மானத்தில் உக்ரைனில் மனிதாபிமான பிரச்சினைக்கு காரணமாக உள்ள ரஷ்யாவின் படையெடுப்புப் பற்றி எதுவும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட பாதுகாப்புச் சபையில் வீட்டோ நிராகரிப்பு இன்றி 15 அங்கத்துவ நாடுகளில் ஒன்பது நாடுகளின் ஆதரவு தேவையாக இருந்தது. ஆனால் வீட்டோ அதிகாரம் பெற்ற அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் நாடுகள் உட்பட பெரும்பாலான நாடுகள் வாக்களிப்பை தவிர்த்தமை குறிப்பிடத்தக்கது.

## உக்ரைனியப் பூசலால் கப்பல்களுக்கு சிக்கல்



உக்ரைனில் தொடரும் பூசலால், கடற்பகுதிகளில் சிக்கியுள்ள 100க்கும் மேற்பட்ட வெளிநாட்டுக் கப்பல்களில் உணவு, மருந்துப் பொருட்களுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகத் தொழில்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அவை அந்தப் பகுதிகளிலிருந்து வெளியேற கடல்வழிப் பாதைகளை அமைப்பதில் சிரமத்தை எதிர்நோக்குகின்றன.

கருங்கடல், அசோவ் கடல் ஆகிய பகுதிகளில் வர்த்தகக் கப்பல்களில் சிக்கியுள்ள ஊழியர்களை வெளியேற்ற பாதுகாப்பான கடல் வழிப் பாதை அமைக்கப்படும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் கப்பல் அமைப்பு தெரிவித்திருந்தது.

ஆனால் அதில் சிறிய முன்னேற்றமே காணப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. உக்ரைனியக் கரையோரத்தில் இருந்த 5 கப்பல்கள், ஏவுகணைகளால் தாக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்று மூழ்கியதாகத் தெரிவிக்கப்பட்டது. 20 நாடுகளைச் சேர்ந்த சுமார் 140 கப்பல்கள் அந்தப் பகுதியில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

உக்ரைனியப் பூசல் காரணமாக அவற்றில் இருக்கும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஊழியர்கள் வெளிவர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

## ரஷ்யாவில் வாழ்க்கை செலவு புதிய உச்சம்



உக்ரைன் மீதான ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து ரஷ்யாவில் வாழ்க்கைச் செலவும் அதிகரித்திருப்பது புதிய தரவுகள் மூலம் உறுதியாகியுள்ளது.

சீனி போன்ற முக்கிய வீட்டுப் பயன்பாட்டுப் பொருட்களின் விலை கடந்த ஒரு வாரத்தில் 14 வீதம் வரை அதிகரித்திருப்பது உத்தியோகபூர்வ புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன.

ரஷ்யா உக்ரைன் மீது தாக்குதல் தொடுத்தது தொடக்கம் அந்நாட்டின் ரூபிள் நாணம் வீழ்ச்சி அடைந்து வரும் நிலையில் பணவீக்கம் தொடர்ந்து உயர்ந்து வருகிறது.

ரஷ்ய நாணயத்தின் பெறுமதி இந்த ஆண்டு 22 வீதம் வீழ்ச்சி கண்டுள்ளது.

மார்ச் 18 ஆம் திகதி முடிவுற்ற வாரத்தில் ஆண்டு பணவீக்கம் 14.5 வீதம் உயர்ந்திருப்பதாக ரஷ்ய பொருளாதார அமைச்சு புதன்கிழமை குறிப்பிட்டது. இது 2015 பிற்பகுதி தொடக்கம் உச்ச எண்ணிக்கையாக உள்ளது.

உக்ரைன் ஆக்கிரமிப்புக்கு எதிராக மேற்கத்திய நாடுகள் ரஷ்யா மீது கடும் தடைகளை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# புலமைக் கதிர்

தரம்-5 வகுப்பு மாணவர்களுக்கான



திருமதி.பத்மா சந்திரமோகன்
புனித அந்தோனியார் கல்லூரி
கொழும்பு - 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் – II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

**மாணவர்களே! இம்மாதிரி வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுங்கள். இவ்வினாக்களுக்கான விடைகள் அடுத்த வாரம் புலமைக் கதிரில் வெளியிடப்படும்.**

**I. பின்வரும் பந்தியை வாசித்து விடை தருக.**

இயற்கை அன்னையின் எழில் மிகுந்த கொடை காடுகள் ஆகும். மழையைப் பெறுவதற்கு மனிதனுக்கு காடுகள் அவசியமாகின்றன. அரிய விலங்குகளும் மூலிகை தாவரங்களும் காடுகளில் காணப்படுகின்றன. மனிதன் தன் விவசாய தேவைக்காகவும் குடியேற்றத்திற்காகவும் காடுகளை அழிக்கின்றான்.

1. காடுகள் மூலமாக மனிதனுக்கு கிடைக்கும் பிரதான நன்மை யாது?

……………………………………………………………………………...

2. உயர்திணை, பெயர்ச்சொல் ஒன்று தருக.

……………………………………………………………………………...

3. பந்தியிலுள்ள இடப்பெயர் ஒன்றினை எழுதுக.

……………………………………………………………………………...

4. ஒத்தபொருள் தருக.
i. காடுகள் - ………………………………………………………….
ii. எழில் - ………………………………………………………….

5. 'அரிய விலங்குகள்' எனும் தொடரை விளக்குக.

……………………………………………………………………………...

6. அழித்தல் என்பது எவ்வகை பெயர்ச்சொல்?

……………………………………………………………………………...

**II. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.**

7. பழுதடைந்த உணவுகளை உண்பதால் வயிற்று…………………ஏற்படும். (வளி / வலி / வழி)

8. விவசாயி……………………. (வாளால் / வாலால்) மரத்தை வெட்டினான்.

9. அக்கால மன்னர்கள் ……………… (மரம் / மறம்) மிக்கவர்கள்.

**III. பின்வரும் வாக்கியங்களை பன்மையில் மாற்றுக.**

10. நீ பாடம் படித்தாயா?

……………………………………………………………………………...

11. புலி காட்டில் வாழும்

…………………………………………………………………………

**IV. பழமொழியின் கருத்தினை எழுதுக.**

12. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்.

……………………………………………………………………………...

**V. பின்வரும் தொடர்களுக்குரிய தனிச் சொல்லை எழுதுக.**

13. நாற்புறமும் கடலால் சூழப்பட்ட நிலப்பரப்பு…………………………………

14. பத்தாண்டுகளைக் கொண்ட காலப்பகுதி………………………………………

**VI. கூட்டத்தைக் குறிக்கும் சொல்**

15. புகையிலை ……………………………………………………………………...

16. பல் ……………………………………………………………………………...

**VII.**

17. நரியின் ஆண் மரபுபெயர் யாது?

……………………………………………………………………………...

18. சிங்கத்தின் இளமைப் பெயர் என்ன?

……………………………………………………………………………...

**VIII. தரப்பட்டுள்ள ஆங்கில வாக்கியங்களின் கருத்தை தமிழில் எழுதுக.**

19. i. Is this your pencil?

……………………………………………………………………………...

ii. Do you like this colour?

……………………………………………………………………………...

20 பின்வரும் பொருட்களின் பெயர்களின் சிங்கள சொற்களைத் தமிழில் எழுதுக.





i. …………………………. ii. ……………………………...

**IX.** மூன்று பாடங்களில் மூன்று மாணவர்கள் பெற்ற புள்ளிகளின் நிலை தரப்பட்டுள்ளது.

| பாடம் | கவிதா | ரவி | குமார் |
|---|---|---|---|
| தமிழ் | ★ | ⬟ | ★ |
| கணிதம் | ⬟ | ★ | ★ |
| சுற்றாடல் | ★ | ★ | ★ |

50 புள்ளிகளுக்கு மேல் ★ 50 புள்ளிகளுக்கு கீழ் ⬟

21. மூன்று பாடங்களிலும் அதிக புள்ளிகளைப் பெற்றுக் கொண்டவர் யார்?

……………………………………………………………………………...

22. கணித பாடத்தில் குறைவான புள்ளிகளைப் பெற்றவர் யார்?

……………………………………………………………………………...

23. எந்த மூன்று பாடங்களில் மூன்று மாணவர்களும் 50க்கு மேல் புள்ளிகளை பெற்றுள்ளனர்?

……………………………………………………………………………...

24. பின்வரும் அமைவினை அவதானித்து தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடை தருக.

| க, 9, S, G, அ, இ, 2, ம், A |
|---|

i. இக்கூட்டத்தில் அடுத்தடுத்து இரண்டு உயிர் எழுத்துக்கள் அமைந்திருக்குமாயின் சரி எனவும் இல்லை எனில் தவறு எனவும் விடை தருக.

……………………………………………………………………………

ii. முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும் போது எவ்வித மாற்றத்தையும் காட்டாத ஆங்கில எழுத்து இக்கூட்டத்தில் இருக்குமாயின் 1 எனவும் இல்லை என்றால் 2 எனவும் விடை தருக.

……………………………………………………………………………...


iii. இங்கு மூன்று இலக்கங்கள் காணப்பட்டால் பச்சை எனவும் இரண்டு இலக்கங்கள் காணப்பட்டால் வெள்ளை எனவும் பதிலளிக்குக.

……………………………………………………………………………...


25. 1kg சீனி ரூ. 200.00, 1kg அரிசி ரூ. 150.00, ராணி 2kg சீனியும் 2kg 500g அரிசியும் வாங்கினாள். அவளுக்குத் தேவையான பணம் எவ்வளவு?

……………………………………………………………………………...

26. இத் திண்ம உருவில் உள்ள உச்சிகள் எத்தனை?




……………………………………………

27. 

நிழறப்பட்ட பகுதியை பின்னத்தில் தருக.

…………………………………..

28. 

இச் சதுரத்திலுள்ள சமச்சீர் அச்சுக்களை வரைக.

……………………………………………………...

29. எண் கோலத்தில் அடுத்துவரும் எண்ணை எழுதுக.

i. 4010, 4110, 4210,………………….

ii. 49, 42, 35,……………………….

**X. சரியான விடையின் கீழ் கோடிடுக.**

30. இலங்கையில் உள்ள உயரமான நீர் வீழ்ச்சி
i. பம்பரகந்த ii. துன்கிந்த iii. தியலும


(12ஆம் பக்கம் பார்க்க)



# புலமைக் கதிர்

தரம்–5 வகுப்பு மாணவர்களுக்கான





திருமதி.பத்மா சந்திரமோகன்
புனித அந்தோனியார் கல்லூரி
கொழும்பு - 13

(11 ஆம் பக்கத் தொடர்)

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் – II

31. தாவரத்தில் நீரை உறிஞ்சும் பகுதி எது?
i. இலை ii. தண்டு iii. வேர்

32. மனித குருதியை உறிஞ்சி வாழும் பிராணி?
i. எறும்பு ii. பேன் iii. தெள்ளு

33. இலைகளைக் கொண்டு கூடுகட்டி மரத்தில் வாழ்விடம் அமைக்கும் பிராணியானது
i. மயிர்கொட்டி ii. செவ்வெறும்பு iii. தேனீ

34. வித்து முளைத்தலுக்கு அவசியமற்ற காரணி
i. வெப்பநிலை ii. ஈரப்பதன் iii. மண்

35. ஆண்டுக்கு ஒருமுறை மட்டும் காய்க்கும் பழம்
i. மரமுந்திரிகை ii. வாழை iii. மா

36. எமது நாட்டின் தேசிய மிருகமானது
i. சருகுமான் ii. யானை iii. மர அணில்

37. மாணிக்க கங்கைக்கு அருகில் அமைந்துள்ள சரித்திர புகழ்பெற்ற நகரம் எது?
i. சிலாபம் ii. புத்தளம் iii. கதிர்காமம்

38. புரத உணவு குறைபாட்டால் ஏற்படும் நோய்த் தாக்கம்
i. உடல் வளர்ச்சி குன்றுதல்
ii. உடல் மெலிதல்
iii. நோய் எதிர்ப்பு திறன் குறைதல்

39. இலங்கை அமைந்திருப்பது இந்தியாவுக்கு
i. தெற்கே ii. வடக்கே iii. மேற்கே

40. ஆடையில் பட்ட தார்க் கறையை போக்க உதவும் பொருள்
i. எலுமிச்சை ii. மண்ணெண்ணெய் iii. வினாகிரி

41. நீலச் சாயத்தினையும் சிவப்புச் சாயத்தினையும் கலந்தால் தயாரிக்கும் நிறச்சாயம் எது?
i. ஊதா ii. கபில நிறம் iii. கருநீலம்

42. தாவரத்திற்கு பூவிலிருந்து கிடைக்கும் பயனானது
i. தாவரத்தின் அழகிற்கு
ii. நறுமணத்திற்கு
iii. இனப்பெருக்கத்திற்கு

43. இலங்கைக்கேயுரிய தாவரம்
i. தென்னை ii. எண்ணெய் மரம் iii. மாதுளை

44. தொற்றுநோய் பரவுகின்ற போது உடனடியாக அறிவிக்க வேண்டிய நிறுவனம்
i. பொது சுகாதாரப் பிரிவு
ii. பாடசாலை
iii. வைத்தியசாலை

45. மரங்களை செதுக்கப் பயன்படுத்தப்படும் மிகச் சிறந்த உபகரணம்
i. உளி ii. சீவுளி iii. துறப்பணம்

46. இவ்வுரு குறித்து நிற்பது
i. இங்கே கடக்கவும்
ii. முன்னால் பாதசாரிக் கடவை
iii. இங்கே கடக்க வேண்டாம்



47. வளைச்சில்லு பயன்படுத்தப்படும் தொழிலானது
i. வயல் வேலை ii. சுரங்க வேலை iii. மட்பாண்டத் தொழில்

48. பின்வருவனவற்றுள் முலையூட்டி அல்லாதது
i. கீரி ii. திமிங்கலம் iii. ஓணான்

49. தென்மாகாணத்தை சேர்ந்த ஒரு நகரம்
i. அம்பலாங்கொடை ii. பலாங்கொடை iii. களுத்துறை

50. தொடர்பாடலுக்கெனவே உருவாக்கப்பட்ட அச்சு ஊடகம்
i. இணையம் ii. பத்திரிகை iii. மஞ்சரி

51. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த புனித நகர்
i. அனுராதபுரம் ii. சீகிரியா iii. நுவரெலியா

52. கழிச்சல் நோயை உண்டாக்குவது
i. நுளம்பு ii. வைரஸ் iii. இலையான்

53. ஊசித் துளைக் கமராவின் திரை செய்யப்படுவது
i. வெள்ளைத் திசுக்கடதாசி
ii. நிறத் திசுக்கடதாசி

54. மண்ணரிப்பு ஏற்படுவதில் செல்வாக்கு செலுத்தும் காரணியானது
i. கான்களை வெட்டுதல்
ii. புற்களை வளர்த்தல்
iii. மரங்களை வெட்டுதல்

55. பின்வரும் எப்பொருள் நீரில் இடும் போது மிதக்கும்?
i. பனிக்கட்டி ii. கண்ணாடி iii. கல்

56. வேலையை இலகுவாக்கும் பொறியையும் அப்பொறியுடன் தொடர்புடைய தொழிலையும் சரியாக காட்டும் விடை யாது?
i. பாக்குவெட்டி - இழுத்தல்
ii. கப்பி – தள்ளுதல்
iii. கைவண்டி – தள்ளுதல்

57. இலங்கையில் பால் உற்பத்திக்கு பிரசித்தி பெற்ற இடம்
i. அம்பேவல ii. வெலிசர iii. ஹங்வெல்ல

58. இறைச்சியை மாத்திரம் உணவாக கொள்ளும் விலங்கு
i. நாய் ii. சிங்கம் iii. பூனை

59. பூமியின் துணைக்கோளாக கருதப்படுவது
i. சூரியன் ii. சந்திரன் iii. நட்சத்திரம்

60. "எனக்குப் பிடித்த விளையாட்டு" என்ற தலைப்பில் கருத்துள்ள மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு குறையாமலும் எழுவாய், பயனிலை தொடர்பு சரியான முறையில் பேணப்பட்டும் இருக்க வேண்டும்.

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

## கடந்த வார (18.03.2022) வினாத்தாள் 1 இற்கான விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 2 | 11 | 1 | 21 | 2 | 31 | 2 |
| 02 | 2 | 12 | 3 | 22 | 3 | 32 | 3 |
| 03 | 1 | 13 | 2 | 23 | 1 | 33 | 2 |
| 04 | 3 | 14 | 1 | 24 | 1 | 34 | 1 |
| 05 | 1 | 15 | 2 | 25 | 3 | 35 | 2 |
| 06 | 3 | 16 | 3 | 26 | 1 | 36 | 1 |
| 07 | 3 | 17 | 1 | 27 | 2 | 37 | 2 |
| 08 | 1 | 18 | 3 | 28 | 3 | 38 | 3 |
| 09 | 2 | 19 | 1 | 29 | 1 | 39 | 2 |
| 10 | 3 | 20 | 3 | 30 | 1 | 40 | 3 |

### விவசாயிகள் பயன்படுத்தும் உபகரணங்கள்

★ கலப்பை
★ மண்வெட்டி
★ தெளிகருவி
★ உழவு இயந்திரம்
★ பிக்கான்
★ பொலிமிலாறு
★ பரப்புப்பலகை
★ சூடடிக்கும் இயந்திரம்
★ பூவாளி


### எதிர்க்கருத்துச் சொற்கள்

★ அமாவாசை - பௌர்ணமி
★ அமைதி - ஆரவாரம், குழப்பம்
★ அன்பு - வன்பு
★ அண்மை - சேய்மை
★ அங்கு - இங்கு
★ அகம் - புறம்
★ அவசரம் - நிதானம்
★ அச்சம் - துணிவு
★ அடி - முடி
★ அதிகம் - கொஞ்சம்
★ அந்தம் - ஆதி
★ அரசன் - ஆண்டி
★ அவசியம் - அநாவசியம்
★ அறம் - மறம்
★ அனுகூலம் - பிரதிகூலம்
★ ஆக்கம் - அழிவு/கேடு
★ ஆக்கல் - அழித்தல்
★ ஆசை - நிராசை
★ ஆரம்பம் - முடிவு
★ ஆத்திகன் - நாத்திகன்
★ ஆதரவு - அநாதரவு
★ ஆரம்பம் - முடிவு

### உவமைத் தொடர்கள்

★ அத்தி பூத்தாற் போல - அரிதாக நடப்பது
★ அன்றலர்ந்த மலர் போல - புத்தம் புதியது
★ அலை ஓய்ந்த கடல் போல - அமைதியாக
★ அனலில் இட்ட மெழுகு போல - துடித்துப் போதல்(உருகுதல்)
★ உள்ளங்கை நெல்லிக்கனி போல - தெள்ளத் தெளிவாக
★ ஊமை கண்ட கனவு போல - வெளியில் சொல்லாமை
★ கதிரவனைக் கண்ட தாமரை போல - மலர்ச்சியோடு இருத்தல்
★ குடத்துள் இட்ட விளக்குப் போல - வெளியில் தெரியாமை
★ தாமரை இலைத் தண்ணீர் போல - ஒட்டாமல் இருத்தல்
★ வெந்த புண்ணிலே வேல் பாய்ந்தாற் போல - மேலும் துன்பம்

### தச்சுவேலையில் பயன்படுத்தப்படும் உபகரணங்கள்


வாள்


உளி


சீவுளி


திருகாணி செலுத்தி


குறடு


சுத்தியல்

# தினகரன் வடக்கின் உதயம்

Vadakkin Uthayam

# வடமாகாண கல்வி அதிகாரிகள் இடமாற்றங்களில் பக்கச்சார்பு

## இலங்கை ஆசிரியர் சங்கம் கண்டனம்

கோப்பாய் குறூப் நிருபர்



வடமாகாண கல்வி அதிகாரிகளின் பக்கச்சார்புகளுக்கு வெளிமாவட்டத்தில் பணிபுரியும் ஆசிரியர்கள் பாதிக்கப்படுவதை அனுமதிக்க மாட்டோம் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் (23) புதன்கிழமை வடமாகாண கல்வி அமைச்சில் ஆசிரியர்களின் இடமாற்றம் தொடர்பான கூட்டம் நடைபெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இக்கூட்டம் தொடர்பாக, இலங்கை ஆசிரியர் சங்கத்திற்கு உரிய முறையில் தகவல் எதுவும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

இலங்கை ஆசிரிய சங்கத்தை திட்டமிட்டு புறக்கணித்து எடுக்கப்பட்டுள்ள பக்கச் சார்புடைய எந்தவொரு தீர்மானங்களுக்கும் இலங்கை ஆசிரியர் சங்கம் உடன்படப்போவதில்லை .

வடமாகாண கல்விப் பணிப்பாளரின் பொறுப்பேற்ற, திட்டமிடப்படாத, பக்கச்சார்பான இடமாற்ற நடைமுறைகளால் பல சிக்கல்கள் எழுந்துள்ளன.

இடமாற்ற நடைமுறைகளுக்கு வெளிமாவட்டத்தில் பணியாற்றும் ஆசிரியர்களை மட்டும் பலிக்கடாவாக்கும் செயற்பாடுகளுக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் அனுமதிக்கப்போவதில்லை.

வடமாகாண கல்விப் பணிப்பாளராக ஏழு வருடங்கள் பூர்த்தி செய்த தொடர்ச்சியாக, இடமாற்ற சபை தீர்மானங்களை மீறி, இடமாற்ற சபையின் அனுமதியின்றி, பதிலீட்டு இடமாற்றம் வழங்கப்பட்ட பல ஆசிரியர்களுக்கு பல வருட காலங்களாக இடமாற்றங்கள் ஒத்தி வைத்துள்ளார்.

அதேவேளை, ஒரே வருடத்தில் வழங்கப்பட்ட பதிலீட்டு இடமாற்றங்களின் போது, ஒரு பகுதியினருக்கு மீளவரும் திகதி குறிப்பிட்டும், இன்னொரு பகுதியினருக்கு திகதி குறிப்பிடாமல் பாரபட்சமான முறையில் இடமாற்றங்களை செயற்படுத்தி இருக்கின்றார்.

ஒரே பகுதி இடமாற்றங்களுக்கு வெவ்வேறு நிபந்தனைகள் மூலம் பாரபட்சங்கள் நடைபெற்று வருகின்றன.

அதேவேளை, கொவிட் 19 தொற்று காலத்தின் நெருக்கடி நிலையில் நாடு இருந்த பொழுதில், அந்த காலகட்டத்தில், இடமாற்ற சபையின் அனுமதி பெறப்படாமல் ஒருசிலருக்கு வெளி மாவட்டங்களில் இருந்து சொந்த மாவட்டத்துக்கு முறையற்ற வகையில் இடமாற்றங்களை வழங்கியுள்ளார்.

மருத்துவக் காரணங்களுக்காகவும், குடும்ப நெருக்கடிகளுக்காகவும் தமது சொந்த வலயங்களிற்கு தற்காலிக இணைப்பு கோரி நிற்கும் வெளிமாவட்ட ஆசிரியர்களுக்கு கூட, பல இழுத்தடிப்புகளை வடமாகாண கல்விப் பணிப்பாளர் செய்து வருகிறார்.

யாழ். மாவட்டத்தில் இருந்து, வெளிமாவட்ட சேவை எதனையும் செய்திராத பலரை தொடர்ச்சியாக பாதுகாத்து பக்கச்சார்பான இடமாற்ற நடைமுறைகளையே கடைப்பிடித்து வருகின்றார்.

இவ்வாறான, பக்கச்சார்பான செயற்பாடுகளால் நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கும் முறையற்ற இடமாற்ற நடைமுறைகளால் வெளிமாவட்டத்தில் பணியாற்றும் ஆசிரியர்கள் பாதிக்கப்படுவதை இலங்கை ஆசிரியர் சங்கம் அனுமதிக்கப்போவதில்லை.

எனவே ஆசிரிய இட மாற்றங்கள் தொடர்பாக வடமாகாண கல்வி அமைச்சால் மேற்கொள்ளப்பட்ட பாரபட்சமான தீர்மானங்களுக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் எதிர்ப்பு தெரிவிக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஈழத்துச் சித்தர் சிவயோக சுவாமிகள் நினைவுப் பேருரை



ஈழத்துச் சித்தர் சிவயோக சுவாமிகள் நினைவுப் பேருரை இன்று 25 ஆம் திகதி, வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

சிவயோக சுவாமி மகா சமாதி தினத்தன்று இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் கோப்பாய் சுப்பிரமணிய கோட்டத்தின் முதல்வரும், அமெரிக்காவின் ஹாவாய் சைவ ஆதீனத்தைச் சேர்ந்தவருமான ஆன்மீகச் சுடர் ரிஷி தொண்டுநாத சுவாமிகள் "யாழ்ப்பாணத்து சிவயோக சுவாமிகளும், சர்வதேசத்தில் அவரது சிந்தனைப் பரவலாக்கமும்" என்ற தலைப்பில் நினைவுப் பேருரையாற்றவுள்ளார்.

## கும்பாபிஷேக திருவிழாவில் கொள்ளை இருவர் கைது, இருவர் தலைமறைவு

யாழ்.விசேட நிருபர்



தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஐந்தாவது கோபுரமான தலைவாசல் இராஜகோபுர கும்பாபிஷேக திருவிழாவில் கலந்துகொண்ட பக்தர்களின் நகைகள் களவாடப்பட்டுள்ளன. இதனையடுத்து தங்க நகைகளைத் கொள்ளையிட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் இருவர் தலைமறைவாகியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் கிளிநொச்சி பகுதியை சேர்ந்த 33, 37 வயதுகளையுடையவர்கள் என தெரியவருகின்றது.

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தின் ஐந்தாவது கோபுரமான தலைவாசல் இராஜகோபுர கும்பாபிஷேக திருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்றது.

திருவிழாவில் பங்கேற்ற அடியவர்கள் நால்வரிடம் தங்க நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளன. அவர்களில் மூதாட்டி ஒருவரை அச்சுறுத்தி தங்கச் சங்கிலி ஒன்றினை கொள்ளையடித்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பில் நகைகளைப் பறிகொடுத்த நால்வரும் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர். அதனடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் ஆண்கள் இருவர் கைது செய்யப்பட்டனர். கொள்ளைக்கு உதவியாக வந்த பெண்கள் இருவர் தலைமறைவாகியுள்ளனர். சந்தேக நபர்கள் பயணித்த வான் பொலிஸாரினால் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. சந்தேக நபர்களிடமிருந்து கைச்சங்கிலி, சங்கிலி என்பன கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## கிளிநொச்சியில் விபத்து தெய்வாதீனமாக உயிர்தப்பிய சட்டத்தரணி



(பரந்தன் குறூப் நிருபர்)

கிளிநொச்சி நகரின் ஏ 9 வீதியில் பாரிய விபத்து சம்பவம் நேற்று காலை பதிவாகியுள்ளது. இச்சம்பவம் நேற்று காலை 9 மணியளவில் கந்தசுவாமி ஆலயம் முன்பாக இட ம்பெற்றுள்ளது. சொகுசு கார் வீதியின் மறுபக்கத்திற்கு கடக்க முற்பட்ட போது யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த ரிப்பர் மோதியுள்ளது. விபத்தில் சிக்கிய கார் பலத்த சேதமடைந்துள்ளது. எனினும் காரில் பயணித்த சிரேஷ்ட சட்டத்தரணி சிவபாலசுப்ரமணியம் தெய்வாதீனமாக எவ்வித பாதிப்புமின்றி தப்பித்தார்.

இதனால் ஏ 9 வீதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டிருந்தது. இதனையடுத்து கூடியிருந்த இளைஞர்களின் உதவியுடன் பொலிஸார் சீர்செய்தனர். இச்சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## இந்திய மீனவர்கள் கைது விவகாரம்; ராமேஸ்வரம் மீனவர்கள் கண்டனம்



இலங்கை கடற்படையின் கைது நடவடிக்கையை கண்டித்து நேற்று வெள்ளிக்கிழமை (25) முதல் ராமேஸ்வரம் மீனவர்கள் காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட போவதாக ராமேஸ்வரம் மீனவர்கள் நேற்று வியாழக்கிழமை (24) காலை நடத்திய அவசர ஆலோசனை கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர்.

ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரம் மற்றும் மண்டபம் மீன்பிடி துறை முகங்களில் இருந்து அரசு மீன்பிடி அனுமதி சீட்டு பெற்று நேற்று முன்தினம் புதன் கிழமை காலை மீன் பிடிக்க கடலுக்குள் சென்ற ராமேஸ்வரத்தை சேர்ந்த 12 மீனவர்களையும், மண்டபத்தைச் சேர்ந்த 4 மீனவர்கள் என மொத்தமாக 16 மீனவர்களை எல்லை தாண்டி மீன் பிடித்ததாக இலங்கை கடற்படையினர் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மீனவர்கள் மீதான இக்கைது நடவடிக்கையை கண்டித்து நேற்று வியாழக்கிழமை (24) காலை ராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்தில் அனைத்து விசைப்படகு மீனவ சங்க மீனவர்கள் அவசர ஆலோசனை கூட்டம் நடத்தினர். கூட்டத்தில் இலங்கையில் தற்போது நிலவிவரும் கடும் பொருளாதார வீழ்ச்சியிலிருந்து இலங்கை நாட்டை மீட்பதற்காக இந்திய அரசு பல ஆயிரம் கோடி ரூபாய் நிதி அளித்துள்ளது.

நிதி உதவியை பெற்றுக் கொண்ட இலங்கை அரசு அதற்கு கைமாறாக ஒரே இரவில் 16 மீனவர்களை சிறை பிடித்துள்ளது.

இதற்கு ராமேஸ்வரம் மீனவ சங்கம் கடும் கண்டனத்தை பதிவு செய்து கொள்வதுடன், தமிழக மீனவர்களை இலங்கை கடற்படை கைது செய்ததை கண்டித்து நேற்று (25) முதல் ராமேஸ்வரம் விசைப் படகு மீனவர்கள் காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக முடிவு செய்துள்ளனர். இலங்கை கடற்படையால் சிறை பிடிக்கப்பட்டுள்ள ராமேஸ்வரம் மீனவர்களை உடனடியாக படகுடன் விடுதலை செய்ய வலியுறுத்தி எதிர்வரும் சனிக்கிழமை (26) காலை ராமேஸ்வரம் மத்திய பஸ் நிலையம் எதிரே மீனவர்கள் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்த முடிவு செய்து தீர்மானம் நிறைவேற்றினர்.

மீனவர்களின் இந்த காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டத்தால் ராமேஸ்வரத்தில் உள்ள சுமார் 800 க்கும் மேற்பட்ட விசைப்படகுகள் கடற்கரையில் நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டுள்ளது.

## குடும்ப அட்டையை காண்பித்து எரிவாயு பெறவேண்டிய நிலை

சாவகச்சேரி விசேட நிருபர்

சாவகச்சேரியில் எரிவாயு விநியோகிக்கும் நிறுவனமொன்றில் நேற்று வியாழக்கிழமை காலை குடும்ப அட்டை மற்றும் தேசிய அடையாள அட்டை பிரதி ஆகியவற்றை காண்பித்து பொதுமக்கள் எரிவாயு பெற்றமையை அவதானிக்க முடிந்தது. எரிவாயு விநியோகம் இடம்பெறுவதனை அறிந்த மக்கள் பலரும் நீண்ட வரிசையில் காத்திருந்ததுடன் அவ்விடத்தில் அசாதாரண நிலைமைகளைக் கட்டுப்படுத்துவதற்காக பொலிஸாரும் கடமைக்கு அமர்த்தப்பட்டிருந்தனர்.

## பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பான விழிப்புணர்வு செயற்திட்டம்





யாழ்.விசேட நிருபர்

பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழிப்பதற்கான சுலோகங்கள் அடங்கிய ஸ்டிக்கர் வாகனங்களில் ஒட்டப்பட்டதுடன் துண்டுப்பிரசுரங்களும் வழங்கி வைக்கப்பட்டது.

நேற்று காலை 9 மணியளவில் யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் இந்த விழிப்புணர்வு நிகழ்வு ஆரம்பமானது.

"அனைவருக்கும் இனிமையான பயணம்" எனும் தொனிப்பொருளில் மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் தேசிய பெண்கள் குழு, யாழ்ப்பாண மாவட்ட செயலகத்துடன் இணைந்து பொதுப் போக்குவரத்து பஸ்களில் பெண்களுக்கெதிரான வன்முறைகளை இல்லாதொழிப்பதற்காக விழிப்புணர்வு மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது முன்னாள் மகளிர் சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் செயலாளரும், தற்போதைய தேசிய பெண்கள் குழு உறுப்பினருமான இமெல்டா சுகுமார், யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன், மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன், யாழ் மத்திய பஸ் நிலைய முகாமையாளர், மாவட்ட செயலக அதிகாரிகள் உத்தியோகஸ்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.



பூமணியம்மா அறக்கட்டளையின் இலங்கை கிளையினரால் யாழ். கல்லுண்டாய் வெளிப் பிரதேச மக்களுக்கு இலவச சித்த ஆயுள்வேத மருத்துவ முகாம் நடாத்தப்பட்டது.
(படம்: வேலணை குறூப் நிருபர்)




உலக காச நோய் தினமான நேற்று (24.03) வவுனியாவில் விழிப்புணர்வு பேரணி ஒன்று இடம்பெற்றது. காசநோய் தொடர்பாக மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் வவுனியா மாவட்ட வைத்தியசாலை காசநோய் கட்டுப்பாட்டு பிரிவின் ஏற்பாட்டில் விழிப்புணர்வு பேரணி இடம்பெற்றது. படம்: வவுனியா விசேட நிருபர்

# கிழக்கின் குரல்



# சேதன பசளை உற்பத்தியை அதிகரித்து விவசாயிகளுக்கு உதவ விசேட திட்டம்

## கல்முனை மாநகர சபை தீர்மானம்

(கல்முனை விசேட நிருபர்)



சேதனப் பசளை உற்பத்தியை அதிகரித்து, விவசாயத்துறைக்கு பங்களிப்பு செய்வதற்கான விசேட திட்டத்தை நடைமுறைப்படுத்துவதென கல்முனை மாநகர சபை தீர்மானித்துள்ளது.

கல்முனை மாநகர சபையின் மாதாந்த பொதுச் சபை அமர்வு புதன்கிழமை (23) மாநகர முதல்வர் ஏ.எம்.றகீப் தலைமையில் இடம்பெற்ற போதே இவ்விடயம் குறித்து ஆராயப்பட்டு, இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்விடயத்தை முன்மொழிந்து கருத்து தெரிவித்த மாநகர சபையின் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினர் சி.எம்.முபீத், 40 ஆயிரம் ரூபாவுக்கு கூட யூரியா உரத்தைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படுவதால், எமது மாநகர சபையினால் சேகரிக்கப்படுகின்ற உக்கக்கூடிய கழிவுகளைக் கொண்டு, பசளைகளை உறபத்தி செய்து, விவசாயிகளுக்கு நல்ல விலையில் அவற்றை விற்று, உதவ வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்தார்.

இதனை ஆமோதித்து கருத்து வெளியிட்ட சாய்ந்தமருது சுயேச்சைக்குழு உறுப்பினர் அப்துல் அஸீஸ், உரத்தட்டுப்பாடு நிலவி வருகின்ற இன்றைய சூழ்நிலையில், இயற்கை சேதனப் பசளைக்கு நல்ல கிராக்கி இருப்பதாகவும், அவற்றை மிகையாக உற்பத்தி செய்து எமது பகுதியிலேயே சந்தைக்கு விடுவோமாயின், விவசாயிகள் தாமே முன்வந்து, கொள்வனவு செய்வார்கள் எனவும் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த மாநகர முதல்வர் ஏ.எம்.றகீப், எமது மாநகர சபைக்கு சொந்தமான பசளை உற்பத்தி நிலையத்தில் உக்கக்கூடிய கழிவுகளைக் கொண்டு, முடியுமானளவு பசளை உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது. அங்கு இயந்திர வசதிகளை மேம்படுத்தும்போது உற்பத்தியை இன்னும் அதிகரிக்க முடியுமாக இருக்கும். அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என தெரிவித்தார்.

# உலக காசநோய் தின விழிப்புணர்வு ஊர்வலம்



(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

உலக காசநோய் தினத்தை முன்னிட்டு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் காசநோய் தடுப்பு சுகாதாரப் பிரிவு, அதன் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.திலிப் மபாஸ் தலைமையில் ஒழுங்கு செய்திருந்த காசநோய் விழிப்புணர்வு ஊர்வலம், வியாழக்கிழமை (24) பணிமனை முன்றலில் இருந்து ஆரம்பித்து கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை முன்றல் வரை இடம்பெற்றது.

இந் நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம்.றிபாஸ், பிரதி பணிப்பாளர், டாக்டர் எம்.பி.ஏ. வாஹிட், தொற்றாநோய் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஐ. எம்.எஸ். இர்ஸாத், சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலை பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஸனூஸ் காரியப்பர், பிரதேச வைத்தியர்கள், தாதி உத்தியோஸ்தர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், அலுவலக உத்தியோஸ்தர்கள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# கிண்ணியாவில் வாழ்வாதார உதவிகள் வழங்கி வைப்பு



கிண்ணியா நிருபர்

விதாதா செயற் திட்டத்தின் கீழ் பாரம்பரியக் கைத் தொழில் செய்பவர்களுக்கான வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டதுடன், சௌபாக்கியா உற்பத்திக் கிராமம் வேலைத் திட்டத்தின் கீழ், உப்பு உற்பத்திக்கான வாழ்வாதார உதவிகளும் வழங்கி வைக்கப்பட்டன. இந் நிகழ்வு கிண்ணியா பிரதேச செயலகத்தில் உதவி பிரதேச செயலாளர் பாஹிமா றிஷ்வி தலைமையில் திங்கட்கிழமை (21) நடைபெற்றது.

கிண்ணியா பிரதேச செயலகத்திற்குற்பட்ட ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவிலுமுள்ள தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு மாவு அரைக்கும் இயந்திரம், மிளகாய் அரைக்கும் இயந்திரம்,தோல் பை தைப்பதற்கான இயந்திரம்,தயிர் மற்றும் நெய் உற்பத்தி இயந்திரம், தச்சு உபகரணங்கள் என்பன வழங்கப்பட்டன.

இந் நிகழ்வில் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் நிமல் காமினி ஹேவா விதானகே, பாராளுமன்ற உறுப்பினர் கபில நுவான் அத்துக்கோரலவின் இணைப்பாளர் அப்துல் சத்தார், பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக்கின் செயலாளர் எம். நிஹார், இலங்கை பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தர் இப்றாஹீம் சதாத், கிண்ணியா பிரதேச செயலக பதில் திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் ஐ. முஜீப் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# சமுர்த்தி தொழில் முனைவோருக்கான பயிற்சி நெறியின் இறுதிநாள் நிகழ்வு



வாச்சிக்குடா விஷேட நிருபர்

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் யூலிட் நிறுவனத்துடன் இணைந்து முன்னெடுத்த சமுர்த்தி தொழில் முனைவோருக்கான ஐந்து நாள் பயிற்சி நெறியின் இறுதிநாள் நிகழ்வு, ஆலையடிவேம்பு பிரதேச செயலக கலாசார மண்டபத்தில் புதன்கிழமை (23) இடம்பெற்றது.

சமுர்த்தி பயனாளிகளின் தொழில் திறனை அதிகரித்து அதனூடாக அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கில், முன்னெடுக்கப்பட்ட இப்பயிற்சி நெறியில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் கலந்துகொண்டு பயிற்சி நெறியை நிறைவு செய்தனர்.

ஆலையடிவேம்பு பிரதேச செயலக தலைமையக சமுர்த்தி முகாமையாளர் என்.கிருபாகரன் தலைமையில் இடம்பெற்ற இறுதிநாள் பயிற்சி நெறி நிகழ்வில், உதவிப் பிரதேச செயலாளர் ஆர்.சுபாகர் கலந்து கொண்டார்.

நிகழ்வில் முகாமைத்துவ பணிப்பாளர் சிவப்பிரியா சுதாகரன், திட்ட முகாமையாளர் க.சத்தியப்பிரியன் உள்ளிட்டவர்களும் கலந்து கொண்டதுடன், வளவாளர்களாக இணைந்து கொண்டு பயிற்சி நெறியை சிறப்பாக நடாத்திய சமுர்த்தி முகாமையாளர்களான என்.வி.எம்.ஹுசைன் மற்றும் எம்.ஏ.ஏ.நஜீம் ஆகியோரும் பங்கேற்றனர். பயிற்சி நெறியில் கலந்து கொண்டவர்கள் தங்களது அனுபவ பகிர்வினை பகிர்ந்து கொண்டதுடன், அரசாங்கம் உள்ளிட்ட அதிகாரிகளுக்கும் வளவாளர்களுக்கும் நன்றி தெரிவித்தனர்.

# இளைஞர் சேவை மன்ற அலுவலகம் அம்பாறைக்கு மாற்றுவது உகந்ததல்ல

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிழக்கு மாகாண அலுவலகம் அம்பாறைக்கு இடமாற்றப்படுவது தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என, மு.கா பிரதிப் பொருளாளர் ஏ.சி.யஹியாகான் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சாய்ந்தமருதில் நீண்ட காலமாக இயங்கி வரும் கிழக்கு மாகாண அலுவலகத்தின் செயற்பாடுகளை தொடர்ந்தும் அதே இடத்தில் மேற்கொள்ள வேண்டும் என, மு.கா.தலைவர் ஹக்கீம் மற்றும் அம்பாறை மாவட்ட எம்.பீக்களான ஹரீஸ், பைசால் காசீம் ஆகியோரிடம் வேண்டியுள்ளேன்.

இந்த விடயத்தில் தலைவர் ஹக்கீமும் எம்.பீக்களும் உறுதியான நிலைப்பாட்டில் உள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிழக்கு மாகாண அலுவலகம், சாய்ந்தமருதிலுள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்குச் சொந்தமான கட்டடத்தில் இயங்கி வருகிறது.

மு.கா எம்பீக்களான ஹரீஸ் மற்றும் பைசால் காசீம் ஆகியோர் மிக விரைவில் இடமாற்றம் இரத்து செய்யப்பட்டது என்ற தகவலை அறிவிப்பர் என்றும் அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# பிரதிக்கல்வி பணிப்பாளர் நேரில் சென்று வாழ்த்து



(வாழைச்சேனை விசேட நிருபர்)

மட்டக்களப்பு மத்தி வலயக் கல்வி அலுவலகப் பிரிவின் கீழ் இயங்கும் ஓட்டமாவடி கல்விக் கோட்ட பாடசாலைகளில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைகளில் திறமைகளை வெளிப்படுத்திய பாடசாலைகளுக்கு பிரதிக் கல்விப் பணிப்பாளரும் ஓட்டமாவடி கோட்டக் கல்விப் பணிப்பாளருமாகிய வீ.ரி.அஜ்மீர் நேரடியாக சென்று வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றார்.

இதன் அடிப்படையில் வாழைச்சேனை வை.அஹமட் வித்தியாலயத்திற்கு வருகை தந்த பிரதிக் கல்விப் பணிப்பாளர் மாணவர்களை அதிபர் காரியாலயத்திற்கு அழைத்து தனித்தனியாக கைகுலுக்கி பாராட்டுக்களை தெரிவித்ததோடு, கற்பித்த ஆசிரியர்களுக்கும் தனது பாராட்டுக்களை தெரிவித்தார்.

இப்பாராட்டு நிகழ்வில் அதிபர் ஹரீஸ், கற்பித்த ஆசிரியர்களான பீ.தயாபரன்,எம்.ரீ.எம்.நிதாஸ் அவர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

# நீர் மாசடைவதால் மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுப்பு

## தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் றமீஸ் அபூபக்கர்

(ஒலுவில் விசேட,நிந்தவூர் குறூப் நிருபர்கள்)



இலங்கை சிறந்த நீர் வளத்தை கொண்ட நாடாக இருந்த போதிலும், நன்னீர் மாசடைவதால் மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருவதாக, தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தெரிவித்தார். தென்கிழக்குப் பல்கலைக்கழகம் மற்றும் சம்மாந்துறை பிரதேச செயலகம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்யப்பட்ட "உலக நீர் தினம்" வைபவம் செவ்வாய்க்கிழமை (22) சம்மாந்துறை செல்நெல் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

உலகளாவிய ரீதியில் 2.2 மில்லியன் மக்கள் சுத்தமான நீரின்றி சிரமப்படுகின்றனர். நீர், சுகாதாரம் போன்ற விடயங்கள், 2030ஆம் ஆண்டுக்குள் அனைவருக்கும் சமமாக கிடைக்க வேண்டும் என்பதே இத்தினத்தினுடைய பிரதானமான மையக்கருத்தாகும். எதிர்கால சந்ததியினருக்கு கிடைக்கக்கூடிய வகையில் நீரினை சிக்கனமாக பயன்படுத்த வேண்டியது ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

இலங்கையில் பெரும் வளமாக காணப்படுவது நிலத்தடி நீராகும். நிலத்தடி நீர்வளமானது கைத்தொழில் உற்பத்திகள், விவசாயம் மற்றும் அன்றாட தேவைகளுக்கு பயன்படுத்தப்படுகின்றது.

அத்துடன் நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் ஆழமற்ற கிணறுகள் மூலம் நீர் பெறப்படுகின்றன, அத்துடன் ஆற்றுச் சமவெளி, பரந்த சமவெளி பிரதேசங்களில் ஆழமற்ற கிணறுகளில் நன்னீர் பெறப்படுகின்றன. நாட்டில் பல பகுதிகளில் மக்கள் நன்னீரை பெற முடியாமல், மாசடைந்த நீரினையும், உவர் நீரினையும் பயன்படுத்தி வருகின்றனர். இதனால் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகின்றதென்றார்.



வரிப்பத்தான்சேனை வீ.சி இளைஞர் விளையாட்டு கழகத்தின் 12 வது நிறைவாண்டை முன்னிட்டு வீரர்கள் கௌரவிப்பும், கழகத்தின் உத்தியோகபூர்வ மேலங்கி அறிமுக நிகழ்வும் அண்மையில் வரிப்பத்தான்சேனை சிங்கார தோப்பில் இடம் பெற்ற போது. (படம்; வரிப்பத்தான்சேனை தெற்கு குறூப் நிருபர்)

# விறகுக்கு சென்ற நபர் சடலமாக மீட்பு

(றொட்டவெவ குறூப் நிருபர்)

திருகோணமலை சீனக்குடா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முத்துநகர் பிரதேசத்தில், விறகுக்குச் சென்ற நபரொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக சீனக்குடா பொலிஸார் தெரிவித்தனர்.

கிண்ணியாவில் இருந்து விறகு வெட்டுவதற்காக திருகோணமலை முத்துநகர் பிரதேசத்திற்கு சென்ற நபர் வியாழக்கிழமை (24) அதிகாலை சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் ரஹ்மானியா நகர், கிண்ணியா 01 ஐ சேர்ந்த அப்துல் கபூர் (வயது 65) என ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது, கிண்ணியா பிரதேசத்தில் இருந்து விறகு வெட்டுவதற்காக முத்துநகர் பிரதேசத்திற்கு செல்வதாக குடும்பத்தினருக்கு தெரிவித்த நிலையில், நேற்று இரவு அவர் வீடு திரும்பாத நிலையில், குறித்த நபரை குடும்பத்தினர் தேடி வந்த சந்தர்ப்பத்தில் வியாழக்கிழமை அதிகாலை முத்துநகர் காட்டுப்பகுதியில் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர் .



மருதமுனை அல் மனார் தேசிய பாடசாலையிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் இரு ஆசிரியைகளுக்கான கௌரவிப்பு நிகழ்வு பாடசாலை அதிபர் எம்.ஜே.அப்துல் ஹஸீப் தலைமையில் நடைபெற்றது. ஆசிரியர் சேவையிலிருந்து முப்பது ஆண்டுகளுக்கும் அதிகமாக சேவையாற்றி அல் மனாரிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் திருமதி எம். எம்.ஐனுல் ஜாரியா, திருமதி ஐனுன் ஜஹான் நஜிமுதீன் ஆகியோருக்கே இக் கௌரவிப்பு இடம்பெற்றது. படம்; பெரியநீலாவணை தினகரன் நிருபர்

ஆலமுல் இஸ்லாம்
மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

# சிறப்புகள் நிறைந்த மாதம் ரமழான்

ஒரு வருடம் பன்னிரெண்டு மாதங்களை கொண்டுள்ளது. அவற்றில் நான்கு மாதங்கள் சிறப்புக்குரியவை. அதில் ரமழானும் ஒன்று. மனித இனத்துக்கு நேர்வழி காட்டும் அல்குர் ஆன் அருளப்பட ஆரம்பமான இம்மாதம், மனிதர்களது பாவங்கள் மன்னிக்கப்பட்டு பிராத்தனைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நரக விடுதலை அளிக்கப்படக்கூடியதாகவும் உள்ளது.

ஈமான் கொண்ட முஸ்லிம்கள் அனைவர் மீது நோன்பு கடமையாகும். இதனை அல் குர்ஆன், 'ஈமான் கொண்டோர்களே! உங்களுக்கு முன் இருந்தவர்கள் மீது நோன்பு விதியாக்கப்பட்டிருந்தது போன்று உங்கள் மீதும் விதிக்கப்பட்டுள்ளது. (அதன் மூலம்) நீங்கள் இறையச்சமுடையோர் ஆகலாம்' என்று குறிப்பிட்டுள்ளது.

ரமழான் மாதம் எத்தகையதென்றால் அம்மாதத்தில் தான் மனிதர்களுக்கு நேர்வழிகாட்டியாகவும்,நேர்வழியின் தெளிவான அறிவுரைகளைக் கொண்டதும், சத்தியத்தையும் அசத்தியத்தையும் பிரித்துக்காட்டக்கூடிய குர்ஆன் அருளப்பட்டது. **(அல் குர்ஆன் 2:185)**

'மகத்துவமிக்க இரவில் இதை நாம் அருளினோம். மகத்துவமிக்க இரவு என்றால் என்னவென்று உமக்கு தெரியுமா என்ன? மகத்துவமிக்க இரவு ஆயிரம் மாதங்களை விடச் சிறந்தது. வானவர்களும், ரூஹும் அதில் தமது இறைவனின் கட்டளைப்படி ஒவ்வொரு காரியத்துடனும் இறங்குகின்றனர். அந்த இரவு முழுவதும் நலம் பொருந்தியதாக திகழும் வைகறை உதயமாகும் வரை. **(அல் குர்ஆன் 97:15)**

அதேநேரம் இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் ஒன்றாகவும் இது விளங்குகிறது. 'வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வையன்றி வேறு யாருமில்லை என்றும் முஹம்மத் (ஸல்) அவர்கள் அவனது இறைத்தூதர் என்றும் உறுதியாக நம்புதல், தொழுகையை நிலை நிறுத்துதல், ரமழானில் நோன்பு நோற்றல், ஸகாத் வழங்குதல், ஹஜ் செய்தல் ஆகிய ஐந்து கடமைகளின் மீது இஸ்லாம் நிறுவப்பட்டுள்ளது' என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இதேவேளை ரமழானின் சிறப்புகள் குறித்து நபி (ஸல்) அவர்கள் பல சந்தர்ப்பங்களில் எடுத்துக்கூறியுள்ளார்கள்.

அந்த வகையில் 'ரமழான் மாதம் வந்துவிட்டால் வானத்தின் வாசல்கள் திறக்கப்படுகின்றன. நரகத்தின் வாசல்கள் அடைக்கப்படுகின்றன. ஷைத்தான்கள் விலங்கிடப்படுகின்றனர்'

**( ஆதாரம்: முத்தபக்குன் அலைஹி)**

'இம்மாதத்தின் ஒவ்வொரு நன்மையான காரியத்திற்கும் பத்து முதல் எழுநூறு மடங்கு வரை கூலி வழங்கப்படுகிறது. ஆனால் நோன்பு எனக்கே உரியது. அதற்கு நானே கூலி வழங்குவேன்' என்று அல்லாஹ் கூறுகிறான்.

**(ஆதாரம்: முஸ்லிம்)**

யார் ரமழானில் நம்பிக்கையுடனும் நன்மையை எதிர்பார்த்தும் நோன்பு நோற்கிறாரோ அவரது முந்தைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. யார் லைலத்துல் கத்ரில் நம்பிக்கையுடனும் நன்மையை எதிர்பார்த்தும் வணங்குகிறாரோ அவரது பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. **(ஆதாரம்: முத்தபக்குன் அலைஹி).**

'ரமழான் மாதத்தில் உம்ரா செய்வது ஹஜ் (செய்த நன்மை) ஆகும்' **(ஆதாரம்: முத்தபக்குன் அலைஹி)**

'ரமழானுடைய ஒவ்வொரு இரவிலும் பகலிலும் நரகத்திற்குரியவர்கள் விடுதலைச் செய்யப்படுகின்றனர், இன்னும் ஒவ்வொரு முஸ்லிமுக்கும் ஏற்றுக்கொள்ளத்தக்க ஒரு பிரார்த்தனை இருக்கிறது.' **( ஆதாரம்: அஹ்மத்)**

நபி (ஸல்) அவர்கள் மரணிக்கும் வரை ரமழானின் கடைசிப் பத்து நாட்களில் இஃதிகாஃப் இருந்தார்கள். அவர்களுக்குப் பின் அவர்களின் மனைவியர் இஃதிகாஃப் இருந்தார்கள்.

**(ஆதாரம்: புகாரி)**

'நபி (ஸல்)அவர்கள் ரமழான் காலங்களில் ஜிப்ரீல் (அலை) அவர்களைச் சந்திக்கும் போது வேகமாக வீசும் காற்றைவிட தர்மம் செய்யக்கூடியவர்களாக இருந்தார்கள்' **(ஆதாரம்: புஹாரி)**

'எவர் ஒருவரை நோன்பு திறக்க வைப்பாரோ அவருக்கு அந்த நோன்பாளிக்குக் கிடைக்கும் கூலியைப் போன்றே வழங்கப்படும். அவரது கூலியில் எந்த ஒன்றும் குறைக்கப்பட மாட்டாது' **(ஆதாரம்: அஹ்மத், திர்மிதி)**

இஸ்லாமிய வரலாற்றில் நிகழ்ந்த மாபெரும் தியாக நிகழ்ச்சியே பத்ர் போர் ஆகும். இது ஹிஜ்ரி 2ஆம் ஆண்டு ரமழான் பிறை 17ல் நடந்தது.

'பத்ரு' போரில் நீங்கள் மிகவும் சக்தி குறைந்தவர்களாக இருந்த போது, அல்லாஹ் உங்களுக்கு உதவி புரிந்தான். ஆகவே நீங்கள் நன்றி செலுத்துவதற்காக அல்லாஹ்வுக்கு அஞ்சி நடந்து கொள்ளுங்கள். **(3:123)**

'சொர்க்கத்தில் ரய்யான் என்று கூறப்படும் ஒரு வாசல் இருக்கிறது. மறுமை நாளில் அதன் வழியாக நோன்பாளிகள் நுழைவார்கள். அவர்களைத் தவிர வேறு எவரும் அதன் வழியாக நுழைய மாட்டார்கள். நோன்பாளிகள் எங்கே?' என்று கேட்கப்படும். உடனே அவர்கள் எழுவார்கள். அவர்களைத் தவிர வேறு எவரும் அதன் வழியாக நுழைய மாட்டார்கள். அவர்கள் நுழைந்ததும் அவ்வாசல்கள் அடைக்கப்பட்டுவிடும். அதன் வழியாக வேறு எவரும் நுழைய மாட்டார்கள்' **(ஆதாரம்: புகாரி, முஸ்லிம்)**

'நோன்பு நரகத்திலிருந்து காக்கும் கேடயமாகும். நோன்பாளியின் வாய் நாற்றம் அல்லாஹ்விடம் கஸ்தூரியை விடச் சிறந்ததாகும்' **(ஆதாரம்: புகாரி)**

'நோன்பாளிக்கு இரண்டு மகிழ்ச்சிகள் உள்ளன. ஒன்று நோன்பு துறக்கும் போது ஏற்படும் மகிழ்ச்சி. மற்றையது தனது இறைவனைச் சந்திக்கும் போது கிடைக்கும் மகிழ்ச்சி'

**(ஆதாரம்: புகாரி)**

'நோன்பும், அல் குர்ஆனும், மறுமையில் ஓர் அடியானுக்காக பரிந்து பேசும். நோன்பு கூறும், 'நான் இவ்வடியானை உணவை விட்டும், இச்சைகளை விட்டும் தடுத்திருந்தேன், இவன் விசயத்தில் பரிந்துரைப்பாயாக'! அல் குர்ஆன் கூறும் 'நான் இவனை இரவில் தூங்கவிடாமல் தடுத்திருந்தேன். எனவே இவனுக்கு பரிந்துரை செய்வாயாக' என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். **(ஆதாரம்: அஹ்மத்)**

' மூன்று துஆக்கள் ஏற்றுக்கொள்ளப்படும். நோன்பாளியின் துஆ, அநீதியிழைக்கப்பட்டவனின் துஆ, பயணியின் துஆ' **(ஆதாரம்: பைஹகி)**

'எவர் ரமழான் இரவில் ஈமானுடனும் நற்கூலி கிடைக்கும் என்ற எண்ணத்துடனும் நின்று வணங்குகிறாரோ அவரது முன் சென்ற பாவங்கள் அவருக்கு மன்னிக்கப்படுகின்றன' **(ஆதாரம்: புகாரி, முஸ்லிம்)**

யார் அல்லாஹுக்காக ஓர் நோன்பு நோற்கின்றாரோ அவருடைய முகத்தை அல்லாஹ் நரகத்தை விட்டும் எழுபது வருட தூரத்திற்கு தூரமாக்கி விடுகின்றான்,**(ஆதாரம்: முஸ்லிம்)**

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள் மிம்பரில் ஏறி, 'ஆமீன், ஆமீன், ஆமீன்' என்றார்கள். அப்போது, 'அல்லாஹ்வின் தூதரே! நீங்கள் மிம்பரில் ஏறும் போது, ஆமீன், ஆமீன், ஆமீன் என்று கூறினீர்களே!' என்று கேட்கப்பட்டது. அதற்கு நபி (ஸல்) அவர்கள், ஜிப்ரீல் (அலை) அவர்கள் என்னிடம் வந்து, 'எவர் ரமழான் மாதத்தை அடைந்து அவருடைய பாவங்கள் மன்னிக்கப்படாமல் நரகம் புகுவாரோ அவரை அல்லாஹ் (தன் அருளிலிருந்து) தூரமாக்கட்டும்' என்று கூறி 'ஆமீன் என்று சொல்லுங்கள்' என்றார்கள்.. அதன்படி செய்தேன். **(ஆதாரம்: இப்னு ஹிப்பான்)**

'யார் பொய்யான பேச்சுக்களையும் பொய்யான நடவடிக்கைகளையும் விடவில்லையோ அவர் பசித்திருப்பதோ தாகித்திருப்பதோ அல்லாஹ்வுக்குத் தேவை இல்லை' **(ஆதாரம்: புகாரி)**

'நீங்கள் நோன்பு வைத்திருக்கையில் கெட்டப் பேச்சுக்கள் பேசுவதோ கூச்சலிடுவதோ கூடாது. யாரேனும் ஏசினால், அல்லது சண்டையிட முற்பட்டால் 'நான் நோன்பாளி' என்று கூறி விடவும். **(ஆதாரம்: புகாரி, முஸ்லிம்)**

'ஸஹர் உணவு பரக்கத் நிறைந்ததாகும், அதை நீங்கள் விட்டுவிட வேண்டாம். ஒரு மிடருத் தண்ணீரையாவது குடிப்பதைக் கொண்டு ஸஹர் செய்யுங்கள். நிச்சயமாக அல்லாஹ் ஸஹர் செய்பவர்கள்மீது அருள்புரிகிறான், வானவர்கள் அல்லாஹ்விடத்தில் அவர்களுக்கு அருள்வேண்டி பிரார்த்திக்கின்றனர்' **(ஆதாரம்: அஹ்மத்).**

'எனது சமுதாயத்தினர் ஸஹர் செய்வதை பிற்படுத்தும் காலம் வரையும், நோன்பு திறப்பதை அவசரப்படுத்தும் காலம்வரை நன்மையில் இருக்கின்றனர்' **(ஆதாரம்: முத்தபகுன் அலைஹி)**

இவ்வாறு ரமழான் மாத நோன்பு குறித்தும் அதன் சிறப்புகள் குறித்தும் நபி (ஸல்) அவர்கள் எடுத்தியம்பியுள்ளார்கள். மனிதனை தூய்மைப்படுத்தும் இந்நோன்பு ஒவ்வோர் வருடமும் வருகின்றது. அதனால் ரமழான் மாதத்தை அடைந்து கொள்ளும் அனைத்து முஸ்லிம்களும் நோன்பு நோற்று இறைவணக்கங்களில் ஈடுபட்டு ஈரூலகிலும் விமோசனம் பெற்றிட முயற்சிக்க வேண்டும்.

**தொகுப்பு:**
**ஆர்.எம். அர்ஷாத்**
**பேராதனைப் பல்கலைக்கழகம்**

# மனிதனின் மூன்று சொத்துகள்

வாழ்வில் முன்னேறத் துடிக்கும் ஒவ்வொருவரும் கடுமையாக உழைக்கிறார்கள். ஓய்வின்றி கண்விழித்து பாடுபடுகிறார்கள். இரவும் பகலும் உடலை வருத்தி, உணவை சுருக்கி, ஓய்வை குறைத்து, உடல்நலம் பேணாமல் பொருளாதாரத்தை மட்டுமே இலக்காக வைத்து தானியங்கி இயந்திரத்தை போன்று வேலை செய்து கொண்டிருக்கிறார்கள்.

கருவறையிலிருந்து கல்லறை வரைக்கும் சில்லரை தேவை என்ற ஒற்றைக் குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டு மட்டுமே பலர் இயங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

மனித வாழ்க்கைக்கு பொருளாதாரம் அவசியம். ஆனால் பொருளாதாரமும் சொத்தும் மாத்திரம் வாழ்க்கை அல்ல,

'அப்துல்லாஹ் பின் அஷ்ஷிக்கீர் (ரலி) கூறியதாவது: 'நான் நபி (ஸல்) அவர்களிடம் 'மண்ணறைகளைச் சந்திக்கும் வரை அதிகமாக (செல்வத்தை)த் தேடுவது உங்கள் கவனத்தைத் திசை திருப்பிவிட்டது' (அல் குர்ஆன் 102:1,2) என்ற வசனங்களை ஓதிக் கொண்டிருந்தபோது, அவர்களிடம் நான் சென்றேன். அப்போது அவர்கள், 'ஆதமின் மகன் (மனிதன்) எனது செல்வம், எனது செல்வம்' என்று கூறுகின்றான். ஆதமின் மகனே! நீ உண்டு கழித்ததையும், உடுத்திக் கிழித்ததையும், தர்மம் செய்து மிச்சப்படுத்தியதையும் தவிர உனது செல்வத்தில் உனக்குரியது எது?' என்று கேட்டார்கள். ***(ஆதாரம்: முஸ்லிம்)***

அடியான், 'என் செல்வம், என் செல்வம்' என்று கூறுகின்றான். அவனுடைய செல்வங்களில் மூன்று மட்டுமே அவனுக்குச் சொந்தமானதாகும். அவன் உண்டு கழித்ததும், உடுத்திக் கிழித்ததும், அல்லது கொடுத்துச் சேமித்துக் கொண்டதும்தான் அவனுக்குரியவை. மற்றவை அனைத்தும் கைவிட்டுப் போகக்கூடியவையும், மக்களுக்காக அவன் விட்டுச் செல்லக்கூடியவையும் ஆகும்' எனவும் நபி (ஸல்) கூறினார்கள். ***(ஆதாரம்: முஸ்லிம்)***

நமது சொத்து என்பது நாம் சேர்த்து வைப்பவை அல்ல. அவை நமது வாரிசுகளுக்கு உரியவை. நாம் இறந்ததும் அவற்றை அவர்கள் பங்கு வைத்து, பாகம் பிரித்துக் கொள்வார்கள். உண்மையான நமது சொத்து என்பது இதுவரைக்கும் நாம் உண்டு அனுபவித்ததும், உடுத்தி அனுபவித்ததும்தான். மூன்றாவதாக நாம் பிறருக்காக செய்த தர்மம் மறுவுலகில் நமக்கு நன்மைகளாக மாற்றப்பட்டு, நமது கணக்கில் சேமித்து வைக்கப்படுபவையாகும். மற்றவை அனைத்தும் நம் கையை விட்டு சென்றுவிடும்.

உண்மையான சொத்து என்பது நாம் பிறருக்கு செய்யும் பொருளாதார உதவியும், தானதர்மங்களும் மட்டும்தான். இந்த வாய்ப்பு இந்த உலக வாழ்க்கையில் மட்டுமே வாய்க்கும். மறுவுலகில் விருப்பப்படி வாய்ப்பு கிடைக்காது.

'உங்களில் ஒருவருக்கு மரணம் வரும் முன்னரே, நாம் உங்களுக்கு அளித்த பொருளிலிருந்து தான தர்மம் செய்து கொள்ளுங்கள்; (அவ்வாறு செய்யாமல் மரணிக்கும் சமயம்) 'என் இறைவனே! என் தவணையை எனக்கு சிறிது பிற்படுத்தக்கூடாதா? அப்படியாயின் நானும் தானதர்மம் செய்து நல்லவர்களில் ஒருவனாக ஆகிவிடுவேன்' என்று கூறுவான். ஆனால், அல்லாஹ் எந்த ஆத்மாவுக்கும் அதன் தவணை வந்துவிட்டால் (அதனைப்) பிற்படுத்தமாட்டான். நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் தெரிந்தே இருக்கின்றான்". ***(அல் குர்ஆன் 63:10,11)***

அதனால் வாழும் போதே அல்லாஹ்வுக்காக தர்மம் செய்து அவனது அன்பை பெறுவோம்.

# உண்மையான துர்ப்பாக்கியம்!

'ஷகாஉன்' (துன்பம், துர்ப்பாக்கியம்) எனும் சொல்லும் அதிலிருந்து பிறந்த சொற்களும் மூன்று தடவைகள் அல் குர்ஆனின் 'தாஹா' என்ற அத்தியாயத்தில் இடம்பெற்றுள்ளன. 'நீர் துன்பப்பட வேண்டும் என்பதற்காக இக்குர்ஆனை உம்மீது நாம் இறக்கி வைக்கவில்லை'. 'அவன் உங்களிருவரையும் சுவனத்திலிருந்து வெளியேற்றிவிடல் கூடாது. நீங்கள் துன்பத்தில் விழுந்துவிடவும் கூடாது'. 'யார் எனது வழிகாட்டலைப் பின்பற்றினாரோ அவர் வழி தவற மாட்டார். துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகவும் மாட்டார்'

மார்க்கத்தைக்கண்டு, அதனைப் பின்பற்றுவதை நினைத்து எவரும் அச்சமுறக் கூடாது என்பதற்காக இவ்வசனங்கள் அருளப்பட்டுள்ளன. அதனால் அல்லாஹ்வுடைய மார்க்கத்தைப் பற்றிப் பிடிப்பதில்தான் முழுமையான சுபீட்சம், அதிஷ்டம் இருக்கிறது. எவர் அல்லாஹ்வுடைய வழியைப் புறக்கணிக்கின்றனரோ இம்மையிலும் மறுமையிலும் அவர்களது துர்ப்பாக்கிய நிலையை சித்தரிக்கும் வகையில் பின்வரும் வசனங்கள் அமைந்துள்ளன.

'எவன் என்னுடைய நல்லுரையைப் புறக்கணிக்கின்றானோ அவனுக்கு கடினமான வாழ்க்கை இருக்கிறது' **(அல் குர்ஆன் தாஹா: 134).** இவ்வுலகிலேயே இவ்வாறான நிலை என்றால் மறுமையில் அவனது நிலை எவ்வாறிருக்கும் என்பதைச் சொல்லித்தான் தெரிய வேண்டுமென்றில்லை.

'மேலும் மறுமை நாளில் அவனை நாம் குருடனாக எழுப்புவோம். அவன் கேட்பான். 'என் இறைவா! உலகில் நான் பார்வை உள்ளவனாக இருந்தேனே, இங்கு நீ ஏன் என்னை குருடனாக எழுப்பினாய்? அதற்கு அல்லாஹ். 'ஆம், இவ்வாறே நம்முடைய வசனங்கள் உன்னிடம் வந்திருந்தபோது நீ அவற்றை மறந்திருந்தாய். இவ்விதம், வரம்பு மீறிச் செல்வோருக்கும் தம்முடைய இறைவனின் வசனங்களை ஏற்காதிருப்போருக்கும் நாம் கூலி வழங்குகின்றோம். மேலும் மறுமையின் வேதனை மிகக் கடினமானதும் நீடித்து நிற்கக்கூடியதாகவும் இருக்கிறது'. **(அல் குர்ஆன் தாஹா: 124 -127)**

சுபீட்சத்தின் அதி உன்னத நிலை என்பது நீங்கள் உங்களைப் பற்றியும், உங்களது வாழ்வைப் பற்றியும் திருப்தி கொள்ளும் நிலையாகும். உங்களது இரட்சகனையிட்டு நீங்கள் திருப்தியடையும் நிலையாகவும், அவனது திருப்தியை நீங்கள் உணரும் நிலையாகவும் அது விளங்குகிறது. இதனைத்தான் இவ்வத்தியாயத்தின் (தாஹா) இறுதிப்பகுதி சுட்டிக்காட்டுகிறது.

'இவர்கள் இட்டுக்கட்டிக்கூறும் விஷயத்தை நீர் பொறுத்துக்கொள்ளும், சூரியன் உதிப்பதற்கு முன்பும் அது மறைவதற்கு முன்பும், இரவு நேரங்களிலும், பகலின் ஓரங்களிலும் உம்முடைய இறைவனைப் புகழ்ந்து துதுப்பீராக' **(அல் குர்ஆன் தாஹா: 130)**

இறைவனைத் துதித்தல், அவனை ஞாபகப்படுத்தல், அவனுக்கு கட்டுப்படல் என்பனவே மிக உயர்ந்த சுபீட்சத்துக்கு இட்டுச் செல்லும் வழிகளாகும். சுபீட்சம் என்பது மன நிறைவாகும். மனத்திருப்தியை அடைவதைவிட சுபீட்சம் என்று கூற வேறு என்னதான் இருக்கின்றது? அதிகமானோர் பெண்கள், செல்வங்கள், மாளிகைகள், வாகனங்கள் போன்ற ஆசைகளை அனுபவித்த போதிலும் அவர்களுக்கு மனத்திருப்தி கிடைப்பதில்லை. அல்லாஹ்வைத் துதிப்பதன் மூலமும் அவனுக்குக் கட்டுப்படுவதன் மூலமும் ஒரு இறைவிசுவாசிக்குக் கிடைக்கும் மன நிறைவு கிடைக்கப்பெறாதவர்களாக அவர்கள் காணப்படுகின்றனர்.

ஆகவே சுபீட்சத்தையும் விமோசனத்தையும் தேடுபவர்கள் கற்றுணர வேண்டிய அத்தியாயம் தான் சூரா தாஹா. அதனால் அதனை முழுமையாகக் கற்று பயன்பெற முயற்சிப்போம்.

**ஏ.எம். முஹம்மத் ஸப்வான்**
**சீனன் கோட்டை, பேருவளை.**

# தீய விளைவுகளைத் தரும் பெருமை

மனித தீனுல் இஸ்லாம் மனிதனது உளத்தூய்மைக்கு அதிக முக்கியத்துவம் அளித்துள்ளது. ஆன்மாவின் பிரதிபிம்பமாகவே அவனது செயல்பாடுகள் அமைகின்றன. அதனால் ஆன்மா சீர்கேட்டுக்கு உள்ளாகுமாயின் அவனது செயல்பாடுகளிலும் அதன் தாக்கத்தை அவதானிக்கலாம். இதன் விளைவாக மனித வாழ்வு சீர்கெட்டு விடும். இதனைக் கீழ்வரும் நபிமொழி இவ்வாறு குறிப்பிடுகின்றது.

'உடலில் ஒரு சதைத் துண்டு உள்ளது. அது சீர்பெற்று விட்டால் உடல் பூராக சீர்பெற்றுவிடும், அது சீர்கெட்டு விடுமாயின் உடல் பூராகவும் சீர்கெட்டுவிடும், அதுதான் உள்ளம்' என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். **(ஆதாரம்: புகாரி, முஸ்லிம்)**

'அல்லாஹுத்தஆலா உங்கள் உடல், உடை, அழகுகளைப் பார்ப்பதில்லை, அவன் உங்கள் உள்ளத்தையும் (அதனால் ஏற்படும்) விளைவுகளையுமே நோக்குகிறான்' என்ற கருத்தைத் தரும் நபிமொழியும் மனிதன் தன் உள்ளத்தை எந்நேரமும் தூய நிலையில் வைத்திருக்க வேண்டும் என்ற கருத்தையே தருகின்றது.

அல்குர்ஆனை நோக்கும் போது இறை கட்டளைக்கெதிரான முதல் புரட்சி பெருமை என்ற கர்வத்தினால் ஏற்பட்டது என்பதை இலகுவில் புரிந்து கொள்ளலாம். அதாவது ஆதம் (அலை) அவர்களுக்கு 'ஸுஜூது' செய்யுமாறு அல்லாஹுவால் கட்டளையிடப்பட்ட போது மலக்குகள் அதற்குக் கட்டுப்பட்டதனையும் ஷைத்தான் மாறுசெய்ததையும் அல் குர்ஆன் நமக்கு தெளிவுபடுத்துகின்றது. அவனது அடிபணியாமைக்கான அடிப்படைக் காரணம் அவனுள்ளத்தில் தோன்றிய கர்வமேயாகும்.

'அவனோ பெருமை கொண்டு விலகி (நம்முடைய கட்டளையை) நிராகரிப்பவனாகி விட்டான்' **(அல் குர்ஆன்).** ஆக, இந்த ஷைத்தானிய உணர்விற்கு, பாவத்தின் தலைவாயலுக்கு நாம் நம்முள்ளத்தில் இடமளிக்கக் கூடாது.

நபிமார்களின் சத்தியப் போதனைகள் நிராகரிக்கப்பட்டமைக்கும் அவர்களின் உயிர்கள் அநியாயமாகப் பறிக்கப்பட்டமைக்கும் இறைவசனங்கள் பொய்ப்பிக்கப்பட்டமைக்கும் கர்வம் கொண்ட உள்ளங்களே காரணமாக அமைந்தன. நபிமார்களின் போதனைகளை எதிர்த்து அதனை ஏற்றவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் இறங்கியவர்களும் அந்தந்த சமூகத்தைச் சார்ந்த கர்வம் கொண்ட கல் நெஞ்சங்களே என்பதையும் திருமறை நமக்கு உணர்த்திக் கொண்டிருக்கின்றது. இன்றும் சிலர், சத்தியத்தை எடுத்துச் சொல்லும் போது நியாயம் இதுதான் என்பது தெரிந்த பின்னரும், தம்முடைய சுய இலாபங்களை அடைந்து கொள்வதற்காக சத்தியத்தை மறுப்போராகவும் மறைக்கக்கூடிய தவறான கருத்துக்கள், தவறு எனப் பிறரால் விமர்சனம் செய்யப்படும் போது மமதை கொண்டு முன் வைத்த தமது மடமையை மறைக்க சத்தியத்தை மறுத்துத் தமது திறமைகளைப் பயன்படுத்தி நிழலிற்கு நிறம் தீட்டும் நடவடிக்கையில் இறங்கி விடுகின்றனர். அதனால் தானும் கெட்டு, பிறரையும் வழிகெடுப்பதையும் வர்களாகவும் இருக்கின்றனர்.

தம்மிடம் சொத்து செல்வம் இருக்கிறது என்பதனால் மற்றவர்களை தம் அடிமைகளாகக் கருதும் ஏழனப் பார்வையுடையோர் இருக்கவே செய்கின்றனர். ஆனால் தம் செல்வம் நிலையற்றது என்பதை உணரும் நாளை அவர்கள் அடைந்தே தீருவர்.

தனது பொக்கிஷங்களின் சாவிகளைச் சுமக்க ஒரு குழு தேவை என்று கூறுமளவுக்கு செல்வச்செருக்கு கொண்டிருந்த காரூன் பெருமை கொண்டு, இவையெல்லாம் நான் என் திறமையால் தேடிய திரவியங்களே! எனக் கூறி செருக்கோடு வாழ்ந்தான். அதன் விளைவு அவன் சிறுமைப்பட்ட நிலையில் பூமி விழுங்கி மாண்ட சரித்திரத்தையும் அல் குர்ஆனின் 28: 76 -81 வரையான வசனங்கள் குறிப்பிட்டு வைக்கத் தவறவில்லை.

அந்த வகையில் இன்றைய காலத்திலும் பெரும் பெரும் கோடீஸ்வரர்கள் கூட திடீரென ஏழைகளாக மாறிவிடுகின்றனர். கற்றறிந்தவர்களும் கூட பெருமை என்ற படுகுழியில் விழுந்து விடுகின்றனர். 'கற்றது கை மண்ணளவு, கல்லாதது உலகளவு' என்பதை மறந்து தமது நாவன்மை, எழுத்தாற்றல், தர்க்க ஞானம் என்பனவற்றை வைத்து பெருமை கொள்ளும் சிலர், தம்மால் சொல்லப்பட்ட நாம் கண்டும் கேட்டும் வருகின்றோம்.

மேலும், ஏழ்மையிலும் பெருமை கொள்வதை இஸ்லாம் வெறுக்கிறது. 'குடிப்பது கூழ் கொப்பளிப்பது பன்னீர்' என்பது போன்று, சிலருடைய வாழ்க்கை அமைந்திருக்கும். வறுமையில் வாடும் போதும் இவர்களது வாய் செல்வச் செழிப்பில் மலர்ந்தாற்போல் பெருமை பேசும். இவர்களுடன் 'அல்லாஹ் மறுமையில் பேசவும் மாட்டான், கருணைக் கண் கொண்டு பார்க்கவும் மாட்டான்' என்பது நபிமொழியாகும்.

பெருமை எனும் இச்சீர்கேடு பல கொடிய விளைவுகள் தோற்றுவிக்கக்கூடியது. சத்தியத்திற்கு திரையிட்டு, இறைவனின் வெறுப்பையும் கோபத்தையும் தேடித்தரக்கூடியது. உள்ளத்தையே உணர்வற்றதாக்கிவிடும். பெருமை உள்ளத்தில் இடம் பிடித்துவிட்டால் அங்கே நீதி, நேர்மை, நியாயம் என்பவற்றிற்கெல்லாம் இடமிருக்காது. ஆனால் உலகில் பெருமை கொண்டு வாழ்ந்தவர்களின் உலக முடிவு கூட இழிவாகவே அமைந்திருந்திருக்கின்றது, இதற்கு நம்ரூத், பிர்அவ்ன், காரூன் போன்றோரது வரலாறு நல்ல சான்றுகளாகும். ஆகவே தீய விளைவுகளைத் தேடித் தரக்கூடிய பெருமை எனும் இச்சீர்கெட்டிலிருந்து பாதுகாப்பு பெற்றுக்கொள்ள இறைவழிகாட்டல்களின் கீழ் முயற்சிப்போம்.

**நாவின்ன பைசல்...**

# நகர்வலம்



## தினகரன் பத்திரிகையின் 90ஆவது பூர்த்தியை முன்னிட்டு

# பேருவளை மற்றும் தர்கா நகர் பகுதிகளில் முப்பெரும் விழா

### அரசியல், சமூக சேவை பிரமுகர்கள் பங்கேற்பு

**பேருவளை விசேட நிருபர்**

லேக் ஹவுஸ் நிறுவனத்தின் வெளியீடான தினகரன் பத்திரிகையின் 90 ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு பேருவளை மற்றும் தர்கா நகர் தினகரன் வாசகர் வட்டம் ஏற்பாடு செய்துள்ள முப்பெரும் விழா எதிர்வரும் 27 ஆம் திகதி பேருவளை மற்றும் தர்கா நகர் பகுதிகளில் மிக விமர்சையாக நடைபெறவுள்ளது.

இப்பெருவிழாவின் கலை கலாசார மற்றும் பிரமுகர் கௌரவிப்பு நிகழ்வுகள் தர்கா நகர் ஸாஹிரா தேசிய பாடசாலை எம்.ஐ.எம் நளீம் ஹாஜியார் ஞாபகார்த்த மண்டபத்தில் 27 ஆம் திகதி மு.ப 9 மணிக்கு தினகரன், தினகரன வார மஞ்சரி மற்றும் வண்ணவானவில் பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் தே செந்தில் வேலவர் தலைமையில் நடைபெறவுள்ளது.

தர்கா நகர் ஸாஹிரா தேசிய பாடசாலை, அல்ஹம்ரா மகா வித்தியாலயம், அளுத்கம வீதிய முஸ்லிம் மகளிர் தேசிய பாடசாலை, அன்னாசிகளை தமிழ் வித்தியாலயம், மதுகம கலைமகள் மகா வித்தியாலயம், வெலிப்பன்னை ரஹ்மானிய்யா முஸ்லிம் தேசிய பாடசாலை, பேருவளைப் பகுதியில் உள்ள சீனன் கோட்டை அல் ஹுமைஸரா தேசிய பாடசாலை, நளீம் ஹாஜியார் மகளிர் தேசிய பாடசாலை, மாளிகாசேனை ஸேம் ரிபாய் ஹாஜியார் தேசிய பாடசாலை, மஹகொட ஐ.எல்.எம் ஸம்ஸுதீன் மகாவித்தியாலயம் ஆகிய முஸ்லிம், தமிழ் பாடசாலைகளில் மாணவர்களது கலை கலாசார நிகழ்ச்சிகள் இடம் பெறவுள்ளன.

பேருவளை, தர்கா நகர் வாசகர் வட்டத்தின் தலைவரும் பிரபல சமூக சேவையாளருமான தேசமான்ய அல் ஹாஜ் பாஸி ஸுபைர் தலைமையில் இதற்கான பரவலான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சமய சமூக, கலை, கலாசார கல்வி மற்றும் ஊடகத் துறை, மற்றும் விளையாட்டுத் துறைகளில் பணி செய்த 30 பேரும் மற்றும் தேசிய மட்டத்தில் பிரசித்தி பெற்ற 10 பிரமுகர்கள் இந்த விழாவில் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிரதம அதிதியாக இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த ஸில்வா, பாராளுமன்ற உறுப்பினர்களான மர்ஜான் பளீல், இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் ஆகியோர் விஷேட அதிதிகளாகவும் பேருவளை பிரதேச சபைத் தலைவர் மேனக விமலரத்ன, பேருவளை நகர சபைத் தலைவர் மஸாஹிம் முஹம்மத், முன்னாள் பாராளுமன்ற உறுப்பிர் எம்.எஸ்.எம் அஸ்லம் ஹாஜியார், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான இப்திகார் ஜெமீல், எம்.எம்.எம் அம்ஜாத், பேருவளை நகர சபை எதிர்கட்சித் தலைவர் ஹஸன் பாஸி, பேருவளை பிரதேச சபை முன்னாள் தலைவர் ஏ.ஆர்.எம் பதியுத்தீன் உட்பட நகர சபை, பிரதேச சபை உறுப்பினர்கள் உலமாக்கள், பாடசாலை அதிபர்கள், கல்வி அதிகாரிகள், பள்ளிவாசல் நிர்வாகிகள், ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்கள், சமூக சேவையாளர்கள் உட்பட தினகரன் ஆசிரியர்பீடத்தைச் சேர்ந்தவர்கள் உட்பட ஊடகவியலாளர்கள் பலரும் கலந்து கொள்வர் .

அதே சமயம் பேருவளை ஹெட்டிமுல்லை புட்சல் பேர்கர் சிடி விளையாட்டு மைதானத்தில் தினகரன் வெற்றிக்கிண்ணத்திற்காக மாபெரும் உதைப்பந்தாட்டப் போட்டியொன்றும் எதிர்வரும் 27 ஆம் திகதி மாலை நடைபெறவுள்ளது.

இச்சுற்றுப் போட்டியில் வெற்றி பெறும் அணிக்கு தினகரன் வெற்றிக் கிண்ணத்துடன் 25000 ரூபா ரொக்கப் பணமும் இறுதிப் போட்டியில் பங்குபற்றும் அணிக்கு ரனசப் கிண்ணத்துடன் 15000 ரூபா ரொக்கப்பணமும் வழங்கப்படும். அதே சமயம் சிறந்த வீரர், சிறந்த கோல் காப்பாளர் சகல ஆட்ட வீரர், ஆகியோருக்கும் பெறுமதிவாய்ந்த பரிசில்களுடன் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

தினகரன் ஆசிரியர் பீடத்தைச் சேர்ந்த எம்.என்.எம் ரிம்ஸானின் ஏற்பாட்டில் அணிக்கு 5 பேர் கொண்ட உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி அன்றைய தினம் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. அன்றைய தினம் அதேமைதானத்தில் பரிசளிப்பு வைபவம் இடம் பெறும்.

மேலும் தேசமான்ய பாஸி ஸுபைரின் ஏற்பாட்டில் நடைபெற்ற கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டியும் பரிசளிப்பும் அதே தினம் மாலை நடைபெறவுள்ளது. இச்சுற்றுப் போட்டியில் வெற்றி பெறும் அணிக்கு தினகரன் வெற்றிக் கிண்ணத்துடன் 25,000 ரூபா ரொக்கப் பணமும் இறுதிப் போட்டியில் பங்குபற்றும் அணிக்கு ரனசப் கிண்ணத்துடன் 15000 ரூபா ரொக்கப்பணமும் வழங்கப்படும். அதே சமயம் சிறந்த பந்துவீச்சாளர், சிறந்த வீரர், சிறந்த துடுப்பாட்டக்காரர் ஆகியோருக்கும் பெறுமதிவாய்ந்த பரிசில்களுடன் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

# திக்வெல்லை ஸும்ரிக்கு அரச விருது

**அரநாயக்க நிருபர்**



புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் வழிகாட்டலுடன் வானொலி அரச ஆலோசனைக் குழு, இலங்கை கலைக் கழகம், மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்கழகம் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த 'வானொலி அரச விருது விழா 2022' அண்மையில் நடைபெற்றது.

இதில் வானொலிக்கு "கருவேப்பிலைகள் "என்ற மகுடத்தில் நாடகப் பிரதியை எழுதிய திக்வெல்லை ஸும்ரிக்கு அரச விருது கிடைத்துள்ளது. இது முதன்முதலாக வானொலி முஸ்லிம் சேவைக்கு கிடைத்த கீர்த்தியாகும். வானொலி முஸ்லிம் சேவையையும், நாடறிந்த எழுத்தாளர் திக்வெல்லை ஸும்ரியை இலக்கிய வட்டம் வாழ்த்துகிறது.



கொழும்பு 15, மட்டக்குளி கதிரானவத்த அருள்மிகு ஸ்ரீ பத்ரகாளி அம்மன் ஆலய தேர் திருவிழா சிவஸ்ரீ சிவநேசன் குருக்கள் தலைமையில் கடந்த சனிக்கிழமை மாலை நடைபெற்றது. இதன்போது பூஜை இடம்பெறுவதையும் கலந்துகொண்ட பக்தர்களையும் படத்தில் காணலாம். படம்: ஏ.எஸ்.எம். ஜாவித்

# புத்தளம் இஸ்லாஹிய்யாவில் இரு பெரும் நிகழ்வுகள்



**புத்தளம் தினகரன் நிருபர்**

புத்தளம் இஸ்லாஹிய்யா பெண்கள் அரபுக் கல்லூரியின் 26 வது தொகுதி மாணவிகளுக்கான டிப்ளோமோ சான்றிதழ் வழங்கும் வைபவம் மற்றும் பிரியாவிடை நிகழ்வும் அண்மையில் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கல்லூரி அதிபர் அஷ்ஷெய்க் எம்.எச்.எம்.முனீர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், புத்தளம் ஸாஹிரா தேசிய கல்லூரியின் அதிபர் ஐ.ஏ.நஜீம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டதுடன் ஜம் இய்யதுல் உலமா புத்தளம் மாவட்ட தலைவர் அஷ்ஷெய்க் அப்துல்லாஹ் மஹ்மூத் ஆலிம் கௌரவ அதிதியாக கலந்துகொண்டார்.

கல்லூரியின் நிர்வாகக் குழுத் தலைவர் எச். அஜ்மல், கல்லூரி நிறுவன உறுப்பினரும், ஓய்வு பெற்ற ஆசிரியருமான ஏ.சி.எம்.இஸ்மத், சட்ட ஆலோசகர் சட்டத்தரணி பஸுலுர் ரஹ்மான், கல்லூரி விரிவுரையாளர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

ஆராய்ச்சி முறை மற்றும் நூலக தகவல் அறிவியல்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

# ஹம்பாந்தோட்டை மாநகர சபையின் புதிய மேயராக காமினி ஆனந்த தெரிவு

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**



ஹம்பாந்தோட்டை மாநகர சபையின் புதிய மேயராக முன்னாள் பிரதிமேயர் கே. ஜீ. காமினி ஸ்ரீ ஆனந்த மாநகர சபை உறுப்பினர்களுக்கிடையில் இடம்பெற்ற வாக்கெடுப்பில் கூடுதல் வாக்குகளைப் பெற்று ஹம்பாந்தோட்டை மாநகர சபையின் புதிய மேயராக தெரிவு செய்யப்பட்டுள்ளதாக தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் சேனக பல்லியகுருகே நேற்று (24) தெரிவித்தார்.

ஹம்பாந்தோட்டை மாநகர சபையின் தலைவர் எராஜ் ரவீந்திர பிரணாந்து தனது பதவியை இராஜினாமா செய்ததைத் தொடர்ந்தே இப்பதவிக்கு வாக்கெடுப்பு நடாத்தப்பட்டு 11 உறுப்பினர்களின் கூடுதல் வாக்குகளினால் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் பிரதி மேயர் கே. ஜீ. காமினி ஸ்ரீ ஆனந்த புதிய மேயராக தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இவரோடு ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக போட்டியிட்ட எதிர்க் கட்சித்தலைவர் டி. ஏ. காமினிக்கு 09 வாக்குகள் மாத்திரமே கிடைத்ததோடு மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

# அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் மருத்துவ உபகரணங்களுக்கு பற்றாக்குறை

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் மருத்துவ பரிசோதனைகளுக்காக வருகின்ற

நீரிழிவு நோயாளர்களின் இரத்த பரிசோதனை மற்றும் சிறுநீரக நோயாளர்கள் தொடர்பிலான பரிசோதனைக்கு தேவையான இரசாயனம் மற்றும் உபகரணங்கள் இல்லாமையினால் நோயாளிகள் கூடுதலான விலை கொடுத்து தனியார் வைத்தியசாலைகளில் இரத்த பரிசோதனைகளை செய்து கொள்ள நேர்ந்துள்ளதாக நோயாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அநுராதபுரம் மாவட்டத்திற்கு மேலதிகமாக குருநாகல், புத்தளம் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த நோயாளர்களும் மேற்படி போதனா வைத்தியசாலைக்கு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

குறித்த இரசாயனங்கள் இல்லாமை தொடர்பில் அநுராதபுரம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் துலான் சமரவீரவிடம் வினவியபோது வைத்திய பரிசோதனைகளுக்கு தேவையான இரசாயனங்கள் பலவற்றிற்கு கடந்த சில நாட்களில் குறைபாடுகள் நிலவியது. அதனால் அவைகள் சிலவற்றை பெற்றுக்கொள்ள நடவடிக்கை மேற்கொண்டோம். சிறுநீரகம் மற்றும் நீரிழிவு நோய் பரிசோதனைக்கு தேவையான இரசாயன குறைபாடு உள்ளதா என்பது தொடர்பில் பரிசோதனை செய்யும் அதிகாரிகளிடம் கேட்டு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக வைத்தியர் துலான் சமரவீர தெரிவித்தார்.

# வெலிகமயில் புனித ரமழானை முன்னிட்டு ஹதீஸ் மஜ்லிஸ்

**வெலிகம தினகரன் நிருபர்**

புனித ரமழான் மாதத்தையொட்டி வருடாந்தம் நடைபெற்று வரும் விசேட ஹதீஸ் மஜ்லிஸ்கள் இம்முறையும் வெலிகம பகுதியில் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் பிரகாரம், வெலிகம பத்ருப் பள்ளிவாசலில் நடைபெறும் விசேட ஹதீஸ் மஜ்லிஸ் இன்று 25ம் திகதி முதல் 28ம் திகதி திங்கள் கிழமை வரை மிகவிமர்சையாக நடைபெறவுள்ளது.

இம் மஜ்லிஸ் மௌலவி கலீப துஷ்ஷாதுலி எம்.எஸ்.எம். இஸ்திகார் (பாரி), மௌவி அல் உஸ்தாத் முப்தி ஏ.எம். நஜ்முதீன் (ஹிழ்ரி), மௌவி எம்.ஏ.எப். இப்ளால் (பாரி) மற்றும் மௌலவி அல் ஹாபிழ் ஏ.எம். அப்துர் ரஹ்மான் (மழாஹிரி) ஆகியோர் விசேட சொற்பொழிவு ஆற்றவுள்ளனர்.

குர்ஆனும் ரமழானும், இஸ்லாம் கூறும் வியாபாரம், ரமழானும் அமல்களும், இஸ்லாம் கூறும் வாலிபர்கள் எனும் தலைப்புகளில் இவ்விசேட சொற்பொழிவுகள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறிப்பிட்ட தினங்களில் இரவு இஷாத் தொழுகையைத் தொடர்ந்து சொற்பொழிவுகள் இடம்பெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.



இராணுவத்தினரால் திஸ்ஸமகாராமை யடால ராஜ மகா விகாரையில் ஏற்பாடு செய்த இரத்ததான நிகழ்வில் மக்கள் கலந்துகொண்டு இரத்ததானம் வழங்குவதனை படத்தில் காணலாம். படம்: ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்

# உள்நாட்டு தயாரிப்பு துப்பாக்கியுடன் ஒருவர் கைது

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

உள்நாட்டில் தயாரித்த துப்பாக்கியொன்றினை வைத்திருந்த சந்தேக நபர் ஒருவரை கெக்கிராவ பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலொன்றுக்கமைய (19) மாலை கெக்கிராவ ரத்மல்கந்த பகுதியில் நடத்திய சுற்றிவளைப்பின்போது சந்தேக நபரை கைது செய்துள்ளதுடன் உள்நாட்டில் தயாரித்த துப்பாக்கியினையும் கெக்கிராவ பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். கைது செய்யப்பட்டவர் 42 வயதுடைய கெக்கிராவ பகுதியை வசிப்பிடமாக கொண்டவர் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. சந்தேக நபர் துப்பாக்கியினை பயன்படுத்தி கொள்ளைச் சம்பவங்கள் உள்ளிட்ட குற்றச் செயல்களில் ஈடுபட்டுள்ளாரா என்பதை அறிந்து கொள்ள பொலிஸார் பல கோணங்களில் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# மாத்தறை மாவட்ட அஹதிய்யா சம்மேளன பொதுக்கூட்டம்



**வெலிகம தினகரன் நிருபர்**

மாத்தறை மாவட்ட அஹதிய்யா சம்மேளனத்தின் மறுசீரமைப்புக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் அண்மையில் மாத்தறை இல்மா கல்லூரியில் மாவட்ட அஹதிய்யா சம்மேளனத் தலைவர் எம்.ஓ. பஸ்லுர்ரஹ்மான் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் அகில இலங்கை அஹதிய்யா பாடசலையின் மத்திய சம்மேளன நிர்வாகிகளான ஏ.எல். எம். அஸ்வர் (உப தலைவர்), எம். எச்.எம் உவைன் (பொருளாளர்) மற்றும் ஹிஷாம் ஸுஹைல் (உப செயலாளர்) ஆகியோர் கலந்து சிறப்புரை நிகழ்த்தினர்.

நடப்பு வருடத்திற்கான (2022) புதியநிர்வாக சபை தெரிவின் போது தற்போதைய நிர்வாக சபையினரே மீண்டும் ஏகமானதாக தெரிவுசெய்யப்பட்டனர்.

இதில் மாத்தறை மாவட்ட 13 அஹதிய்யா பாடசாலை ஆசிரியர்கள், உலமாக்கள், கல்விமான்கள், சமூகசேவையாளர்கள் என பலரும் கலந்து கொண்டமை விசேட அம்சமாகும்.

## வேகக்கட்டுப்பாட்டை இழந்த

# ஆட்டோ மோதி சிறுமி உயிரிழப்பு

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

பெண் சாரதி ஒருவர் ஓட்டிச் சென்ற முச்சக்கரவண்டியொன்று வேகக் கட்டுப்பாட்டினை இழந்து விபத்துக்குள்ளானதில் ஒன்றரை வயது சிறுமியொருவர் பரிதாபகரமான முறையில் உயிரிழந்துள்ளதாக ஹொரவபொத்தான பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்றுக் காலை ஹொரவபொத்தான ரலபனாவ பாடசாலைக்கு முன்னால் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித்தனர். ஹொரவபொத்தான ரலபனாவ பகுதியை வசிப்பிடமாக கொண்ட ஒன்றரை வயது குழந்தையொன்றே இவ்வாறு உயிரிழந்துள்ளது என்பது தெரியவந்துள்ளது. சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, முச்சக்கரவண்டியின் பின் ஆசனத்தில் அமர்ந்து சென்ற குழந்தை விபத்தில் படுகாயமடைந்துள்ள நிலையில் ஹொரவபொத்தான வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக வேண்டி அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ள நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என்பது மேலும் தெரியவந்துள்ளது. பெண் சாரதியின் கவனயீனம் காரணமாக இவ்விபத்து இடம்பெற்றுள்ளமை தெளிவாகியுள்ளது.

# தேயிலை கொழுந்து உற்பத்தியில் வீழ்ச்சி

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

இரத்தினபுரி மாவட்டத்தில் தேயிலை கொழுந்தின் உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டு வருவதாக சிறு தேயிலை தோட்ட உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பசளை விலை அதிகரிப்பு,தட்டுப்பாடு மற்றும் கடும் வரட்சி என்பன தேயிலைக் கொழுந்தின் உற்பத்தியில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி வருவதாக சிறு தேயிலை தோட்ட உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலைமையால் தேயிலை கொழுந்தின் உற்பத்தி 80 வீதம் வரை வீழ்ச்சி கண்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதனால் இத்தொழில் துறை சார்ந்தோர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக தனியார் சிறு தேயிலை தோட்ட உரிமையாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் தெரிவிக்கின்றனர்.

மேலும் நாட்டின் முக்கிய நீர்நிலைகளான உடவளவை, சமனலவெவ ஆகிய நீர்த்தேக்கங்களில் நீர் மட்டம் வற்றி வருவதால் இந்நிலைமைகளில் அதிக பாதிப்பினை ஏற்படுத்தலாம் எனவும் இவர்கள் கவலை தெரிவித்தனர்.

# பசறையில் திடீர் சுற்றிவளைப்பு 20 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்கு

**பதுளை தினகரன் விசேட நிருபர்**

பசறை நகரிலுள்ள சுமார் 20 வர்த்தக நிலையங்கள், பசறை சுகாதார பிரிவினரால் சுற்றிவளைக்கப்பட்டு, நேற்றுமுன்தினம் (20220323) திடீர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதன்போது விற்பனைக்காக பதுக்கி வைக்கப்படிருந்த, பாவனைக்கு உதவாத, காலாவதியான பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இதனால் 20 வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு எதிரான வழக்கு நேற்று முன்தினம் பசறை சுற்றுலா நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ளது.

# காரின் கீழ் மறைந்து விளையாடிய ஒன்றரை வயது சிறுவன் படுகாயம்

**சாவகச்சேரி விசேட நிருபர்**

பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கிளாலி எழுதுமட்டுவாழ் பகுதியில் நேற்று வியாழக்கிழமை மதியம் காரின் கீழ் மறைந்து விளையாடிய ஒன்றரை வயதுச் சிறுவன் கார் சில்லுக்குள் அகப்பட்டு படுகாயமடைந்துள்ளார்.

தனது வீட்டிற்கு விருந்தினர்களை ஏற்றி வந்த காரின் கீழ் சிறுவன் மறைந்திருப்பதனை அறியாத சாரதி காரை நகர்த்திய போது சிறுவன் சில்லுக்குள் அகப்பட்டு படுகாயமடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதில் கிளாலி எழுதுமட்டுவாழ் பகுதியைச் சேர்ந்த ஒன்றரை வயதான பி.கலிஸ்ரன் என்ற சிறுவனே படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# மின்வெட்டை பயன்படுத்தி கணனி கொள்ளை

**யாழ்.விசேட நிருபர்**

அச்சுவேலி மத்திய கல்லூரி அலுவலகத்தில் மின்வெட்டை சாதகமாக பயன்படுத்தி ஒரு இலட்ச ரூபாய் பெறுமதியான மடிக்கணனி ஒன்று திருடப்பட்டுள்ளது.

அச்சுவேலி பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை மின்வெட்டு நடைமுறையில் இருந்த வேளை, பாடசாலை சூழலில் பொருத்தப்பட்டு இருந்த கண்காணிப்பு (CCTV) கமராக்கள் செயற்படாது இருந்துள்ளது. இதனை பயன்படுத்தி இத்திருட்டு சம்பவம் இடப்பெற்றுள்ளது.

அதேவேளை பாடசாலைக்கு அருகில் பொலிஸ், இராணுவம் இணைந்த காவலரண் ஒன்றும் காணப்படுகின்றது

இச்சம்பவம் தொடர்பில் பாடசாலை நிர்வாகத்தினரால் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் மோப்ப நாயின் உதவியுடன் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# இருளில் மூழ்கிய சாவகச்சேரி வைத்தியசாலை; நோயாளர்கள் அவதி



**சாவகச்சேரி விசேட நிருபர்**

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை ஜெனரேட்டர் (மின்னாக்கி) பழுதடைந்தமையால் நேற்று புதன்கிழமை இரவு வைத்தியசாலை வளாகம் ஒன்றரை மணிநேரம் இருளில் மூழ்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரவு 8 மணி தொடக்கம் 9.30 மணி வரை மின்சாரம் தடைப்பட்டிருந்தமையால் நோயாளர்கள் பெரும் அசௌகரியங்களை அனுபவித்தனர்.

நாட்டில் தற்போது அடிக்கடி மின்சாரம் தடைப்பட்டு வருகின்றமையால் வைத்தியசாலையில் ஜெனரேட்டர் பராமரிப்பிற்குரிய பணியாளர்கள் இருந்தும் இவ்வாறான தடைகள் ஏற்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதனால் நோயாளர்கள் மற்றும் வைத்தியசாலைப் பணியாளர்கள் கடுமையாக பாதிக்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## பொது அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க சம்பனிகள் சட்டத்தின் 9(2) பிரிவின் விதிகளுக்கு அமைவாக கொழும்பு 2, ஸ்ரீ ஜினரத்ன வீதி, இல. 69, ‘ரேணுகா ஹவுஸ்’ இல் பதிவு அலுவலகத்தைக் கொண்ட கார்டியன் கெப்பிட்டல் பார்ட்னர்ஸ் பிஎல்சி (PQ49) தமது பெயரை கோல்.’.பேஸ் கெப்பிட்டல் பார்ட்னர்ஸ் பிஎல்சி என 2022 பெப்ரவரி 24ஆம் திகதி மாற்றம் செய்துள்ளது.

**சபையின் கட்டளைப்படி**
**ரேணுகா என்டர்பிரைசஸ் (பிரைவட்) லிமிட்டட்**
**(செயலாளர்கள்)**

## பெறுகை அறிவித்தல் !

மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா) (மாகாண வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வணிக, வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அலுவல்கள் அமைச்சு – மேல் மாகாணம்)

**அலுவலக ஊழியர்களை போக்குவரத்து செய்வதற்காக வாடகை அடிப்படையில் வேன் வண்டிகளைப் பெற்றுக்கொள்வதற்கான விலைமனுக்கோரல்**

மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குத் தேவையான வேன் வாகனங்களை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்காக வழங்குநர்களிடமிருந்து திறந்த விலைமனுக் கோரப்படுகின்றது.

**விலைமனு அட்டவணை**

| விலைமனு இலக்கம் | விபரம் | விலைமனுப் படிவக் கட்டணம் (அதிகார சபையில் பதிவு செய்யப் பெற்றுள்ள வழங்குநர்கள் தவிர்ந்த) ரூபா | விலைமனுப் பிணைத் தொகை காசாக ரூபா |
|---|---|---|---|
| PRDA/WP/PRO/2022/15 | அலுவலக ஊழியர்களை போக்குவரத்து செய்வதற்காக வாடகை அடிப்படையில் வேன் வாகனங்களைப் பெற்றுக்கொள்வதற்கான விலைமனுக் கோரல். | 1000.00 (பெ.சே.வ இன்றி) | 10,000.00 |

02. 2022.03.28 முதல் 2022.04.08 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 2.45 வரை மேற்படி படிவக் கட்டணத்தைச் செலுத்தி இவ் அதிகார சபையின் பெறுகைப் பிரிவில் இதற்கான விலைமனுப்படிவத் தொகுதியைப் பெற்றுக்கொள்ளலாம். இதற்கான விலைமனுப்பிணையை, காசாக அல்லது வங்கி வரைவு ஒன்றின் மூலம், பெறுகைப் படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின் பிரகாரம் சமர்ப்பித்தல் வேண்டும்.

03. விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளல் 2022.04.11 அன்று பி.ப. 2.30 இற்கு முடிவுறுவதுடன், விலைமனுத்திறத்தல் அன்றைய தினம் அதே நேரம் இவ் அலுவலகத்தில் மேற்கொள்ளப்படும். அவ்வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரின் அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.

**தலைவர்**
**பெறுகைக்குழு**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா)**
**இல. 59, புனித செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு-12**
**தொ.பே. இல. - 011-5676903**

## பெறுகை அறிவித்தல்

**கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணம் மற்றும் கட்டிடப் பொருட்கள் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு**

**அரசாங்கத் தொழிற்சாலைத் திணைக்களம் – கொலொன்னாவ**

**Supply of Hot/ Cold Rolled 8’0’’x4’0’’x01mm Stainless Steel Sheets 100 Nos. as per the JIS.G4304 SUS 316L or equivalent**

**பெறுகை இல. 3/1/1/2102/22Q/2A/176**

1. அரசாங்கத் தொழிற்சாலைத் திணைக்களத்தின் திணைக்கள பெறுகைக்குழு தவிசாளரால் 8’0’’x4’0’’x01mm சூடான/குளிரான சுருட்டப்பட்ட துருப்பிடிக்காத 100 ஷீட்களை வழங்குவதற்காக தகைமை வாய்ந்த மற்றும் கீர்த்தி வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. வழங்கல் செய்வதற்கான காலம் கட்டளை வழங்கப்பட்டதன் பின் 10 வாரங்களாகும்.
2. நாடளாவிய ரீதியில் விலைமனுக்கள் கோரப்படும்.
3. அபகீர்த்தியாளர் (பிளெக் லிஸ்டட்) பட்டியல்படுத்தப்பட்ட வழங்குநர்கள் விலைமனுக்களை வழங்குவதற்கு தகுதியற்றவர்களாவர்.
4. விபரக்குறிப்பு, வழங்கல் கால எல்லை மற்றும் வரைபு மற்றும் மேலதிக விபரங்கள் விலைமனு ஆவணங்களில் தரப்பட்டுள்ளன.
5. இதில் ஆர்வம் கொண்ட கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களை அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களத்தின் பணிப்பாளர் (பொறியியல் வேலை வழங்கல்) / வழங்கல் இயந்திரப் பொறியியலாளர் (தொலைபேசி: (011)2534579/ (011)2572351/2 நீடிப்பு 150 தொலைநகல் (011) 2532278) அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம். அல்லாவிடில் அரச வேலை நாட்களில் 2022-03-25ஆம் திகதி முதல் 2022-04-21ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 04.00 மணி வரையில் அரசாங்கத் தொழிற்சாலைக்கு சமுகம் தந்து விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
6. 2022-03-25ஆம் திகதி முதல் 2022-04-21ஆம் திகதி வரை அரச வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் பணிப்பாளர் நாயகத்திற்கு எழுத்து மூலமான வேண்டுகோள் மற்றும் மீளளிக்கப்படாத 1000.00 ரூபா பணத்தை ரொக்கப் பணமாகச் செலுத்தி ஆங்கில மொழியில் அச்சடிக்கப்பட்ட விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
7. முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட இரு நகல்களிலான விலைமனுக்களை 2022-04-21ஆம் திகதி மு.ப. 11.00 மணி அல்லது அதற்கு முன் தலைவர், பிரதான பெறுகைக்குழு, 3வது மாடி, தொழிற்சாலை பொறியியல் அலுவலகம், அரசாங்கத் தொழிற்சாலைத் திணைக்களம், கொலொன்னாவ எனும் முகவரிக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனடுத்து விலைமனுதாரர் அல்லது அவரது பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
8. விலைமனுதாரரினால் மேற்குறிப்பிடப்பட்ட விலைக்கோரலுக்கு இலங்கையில் செயற்படும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் குறித்த படிவத்தின் பிரகாரம் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பெறுமதிக்கான விலைமனுப் பிணை முறி / வங்கிப் பிணை முறி அல்லது அப்பெறுமதிக்கு அரசாங்கத் தொழிற்சாலைத் திணைக்களத்தின் காசாளருக்கு பி.ப. 3.00 மணிக்கு முன் செலுத்தப்பட்ட பண வைப்புக்கான பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை இணைத்து அனுப்புதல் வேண்டும். அப்பிணை முறிகள் / வங்கிப் பிணை முறிகள் செல்லுபடியாகும் காலம் விலைமனு ஆவணங்களில் தரப்பட்டுள்ளன.
9. கேள்வியின் பெறுமதி 5,000,000.00 ரூபாவை விஞ்சும் பட்சத்தில் வெளிநாட்டு உற்பத்தியாளர்களின் உள்நாட்டு முகவர்கள் 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு செய்து கொண்ட படிவத்தை விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
10. விலைமனுக்கள் சமர்ப்பிப்பதற்கான முன்னோடி தெளிவுபடுத்தல் 2022-04-07ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு அரசாங்கத் தொழிற்சாலைத் திணைக்களத்தின் 3ம் மாடியிலுள்ள பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகத்தில் இடம்பெறும்.

| இல. | பெறுகை இல. | பொருட்களின் விபரம் | விலைமனுப் பிணை முறியின் அளவு | விலை மனுக்கள் திறக்கப்படும் திகதி |
|---|---|---|---|---|
| 03 | **3/1/1/2102/22Q/2A/176** | 8’0’’x4’0’’x01mm சூடான/ குளிரான சுருட்டப்பட்ட துருப்பிடிக்காத 100 ஷீட்களை வழங்குதல் (Supply of Hot/ Cold Rolled 8’0’’x4’0’’x01mm Stainless Steel Sheets 100 Nos. as per the JIS.G4304 SUS 316L or equivalent ) | 63,500.00 | 2022-04-21 |

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக்குழு,**
**பணிப்பாளர் நாயகம் அலுவலகம்,**
**அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களம்,**
**கொலொன்னாவ.**
**2022-03-25.**

## பகிரங்க அறிவித்தல்

**பெரேரா அன் சன்ஸ் (பேக்கர்ஸ்) (பிறைவட்) லிமிட்டட் (கம்பனி இல - PV4086)**
**மற்றும்**
**P&S என்டர்பிரைசஸ் (பிரைவட்) லிமிட்டட் (கம்பனி இல PV 1149) ஐ ஒன்றிணைத்தல்**

(கம்பனி இல PV 4086) இன் கீழ் பதிவு செய்யப்பட்ட பெரேரா அன் சன்ஸ் (பேக்கர்ஸ்) (பிரைவட்) லிமிட்டட் மற்றும் கம்பனி பதிவு இல.1149 இன் கீழ் பதிவு செய்யப்பட்ட, P&S என்டர்பிரைசஸ் (பிரைவட்) லிமிட்டட் சட்டத்தின் 242 பிரிவின் பிரகாரம் ஓர் தனி நிறுவனமாக ஒன்றிணைக்கப்படுவதாக (சட்டம்) 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242 (3) பிரிவின் விதிகளுக்கமைய இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

ஒன்றிணைக்கப்பட்ட கம்பனியின் பெயராக பெரேரா அன்ட் சன்ஸ் (பேக்கர்ஸ்) (பிரைவட்) லிமிட்டட் இருக்கும் அத்துடன் கம்பனிகள் பதிவாளர் நாயகத்தினால், அனுமதிக்கப்பட்ட குறித்த தினத்தில் கூட்டிணைப்பு அமுலுக்கு வரும் ஒன்றிணைக்கப்பட்ட கம்பனியான பெரேரா அன் சன்ஸ் (பேக்கர்ஸ்) (பிரைவட்) லிமிட்டட் இன் பதிவு அலுவலகம் இல - 122-124-MDH ஜயவர்தன மாவத்த, மாதென்னாகொட, ராஜகிரியவில் இருக்கும் பிரிவு 242 (4) இன் கீழான ஒருங்கிணைப்பை அங்கீகரித்த தீர்மானம் ஒன்றிணைப்பு முன்மொழிவாகக் கருதப்படும் அத்துடன் எந்த பங்குதாரர்கள் அல்லது ஒன்றிணைக்கப்பட்ட கம்பனியொன்றின் கடன் கொடுத்தவர்கள் அல்லது ஓர் கடமையின் கீழான எந்த நபருக்கும், கொழும்பு - 03, ரொட்டுன்டா கார்டன்ஸ், இல.12, செயலாளர்களின் பதிவு அலுவலகத்தில் பரிசீலனைக்காக காணப்படும்.

**சபையின் கட்டளைப் பிரகாரம்,**
**மனேஜ்மன்ட் எப்ளிகேசன்ஸ் (பிரைவட்) லிமிட்டட்**
**செயலாளர்கள்**
**இல.12, ரொட்டுன்டா கார்டன்ஸ்**
**கொழும்பு - 03**
**25 மார்ச் 2022**

Agriculture Modernization Project
கமத்தொழில் அமைச்சு
Ministry of Agriculture
THE WORLD BANK
Funded by The European Union

**இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு**

**விவசாயத் துறையை நவீனப்படுத்தும் திட்டம் – கமத்தொழில் அமைச்சு**

**IDA CREDIT No: CR 5873 LK – PROJECT ID NO: P156019**

## பெறுகை அறிவித்தல்

**ASMP கொத்தணிகள் விவசாயிகளின் நிறுவனங்களை நிறுவுவதற்கு செயலாளர் சேவைகளை பெறுவதற்கு சேவை வழங்குநர் ஒருவரை பணியமர்த்தல்**

விவசாயத் துறையை நவீனப்படுத்தும் திட்டத்திற்காக (ASMP) சர்வதேச அபிவிருத்தி சம்மேளனத்திடம் (IDA) இருந்து 125.00 மில்லியன் அமெரிக்க டொலருக்கு நிகரான பல்வேறு நாணயங்களில் இலங்கை சனநாயக சோஷலிச குடியரசுக்கு கடன் ஒன்று கிடைக்கப்பெற்றிருப்பதோடு, அதில் 58.63 மில்லியன் அமெரிக்க டொலர் கமத்தொழில் அமைச்சுக்கு (MOA) ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த 58.63 மில்லியன் அமெரிக்க டொலரில் தோராயமாக 3.2 மில்லியன் அமெரிக்க டொலர் விவசாய பயிற்சி மற்றும் திறனை கட்டியெழுப்புவதற்கான முதலீடுகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு விவசாய நிறுவனங்களுக்காகவும் ஓர் ஆண்டு காலத்திற்கு செயலாளர் சேவைகளை வழங்குவது மற்றும் விவசாயிகளின் நிறுவனங்களை நிறுவுவதற்கு செயலாளர் சேவைகளை பெறுவதற்கு குறுகிய கால சேவை வழங்குநர் ஒருவரை பணியமர்த்துவதற்கு இந்த கடனில் ஒரு பகுதியை செயற்படுத்த கமத்தொழில் அமைச்சு உத்தேசித்துள்ளது.

https://www.asmp.lk/advertisement/ என்ற இணையதள முகவரியில் தரப்பட்டுள்ள குறிப்பு விதிமுறைகளை (TOR) பார்க்கவும்.

1. ஓர் ஆண்டு காலத்திற்காக ASMP முன்னோடி செயற்றிட்டங்களுக்காக ஒவ்வொரு விவசாய நிறுவனங்களுக்காகவும் ஓர் ஆண்டு காலத்திற்கு செயலாளர் சேவைகளை வழங்குவது மற்றும் நிறுவுவதற்காக செயலாளர் சேவைகளை பெறுவதற்கு குறுகிய கால சேவை வழங்குநர் ஒருவரை பணியமர்த்துவதற்கு பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து கமத்தொழில் அமைச்சு, விவசாயத் துறையை நவீனப்படுத்தும் திட்டம், திட்ட பெறுகைக் குழுவின் தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.

| விபரம் | மீளளிக்கப் படாத கட்டணம் ரூபா | விலைமனு பிணையின் பெறுமதி/ மீளளிக்கப்படும் வைப்பு (ரூபா) |
|---|---|---|
| 1. 20 முன்னோடித் திட்டங்களுக்காக விவசாய நிறுவன செயலாளர் சேவைகளுக்காக சேவை வழங்குநர் ஒருவரை பணியமர்த்தல்/ Lk-MOA-PMU- 261124-NC-RFB | 3500.00 | 150,000.00 |
| 2. 20 ISP திட்டங்களுக்காக விவசாய நிறுவன செயலாளர் சேவைகளுக்காக சேவை வழங்குநர் ஒருவரை பணியமர்த்தல்/ Lk-MOA-PMU- 261123-NC-RFB | 3500.00 | 150,000.00 |

3. உலக வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய போட்டி ரீதியான விலைமனு (NCB) நடைமுறை மூலம் விலைகேட்பு நடத்தப்படும்.
4. ஆர்வம் கொண்ட தகுதியுடைய விலைமனுதாரர்கள் கமத்தொழில் அமைச்சு, விவசாயத் துறையை நவீனப்படுத்தும் திட்டம், பெறுகை நிபுணரிடம் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு 2022.03.25 ஆம் திகதி தொடக்கம் 2022.04.18 ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 2.00 வரை கீழுள்ள முகவரியில் விலைமனு ஆவணங்களை பரீசிக்க மற்றும் வாங்கலாம். (தொடர்பு இலக்கம் 0714961603/ 0777804550)
5. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு விவசாயத் துறையை நவீனப்படுத்தும் திட்டத்தின் திட்ட அதிகாரியின் அலுவலகம், 123/2, பன்னிப்பிட்டிய வீதி, பத்தரமுல்லை என்ற முகவரியில் 2022 ஏப்ரல் 07 ஆம் திகதி மு.ப. 11.00க்கு இடம்பெறும்.

**சேவை வழங்குநரின் தகைமை மற்றும் அனுபவம்:**

- நிறுவனங்களுக்காக செயலாளர் சேவைகளை வழங்கியதில் குறைந்தது 5 ஆண்டுகள் அனுபவத்துடன்
- நிபுணத்துவத்தின் தொடர்புடைய பகுதிகளில் நல்ல அனுபவம் பெற்ற தொழில் முறையாளர்களின் குழு ஒன்றை பணியமர்த்தக்கூடிய நிலையில் சேவை வழங்குநர் இருத்தல் வேண்டும்.
- தொடர்புடைய துறையில் அரச நிர்வாகத்தினால் வழங்கப்பட்ட வர்த்தகப் பதிவின் சான்றிதழை விலைமனுதாரர் செயற்படுத்தல் வேண்டும்.
- செயலாளர் சேவை வழங்குநராக கம்பனிகள் பதிவாளரிடம் இருந்து பதிவுச் சான்றிதழ்

**B. தேர்வு அளவுகோல்:**

i) குறிப்பாக அரச பட்டியலிடப்படாத/ பட்டியலிடப்பட்ட நிறுவனங்களில் செயலாளர் சேவைகளை வழங்கியதன் அனுபவம்.
ii) ஒப்படையை செயற்படுத்துவதற்கு வேலைத்திட்டம் மற்றும் முறைமை.
iii) முக்கிய ஊழியர்களின் திறன்கள் மற்றும் தகுதிகள்: நிபுணர்கள் மற்றும் அவர்களின் தகைமையின் கிடைக்கும் தன்மை.
iv) வாடிக்கையாளர் குறிப்பு – வாடிக்கையாளர் தொடர்பு விபரங்களுடன் மேற்கொள்ளப்பட்ட பணி

(ஆதார ஆவணங்கள் மூலம் அனுபவங்கள் வழங்கப்படல் வேண்டும்)

C. திட்டத்தின் சிறாப்பருக்கு ரொக்கப்பணமாக 3,500 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி கீழ் தரப்பட்டுள்ள முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம்.

D. முறையாக பூர்த்தி செய்த விலைமனுக்களை 2022 ஏப்ரல் 18 ஆம் திகதி பி.ப. 2.00 அல்லது அதற்கு முன்னர் கீழுள்ள முகவரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். மின்னணு விலைமனுவுக்கு அனுமதி இல்லை. தாமதிக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. நேரடியாக பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் 2022.04.18ஆம் திகதி பி.ப. 2.00 க்கு கீழுள்ள முகவரியில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணங்களை அசல் மற்றும் நகல் என இரு தொகுதிகளுடன் இரு கடித உறைகளில் வெவ்வேறாக தொழில்நுட்ப முன்மொழிவு மற்றும் நிதி முன்மொழிவுடன் சமர்ப்பித்தல் வேண்டும். அவை இரண்டும் இரு கடித உறைகளில் வெவ்வேறாக மூடப்படுதல் வேண்டும் என்பதோடு முறையே அசல் மற்றும் நகல் என குறிப்பிடுதல் வேண்டும். அந்த இரு கடித உறைகளும் ஒற்றை கடித உறையில் இட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் Lk-MOA-PMU- 261124-NC-RFB அல்லது Lk-MOA-PMU- 261123-NC-RFB என்ற பொருத்தமான ஒப்பந்த இலக்கத்தை குறிப்பிடுதல் வேண்டும்.

மேல் குறிப்பிடப்பட்ட முகவரியானது:

**தலைவர்**
**திட்ட பெறுகைக் குழு**
**விவசாயத் துறையை நவீனப்படுத்தும் திட்டம்**
**கமத்தொழில் அமைச்சு, இல.: 123/2,**
**பன்னிப்பிட்டிய வீதி,**
**பத்தரமுல்லை.**
**www.asmp.lk**

# அறிவித்தல்!

**நீதி அமைச்சு**

## 2022ஆம் ஆண்டில் வாகனங்களைப் புதுப்பித்தல் மற்றும் சேவை செய்தல்களிற்காக வழங்குநர்களைப் பதிவு செய்தல்

நீதி அமைச்சின் வாகனங்களைப் புதுப்பிப்பதற்காக மற்றும் சேவை செய்வதற்காக, ஒப்பந்தங்களை வழங்குவதற்காக நீதி அமைச்சில் பதிவு செய்துகொள்வதற்கு ஆர்வமுள்ள கொழும்பு மாவட்டத்தில் வசிக்கும் வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

www.moj.gov.lk என்ற இணையத்தளத்தில் அல்லது நீதி அமைச்சின் வழங்கல் பிரிவில் பெற்றுக்கொள்ளப்படும் மாதிரிப் படிவங்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களுடன், இவ் அமைச்சுக்கு அல்லது பிரதேச செயலகத்திற்கு காசாக ரூபா 1000.00 மீளளிக்கப்படாத தொகையை, செயலாளர், நீதி அமைச்சு என்ற பெயரில் அரச வருமானம் தலைப்பில் 2003.99.00 இற்கு வைப்புச் செய்யும் வகையில் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச் சீட்டு இணைத்து அனுப்பப்படல் வேண்டும். (இதற்காகக் காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.)

விண்ணப்பங்கள், கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள நபருக்கு 2022.04.18 அன்று மு.ப. 11.00 இற்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பப்படலாம். அல்லது இவ் அமைச்சின் முதலாம் மாடியின் வழங்கல் பிரிவிலுள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்க்கப்படலாம். விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி: ''தலைவர், பெறுகைக்குழு, நீதி அமைச்சு, இல. 19, சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10'' ஆகும். தாமதமாகக் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விலைமனுக்களை அடக்கும் உறைகளின் இடது பக்க மேல் மூலையில், '2022 ஆம் ஆண்டில் வாகனங்களைப் புதுப்பித்தல், மற்றும் சேவை செய்தல்களிற்காக வழங்குநர் களைப் பதிவு செய்தல்' எனக்குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**நீதி அமைச்சு,**
**இலக்கம்: 19, சங்கராஜ மாவத்தை,**
**கொழும்பு-10.**

**மதிப்பீட்டு நிபந்தனைகள்:-**

1. வாகனங்களைப் புதுப்பித்தல் மற்றும் சேவை செய்தல் தொடர்பாக குறைந்த பட்சம் 05 அரச நிறுவனங்களில் பதிவு செய்யப்பெற்றிருத்தல் மற்றும் அதனை உறுதிப்படுத்துவதற்காக ஆவணங்களைச் சமர்ப்பித்தல்.
2. கராஜ் ஐ காப்புறுதி செய்திருத்தல் மற்றும் அதனை உறுதிப்படுத்துவதற்காக ஆவணங்களைச் சமர்ப்பித்தல்.
3. பயிற்சி பெற்ற தொழில் வல்லுநர்கள் தொடர்பான தகவல்களைச் சமர்ப்பித்தல் மற்றும் பரீட்சித்தல்.
4. வருமான வரி செலுத்துதல் தொடர்பான விபரங்களைப் பரீட்சித்தல்.
5. களப்பரிசீலனையை ஆய்வுக்குட்படுத்துதல்.

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி அதிகார சபை

### கொழும்பு – 13 இலுள்ள சுகததாச வெளியரங்கு விளையாட்டரங்கின் இளைய பார்வையாளர்கள் அரங்கின் புதுப்பித்தல்

கீழே விபரிக்கப்பட்டவாறும் பெசேவ நீங்கலாக நாற்பத்தாறு இலட்சத்து ஒன்பதினாயிரத்து முந்நூற்றி அறுபத்திரண்டு ரூபா 84 சதம் ஆகுசெலவில் மதிப்பீடு செய்யப்பட்டதும் கொழும்பு-13 இலுள்ள சுகததாச வெளியரங்கு விளையாட்டரங்கின் இளைய பார்வையாளர்கள் அரங்கின் புதுப்பித்தலை வழங்குவதற்காக கொழும்பு-13, சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி அதிகாரசபையின் பெறுகைக் குழுத் தலைவர் தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார். கொன்கிறீட் வேலை, ஓட்டு வேலை மற்றும் அலுமினிய வேலை, மேசன் வேலை, சீலிங் வேலை மற்றும் மின்வேலை அடங்கலான நிர்மாண வேலையாகும். நிர்மாணக் காலப்பகுதியானது ஒப்பந்தத்தை வழங்கும் திகதியிலிருந்து 60 நாட்காட்டி நாட்களாகும்.

1. விலைமனுக்கோரல் திறத்தல் கேள்வி நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
2. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்காக சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் கட்டிட வேலைகள் துறையில் சி-8-சி-7 தரத்தில் ICTAD தரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
3. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை 0112440150 என்ற தொலைபேசி மூலமாகவும் chairmansnsca@yahoo.com என்ற மின்னஞ்சலூடாகவும் கொழும்பு சுகததாச வெளியரங்கு விளையாட்டரங்கிலிருந்து பெற்று விலைமனுக்கோரல் ஆவணங்களை மேலேயுள்ள முகவரியில் சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் பரீட்சிக்கலாம்.
4. 2022.03.28 ஆம் திகதியிலிருந்து 2022.04.19 ஆம் திகதி வரையும் சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2.30 மணி வரையும் 2,000 ரூபாவை மீளளிக்கப்படாத கட்டணமாக செலுத்திய பின்னர், கொழும்பு-13, சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி அதிகாரசபையிடமிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவானது ரொக்கப் பணத்திலேயே மேற்கொள்ளப்படல் வேண்டும்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை கொழும்பு-13, சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி அதிகாரசபையின் தலைவரிடமிருந்து (0112384350 – நீடிப்பு 120 – முகாமையாளர் பெறுகை) பெற்று விலைமனுக்கோரல் ஆவணங்களை மேலேயுள்ள முகவரியில் சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2.30 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
6. 2022.04.20 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கொழும்பு-13, சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி அதிகாரசபை, பெறுகை குழுத் தலைவரிடம் விலைமனுக்கள் இரு பிரதிகளில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.
7. அட்டவணையின் 16 ஆம் உட்பிரிவின் பிரகாரம் 100,000 ரூபா பெறுமதியான விலைமனுப்பிணையொன்றுடன் அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
   விலைமனுப்பிணையானது 91 நாட்களுக்கு விலைமனுக்களை மூடும் திகதியிலிருந்து செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் (2022.07.21 ஆம் திகதியன்று வரையும்) வேண்டும்.
8. விலைமனுக்கள் 63 நாட்களுக்கு (2022.06.23) விலைமனுக்களின் சமர்ப்பித்தலுக்கான இறுதி திகதிக்கு பின்னாரானது.
9. கொழும்பு-13, சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி அதிகாரசபையின் வெளியரங்கு நிர்வாக கட்டிடத்தில் 2022.04.07 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும்.

**மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரி பின்வருமாறு:**
**தலைவர்,**
**சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி அதிகாரசபை,**
**கொழும்பு-13.**
**தொலைபேசி: 0112440150/ 0112384385 (நீடிப்பு 120)**

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி அதிகாரசபை,**
**ஆர்தர் த சில்வா மாவத்தை,**
**கொழும்பு-13.**

### அற்றோனி தத்துவத்தை மீளப்பெறல்

இல.136,வெலிகமபல, நாவலப்பிட்டியில் வதியும் சவரிமுத்து செவதியண் சகாயமேரி (தே.அ.அ.இல.627583435X) ஆகிய நான் இந்த அறிவித்தல் மூலம் இல. 38, ஹதுங்கல வத்த, அம்பகமுவ ரோட், நாவலப்பிட்டியில் வதியும் ரத்னாயக முதியன்சேலாகெ சுமித் அபேகுனவர்தன (தே.அ. அ.இல. 731793093V) என்பவருக்கு வலங்கிய அற்றோனி தத்துவ இல:1405 – 2019.06.30 ஆம் திகதி இத்தத்துவம் நாவலப்பிட்டிய பிரசித்த நொத்தாலிசு விராஜினீ கோமச் அத்தாட்சிப்படுத்தியது. இதை நான் 2022.03.03 ஆம் திகதி மீளப்பெற்று விட்டென். அதன் பிறகு அவரால் செய்யபடும் எந்தவிதமான செயலுக்கும் அதிகாரத்துக்கும் ஆவணத்துக்கும் அல்லது ஒரு விடயத் -துக்கு அவருக்காக நான் பொறுப்பு இல்லை என இலங்கை குடியரசின் அரசாங்கத்திற்கு அறிவிக்கின்றேன்.

**சவரிமுத்து செவதியண் சகாயமேரி**

### வைத்தியர் வணக்கத்திற்குரிய ஹரிஸ்பத்துவே ரியவங்சலங்கார தேரோ அறக்கட்டளையை அமைக்கும் நோக்கத்துக்கான சட்டம்

டொக்டர் வணக்கத்திற்குரிய ஹரிஸ்பத்துவே ஆரியவாங்ஷாலங்கார தேரர் அறக்கட்டளையின் அரசியலமைப்பு சட்டமூலம், ஜனநாயக சோஷலிச அமைப்பின் நிலையியற் கட்டளை இலக்கம் 53 (1) இன் பிரகாரம் உத்தரவைப் பெறுவதற்காக பாராளுமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக கனக ஹேரத் நான் தெரிவித்துக் கொள்கிறேன். இலங்கை குடியரசு

கீழே கொடுக்கப்பட்டுள்ள வரைவின் மூலம் பொதுவான வசதிகளுக்கான அடித்தளத்தின் நோக்கங்களை உருவாக்குதல்

01. மகாசங்கத்தைப் பாதுகாப்பதற்கும் எதிர்கால நன்மை பயக்கும் செயற்பாடுகளை செய்வதற்கும்.
02. அர்ச்சகர் மற்றும் சாமானியரின் சம்பூத சாதனத்தைப் புரிந்துகொள்ளும் முறையைப் பாதுகாத்தல் மற்றும் பலப்படுத்துதல்
03. பௌத்தத்தின் சரியான கருத்துப் பாதையைப் பின்பற்றுவதற்காக 20 வயதுக்குட்பட்ட பாதிரியார்களாக நியமிக்கப்பட்டவர்கள் மற்றும் பாமரர்களுக்குப் பட்டறைகளை ஏற்பாடு செய்தல்.
04. பௌத்த பொருளாதார, பௌத்த கலாச்சாரம் மற்றும் கல்விப் பட்டறைகளை நடத்துவதன் மூலம் பௌத்த சூழலை மேம்படுத்துதல்
05. பௌத்த கலாச்சார முயற்சி மற்றும் கல்வி நிகழ்ச்சிகள் போன்றவற்றில் ஈடுபடுதல்.

**கனக ஹேரத்**
**பாராளுமன்ற உறுப்பினர்**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

## கருவலகஸ்வெவ பிரதேச சபை

### 2023ஆம் ஆண்டிற்கான வரவு செலவு முன்மொழிவுகளைப் பெற்றுக் கொள்ளல்

2023ஆம் ஆண்டிற்கான கருவலகஸ்வெவ பிரதேச சபையின் வரவு செலவு அறிக்கையை தயாரிப்பதற்காக அதிகாரப் பிரிவிலுள்ள பொது மக்கள் மற்றும் சமூக அமைப்புக்களிடமிருந்து அதிகாரப்பிரிவின் அபிவிருத்தி நடவடிக்கைகள் சார்ந்த முன்மொழிவுகளை 2022 ஜூன் 30ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**W.B. நிமல் ஜயசிரி பண்டார,**
**பிரதேச சபை, கருவலகஸ்வெவ,**

**தொலைபேசி இலக்கம்:**
**அலுவகம். 032 2267917**

# இலங்கை திரிபோச லிமிட்டட்

### திரிபோச தொழிற்சாலையில் பிறப்பிக்கப்படும் விலங்குணவுக்கு தகைமையான கழிக்கப்படும் பொருட்கள் மற்றும் வேறு கழிக்கப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதற்கான கேள்விகோரல் (அரை ஆண்டு) - 2022

1) இலங்கை திரிபோச கம்பனியின் பெறுகைக் குழுவின் தலைவரால் ஜாஎல திரிபோச தொழிற்சாலையில் பிறப்பிக்கப்படும் விலங்குணவுகளுக்குத் தனியான கழிக்கப்படும் பொருட்கள் மற்றும் வேறு கழிக்கப்பட்ட பொருட்களாக கீழ்க்காணும் கழிக்கப்பட்ட பொருட்களை அகற்றுவதற்காக 2022 ஏப்ரல் 06ம் திகதி பி.ப. 2.00 வரை பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**01. விலங்குணவுக்கு தகைமையான கழிக்கப்பட்ட பொருட்கள்**

I. கூட்டி அகற்றப்படும் சோளம் சோயா கலவை - உலர்ந்த (துண்டு/ துகள்களாக)
II. கூட்டி அகற்றப்படும் சோளம் சோயா கலவை - ஈரமான (துண்டு/ துகள்களாக) Grade 1 (ஈரமானது) மற்றும் Grade II (திரவ)
III. திரிபோச மா (Powder)
IV. அ) சோயா மேலோடு (Soya Hulls) Grade 1 மற்றும் சோயா மேலோடு (Soya Hulls) Grade II
ஆ) சோளம் (மேலோடு/ துண்டு) (Maize Hulls)

**02. வேறு கழிவுப்பொருட்கள்**

I. பாவிக்கப்பட்ட வெற்று பால்மா உறை (கடதாசி) - Used Paper Bags
II. பாவிக்கப்பட்ட கொருகேட்டட் பெட்டி மற்றும் காட்போட் - Used Corrugated Boxes & Card Board
III. கழிவு கடதாசி - Waste Paper
IV. பாவிக்கப்பட்ட பொலித்தீன் - Used Polythene
V. கடதாசி ரோல் - Paper Rolls (Reels)
VI. பாவிக்கப்பட்ட வெற்று பொலிபேக் - Used E/ Poly Bags - Soya/ Maize
VII. பாவிக்கப்பட்ட வெற்று பொலிபேக் - Used E/ Poly Bags - Mineral

● அரச அனுமதிக்கப்பட்ட வரித் தொகை அறவிடப்படும்.

2) எழுத்து மூல வேண்டுதல் கடிதத்துடன் ஆவணங்களுக்காக காசாக ரூ. 5,000/-, மீளளிக்கப்படாத வைப்புத் தொகையை செலுத்தியதாக இலங்கை திரிபோச லிமிட்டட் இன் காசாளரால் விநியோகிக்கப்படும் பற்றுச்சீட்டை சமர்ப்பித்து ஜாஎல ஹப்புவத்தவில் அமைந்துள்ள இலங்கை திரிபோச லிமிட்டட் இன் நிர்வாகப் பிரிவில் 2022. ஏப்ரல் 05ம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.30 வரையான காலத்திற்குள் குறித்த கேள்வி ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.

3) சகல கேள்வி ஆவணங்களையும் பதிவுத் தபாலில் 2022.04.06ம் திகதி பி.ப. 2.00 இற்கு முன் தலைவர், பெறுகைக் குழு இலங்கை திரிபோச லிமிட்டட் த.பெ. 17, கப்புவத்த, ஜாஎல என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது இலங்கை திரிபோச லிமிட்டட் நிறுவனத்தின் நிர்வாகப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். கேள்வி உள்ளிட்டு அனுப்பப்படும் கடித உறையை சீல் இட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் "விலங்குணவிற்கு தகைமையான கழிக்கப்பட்ட பொருட்கள் மற்றும் வேறு கழிவுப் பொருட்களை விற்பனை செய்வதற்காக கேள்வி கோரல் (அரை ஆண்டு) - 2022" என்று தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

4) கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் 2022 ஏப்ரல் 06ம் திகதி பி.ப. 2.00 இற்கு முடிவடைவதுடன் அது முடிவடைந்தவுடன் கேள்விப் பத்திரங்கள் திறத்தல் கீழ்க்காணும் முகவரியில் இடம்பெறும் கேள்வி திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர் அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு சமுகமளிக்க வாய்ப்பளிக்கப்படும்.

5) இது பற்றிய மேலதிக விபரங்களை சிரேஷ்ட முகாமையாளரிடம் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இல:- 011-2236588/ 011-2237418.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**இலங்கை திரிபோச லிமிட்டட்,**
**த.பெ. 17, கப்புவத்த,**
**ஜா-எல.**

# கம சமக பிலிசந்தர கிராமிய வேலைத்திட்டம் -2022

## மாவட்ட செயலகம் திருகோணமலை

### தேசிய கேள்வி விலைமனுகோரல் (பொருட்கள்)

1. கீழே உள்ள பட்டியலில் விபரிக்கப்பட்டுள்ள விநியோகத்திற்காக தகுதியான கேள்விதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட பெறுகைக்கோரல் படிவங்கள் கோரப்படுகின்றன.

| பொருட்களின் எண் | ஒப்பந்த எண் | பொருட்களின் விபரம் | பொருட்களின் எண்ணிக்கை | கேள்வி பிணை வைப்புத் தொகை (ரூபா) | மீளளிக்கப் படாத வைப்புப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 01 | GAT/FIN/PU09/ GA.SA.P/2022(Goat) | ஆடு வழங்கல் | 529 | 81,000.00 | 1,500.00 |
| 02 | GAT/FIN/PU09/ GA.SA.P/2022(Chicks) | கோழிக்குஞ்சு வழங்கல்(நாடு) | 31,848 | 66,000.00 | 1,500.00 |
| 03 | GAT/FIN/PU09/ GA.SA.P/2022(Sewing) | தையல் இயந்திரம் வழங்கல் | 601 | 365,000.00 | 2,000.00 |
| 04 | GAT/FIN/PU09/ GA.SA.P/2022(Fi.net) | மீன்பிடி வலைகள் வழங்கல் | 379 | 72,000.00 | 1,500.00 |
| 05 | GAT/FIN/PU09/ GA.SA.P/2022(Light) | LED மின்குமிழ் வழங்கல் | 568 | 114,500.00 | 1,500.00 |

02. தேசிய போட்டி கேள்வி நடைமுறை மூலம் பெறுகைக் கோரல் நடாத்தப்படும்.
03. கேள்விதாரர்கள் தமது வியாபாரத்தை பதிவு செய்திருக்க வேண்டும். என்பதுடன் கடந்த காலத்தில் அரசாங்கத்தினால் கறுப்புப்பட்டியலில(Blacklist) சேர்க்கப்படாதவராக இருக்க வேண்டும்
04. ஆர்வமுள்ள வழங்குநர்கள் பெறுகை தொடர்பிலான தகவல்களை மாவட்ட செயலகம் திருகோணமலை கணக்குக் கிளையிலிருந்து அலுவலக நாட்களில் காலை 9.00 மணிமுதல் பி.பகல் 2.30 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.
05. அரச நிதித் திணைக்களத்தின் சுற்றறிக்கை 4/2020 இன்படி அரச தொழில்முயற்சி நிறுவனம்,கூட்டுத்தாபனங்களினால் முன்வைக்கப்படும் கேள்விகளுக்கு 15 சதவீதம் முன்னுரிமை வழங்கப்படுதுடன் உள்ளூர் மூலப்பொருட்கள் உள்ளூர் உழைப்பு பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு 15 சதவீதம் முன்னுரிமை வழங்கப்படும்.
06. "தலைவர் மாவட்ட பெறுகைக்குழு, மாவட்டச் செயலகம் திருகோணமலை" என்ற முகவரிக்கு தங்களால் பூரணப்படுத்தப்பட்ட எழுத்து மூலமான கோரிக்கை கடிதத்தை மாவட்டச்செயலக கணக்குக்கிளையில் சமர்ப்பித்து 2022 மார்ச் 25 முதல் 2022 ஏப்ரல் 18 வரையிலான காலப்பகுதியில் (அலுவலக நாட்கள்) காலை 9.00 மணியிலிருந்து பிற்பகல் 2.30 மணிவரை பட்டியலில் குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத வைப்புப்பணத்தை இலங்கை வங்கி அல்லது திருகோணமலை கச்சேரியிலிலுள்ள இலங்கை வங்கி கிளையின் உத்தியோக பூர்வ வங்கி கணக்கு எண் 7042096 க்கு வைப்பு செய்வதன் மூலம் பெறுகை பத்திரங்களை பெற்றுக்கொள்ளமுடியும்.
07. தற்போதைய கொவிட் 19 சூழ்நிலையை கருத்தில் கொண்டு, ஆர்வமுள்ள வழங்குநர்கள் பெறுகை ஆவணத்தின் மென்னகலை (Soft copy) பெற்றுக் கொள்வதற்கு மீளளிக்கப்படாத வைப்புப்பணத்தை இலங்கை வங்கியில் வைப்பிலிடப்பட்ட வங்கிச்சீட்டினை scan செய்து tcopayunit@ gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பி வைக்க வேண்டும்.
08. தங்களால் பூரணப்படுத்தப்பட்ட பெறுகை கோரல் படிவங்களின் 02 பிரதிகளை ஏப்ரல் 19, 2022 அன்று பிற்பகல் 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன் திருகோணமலை மாவட்ட பிரதான கணக்காளரது அலுவலகத்தில் உள்ள பெறுகை கோரல் பெட்டியினுள் இடுதல் வேண்டும் அல்லது அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளரும் பெறுகை சபை தலைவர் மாவட்ட செயலகம் திருகோணமலை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும். கடித உறையின் மேல் மூலையில் " கம சமக பிலிசந்தர கிராமிய வேலைத்திட்டம் -2022 பொருட்கள் வழங்கல்" என்று எழுதப்பட வேண்டும். தாமதமாக கிடைக்கப்பெறும் பெறுகைக் கோரல் விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும். பெறுகைக்கோரல் படிவமானது பெறுகை நேரம் முடிவடைந்தபின் உடனடியாகத் திறக்கப்படும் விண்ணப்பதாரிகள் அல்லது பிரதிநிதிகள் கலந்து கொள்ள முடியும்.
09. விண்ணப்பதாரிகள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பொருட்களுக்கு விண்ணப்பிக்கமுடியும். மேலதிக விபரங்களுக்கு திருகோணமலை மாவட்டச்செயலக கணக்குக்கிளையின், தொலைபேசி இலக்கம் 0262223555 இனை தொடர்பு கொள்ளவும்.

**பெறுகை சபைத் தலைவர்**
**மாவட்ட செயலகம்**
**திருகோணமலை. – 2022.03.25**

## சீ-நோர் பவுண்டேசன் லிமிட்டட்

### கடற்றொழில் அமைச்சு

# பதவி வெற்றிடம்

**பொது முகாமையாளர் (எச்எம் 1-3)**
www.ceynor.gov.lk என்ற எமது இணையதளத்தை தயவு செய்து பார்வையிடவும்.

**தலைவர்,**
**சி-நோர் பவுண்டேசன் லிமிட்டட்**
**இல. 335, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை,**
**கொழும்பு 10.**
**தொலைபேசி இல. 011 4380283, 011 4380281**

# கேள்வி அறிவித்தல்

### இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (சுத்திகரிப்புப் பிரிவு)

### சுத்திகரிப்பு தாங்கி -02 இலிருந்து எண்ணெய் சகதிகளை (SLUDGE) அகற்றுதல். (கேள்வி இல PL-138-2021)

இலங்கை, சப்புகஸ்கந்த, எண்ணெய் சுத்தகரிப்பில் தாங்கி 02 இலிருந்து எண்ணெய் சகதிகளை அகற்றி ஒதுக்குவதற்காக பெற்றோலிய சகதிகளை போக்குவரத்து செய்தல், களஞ்சியப்படுத்தல் மற்றும் அகற்றுதலின் கீழ் மத்திய சுற்றாடல் அதிகார சபை (CEA) இல் பதிவைக் கொண்டுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்களை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (CPC) இன் சார்பாக திணைக்கள பெறுகைக் குழு (பாரிய) இனால் இத்தால் கோரப்படுகின்றன.

ஒப்பந்தங்களை வழங்குவதற்கு தகைமை பெறுவதற்கு சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாது இருப்பதுடன், விலைமனு ஆவணங்களில் குறிப்பிடப்படும் தகுதி மற்றும் தகைமை தகவுதிறன்களை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

விலைமனு ஆவணங்களைச் சேகரிக்கும் வேளையில் சுத்திகரிப்பு நிதித்திணைக்களத்திற்கு ஓர் மீளளிக்கப்படாத வைப்பு ரூ. 3500/- (எல்லாவரிகளுடன்) செலுத்துதல் வேண்டும். விலைமனு ஆவணங்கள் விநியோகிக்கப்படும் இறுதித் திகதி மற்றும் நேரம் 2022 ஏப்ரல் 18ம் திகதி 15.00 மணிக்கு மற்றும் பொறியிடப்பட்ட விலைமனுக்கள் பெற்றுக்கொள்ளும் நேரம் மற்றும் மூடப்படும் திகதி 2022 மே 04ம் திகதி 14.00 மணிக்கு ஆகும் அத்துடன், விலைமனுக்கள் மூடப்பட்ட பின்பு உடனடியாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன தலைமையகம், முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியங்கள்) அலுவலகத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

விலைமனு ஆவணங்கள் மற்றும் ஏனைய விபரங்களை, சப்புகஸ்கந்த, சுத்திகரிப்புப் பிரிவு, பிரதி சுத்திகரிப்பு முகாமையாளரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

விலைமனு ஆவணங்கள் www.ceypetco.gov.lk என்ற இணையதளத்தில் பார்வையிட முடியும்.

தெளிவுபடுத்தல்கள் (இருப்பின்) கீழ்க்காணும் தொலைபேசி/ பெக்ஸ் இலக்கத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர், திணைக்கள பெறுகைக் குழு,**
**மே/பா பிரதி சுத்திகரிப்பு முகாமையாளர் (பராமரிப்பு மற்றும் திட்டங்கள்)**
**இலங்கை பெற்றோலிக் கூட்டுத்தாபனம்**
**சுத்திகரிப்பு பிரிவு, சப்புகஸ்கந்த, களனி**
**தொலைபேசி: +94112400684/ 2400427/ 2400431**
**பெக்ஸ்: +942400684/2400431/ 2400436**

Best way to fulfil your Future Dreams
SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service
E-mail your advertisements to,
classified@lakehouse.lk
Piyumi- 0112 429 383 Ramani - 0112 429 347 | Gayani - 0112 429 343 / 342

# நவீன தொழினுட்பவியல்களுக்கான ஆர்தர் சி கிளார்க் நிறுவனம் (ACCIMT)

## விலைமனுக்களுக்கான அழைப்பு

## ACCIMT இற்கான பாதுகாப்பு சேவைகளை வழங்கல் - 2022/2023

ACCIMT இற்கு பாதுகாப்பு சேவைகளை வழங்குவதற்காக பாதுகாப்பு அமைச்சுடன் பதிவு பெற்றவர்கள் மற்றும் ஆகக் குறைந்தது 5 வருட சேவை அனுபவத்தை அரச துறையில் கொண்டுள்ள புகழ்வாய்ந்த பாதுகாப்பு சேவைகளை வழங்குவோரிடமிருந்து நவீன தொழினுட்பவியல்களுக்கான ஆர்தர் சி கிளார்க் நிறுவனத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இத்தால் அழைக்கின்றார்.

1) விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

2) ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை நவீன தொழினுட்பவியல்களுக்கான ஆர்தர் சி கிளார்க் நிறுவன நிருவாகத்திற்கான உதவிப் பணிப்பாளரிடமிருந்து 011-5677391/ 011-2650838 ஆகிய தொலைபேசி இலக்கங்களினூடாக தொடர்பு கொண்டு 2022 ஏப்ரல் 20 ஆம் திகதியன்று வரையும் எந்தவொரு வேலை நாளிலும் **மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும்** அதே முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

3) **2022 மார்ச் 25 ஆம் திகதியிலிருந்து 2022 ஏப்ரல் 20 ஆம் திகதி வரையும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் ஒவ்வொரு விலைமனுவிற்கும்** மீளளிக்கப்படாத கட்டணமாக மூவாயிரம் ரூபாவை (3,000 ரூபா) நவீன தொழினுட்பவியல்களுக்கான ஆர்தர் சி கிளார்க்கின் நிதிக்கான சிரேஷ்ட பிரதி பணிப்பாளரிடம் செலுத்திய பின்னர் மீளளிக்கப்படாத கட்டணத்தின் உத்தியோகபூர்வ பற்றுச்சீட்டுக்களுடன் நிருவாகத்திற்கான உதவி பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை தொடர்பு விபரங்களுடன் (தொலைபேசி, தொலைநகல், மின்னஞ்சல் போன்றவை) சமர்ப்பித்த பின்னர் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.

4) **2022 ஏப்ரல் 21 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு** அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, நவீன தொழினுட்பவியல்களுக்கான ஆர்தர் சி கிளார்க் நிறுவனம் என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விலைமனுக்கள் அவைகளை அதே முகவரியில் மூடிய பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

5) அனைத்து விலைமனுக்களும் விலைமனுப்பிணையொன்றுடன் நவீன தொழிற்நுட்பவியல்களுக்கான பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதான நிறைவேற்று அலுவலர் ஆகியவர்களுக்கான பெயரில் **80,000 ரூபாவிற்கானதும் 2022 ஏப்ரல் 18 அம் திகதி வரையும்** செல்லுபடியாகும் தன்மையிலுமிருத்தல் வேண்டும்.

6) விலைமனுப்பிணையானது பின்வரும் முகவராண்மைகள் ஒன்றினால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.
- இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றினால் அல்லது
- இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் வங்கியொன்றினால் உத்தரவாதம் உறுதிப்படுத்தப்பட்டு இன்னொரு நாட்டில் செயற்படும் வங்கி யொன்றினால்.

7) விலைமனுவொன்றாக மீளளிக்கக்கூடிய வைப்புக்கள் அல்லது வங்கி வரைவுகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

**பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதான நிறைவேற்று அலுவலர்,**
**நவீன தொழினுட்பவியல்களுக்கான ஆர்தர் சி கிளார்க் நிறுவனம்,**
**272, பண்டாரநாயக்க மாவத்தை,**
**கட்டுபெத்த, மொறட்டுவ.**
**தொலைபேசி: 011-2650838**
**தொலைநகல்: 011-2650662**

# கேள்விக்கான அழைப்பு

### இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு
### நீர்ப்பாசன அமைச்சு
### நீர்ப்பாசனத் திணைக்களம்

## உமா ஓய கீழ் ஓடை அபிவிருத்தி திட்டத்திற்காக வலுவூட்டப்பட்ட கம்பி (RB500) வழங்குதல்

**(Supplying of Reinforcement Bars (RB 500) for Uma Oya Down Stream Development Project)**

## தேசிய போட்டி கேள்விகோரல்

1. தலைவர், நீர்ப்பாசனத் திணைக்கள பெறுகைக் குழுவினால் நீர்ப்பாசனத்திணைக்களம் சார்பாக கீழ்க்காணும் வழங்கல்களுக்காக தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

**அட்டவணை: 01**

| கேள்வி இலக்கம் | விடய விபரம் | அளவு | மீளளிக்கப் படாத வைப்பு (ரூ) | கேள்வி செல்லுபடி யற்றதாகும் திகதி | கேள்விப் பிணை (ரூ) | கேள்விப் பிணைமுறி செல்லுபடியற்ற தாகும் கால எல்லை |
|---|---|---|---|---|---|---|
| IFB/ID/GOSL/ NCB/ 2022/001 | உமா ஓய கீழ் ஓடை அபிவிருத்தி திட்டத்திற்காக வலுவூட்டப்பட்ட கம்பி (RB 500) வழங்குதல் | 500 மெட்ரிக் தொன் | 25,000.00 | 2022/07/20 | 1500,000.00 | 2022.08.17 |

2. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு மேலதிக தகவல்களை கொழும்பு 07, பௌத்தாலோக்க மாவத்த, இல. 230 இல் நீர்ப்பாசனத் திணைக்களத்தின், நீர்ப்பாசனப் பணிப்பாளர் (ஒப்பந்தங்கள் மற்றும் பெறுகை) இடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொ.பே. 011-2582677) மேற்படி முகவரியில் இரண்டாம் மாடியில் அமைந்துள்ள பெறுகைப் பிரிவிலிருந்து 2022.03.25 முதல் 2022.04.19 வரை அரச வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை கேள்வி ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம். (மேற்படி தொ.பே. இலக்கத்திற்கு முன் அறிவித்தலின் பின்னர்)

3. மேற்படி வழங்கலுக்காக அட்டவணை இல. 01 இல் குறிப்பிடப்படும் மீளளிக்கப்படாத வைப்புத் தொகையை கீழ்க்காணும் வங்கிக் கணக்கிற்கு வைப்புச் செய்து மற்றும் கம்பனி கடிதத் தலைப்பில் (Original) மின்னஞ்சலில் (idprocurement1@gmail.com) அல்லது பெக்ஸ்: (011-2582677) மூலம் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதற்காக வேண்டுதல் (வங்கிப் பற்றுச் சீட்டின் பிரதியுடன்) நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நீர்ப்பாசன பணிப்பாளர் (ஒப்பந்தங்கள் மற்றும் பெறுகை) இடம் சமர்ப்பித்து கொழும்பு 07, பௌத்தாலாக்க மாவத்தையில் அமைந்துள்ள, நீர்ப்பாசனத் திணைக்களத்தன் நீர்ப்பாசன பணிப்பாளர் (ஒப்பந்தங்கள் மற்றும் பெறுகை) இடம், 2022.03.25 முதல் 2022.04.19 வரை அரச வேலை நாட்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**அட்டவணை : 02**

| வங்கி விபரம் | வங்கிப் பற்றுச் சீட்டு மற்றும் வேண்டுதல் கடிதம் சமர்ப்பிக்க வேண்டிய | |
|---|---|---|
| | மின்னஞ்சல் முகவரி | பெக்ஸ் இலக்கம் |
| வங்கியின் பெயர்: இலங்கை வங்கி (தப்ரபேன் கிளை)<br>கணக்கு இலக்கம் - 7042385<br>கணக்கு உரித்தாளரின் பெயர்: நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம் (ஒன்லைன் காசுவைப்பு ஏற்கப்பட மாட்டாது) | idprocurement1@gmail.com | 011 2582677 |

4. கேள்விக்கு முன்னரான கூட்டம் 2022.04.01 மு.ப. 11.00 இற்கு Zoom தொழில்நுட்பத்தின் ஊடாக நடைபெறுவதுடன் அதனோடு சம்பந்தப்பட்ட கூட்டம் இலக்கம் (ID) மற்றும் அனுமதிக்குறி (Pass Code) குறித்த கேள்விதாரர்களுக்கு எதிர்காலத்தின் விநியோகிக்கப்படும்.

5. அட்டவணை - 01 இல் குறிப்பிடப்படும் பெறுமதியுடன் கேள்விப் பிணையொன்றை (Bid Secrity) கேள்வியுடன் சமர்ப்பித்தல் வேண்டும். செல்லுபடியாகும் கேள்வி பிணையொன்று இல்லாத எந்தக் கேள்வியும் பதில் கூறப்படாத கேள்வியாக கருதப்படுவதுடன் எந்த விசாரணையும் இன்றி நிராகரிக்கப்படும்.

6. கேள்வி ஆவணத்தின் சகல பக்கங்களும் கேள்விதாரர்களால் ஒப்பமிடப்பட்டு அவரது முத்திரை இடப்படல் வேண்டும்.

7. பூர்த்தி செய்யப்பட்ட கேள்விகள் கொழும்பு 07, பௌத்தாலோக்க மாவத்தை, இல. 230, நீர்ப்பாசனத் திணைக்களத்தின் 03ஆம் மாடியில் அறை இல 311( பிரதம நிதி அதிகாரி அறை) இதற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் வைப்புச் செய்தல் அல்லது மேற்படி முகவரிக்கு பதிவுத் தபாலில் 2022.04.20 பி.ப. 2.00 இற்கு அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு அனுப்பி வைத்தல் வேண்டும். கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் 2022.04.20 பி.ப. 2.00 இற்கு முடிவுறுத்தப்படுவதுடன், உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். தாமதமான கேள்விகள் நிராகரிக்கப்படும்.

8. கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பெறுகையின் பெயர் மற்றும் கேள்வி இலக்கத்தை குறிப்பிடுதல் வேண்டும்.

9. கேள்வி திறக்கப்படும் வேளையில் வருகை தருவதற்கு ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் கேள்விகள் திறக்கப்படும்.

**திகதி: 2022.03.24**

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு**
**நீர்ப்பாசனத் திணைக்களம்**
**இல. 230, பௌத்தாலோக்க மாவத்த,**
**நீர்ப்பாசனத் திணைக்களம்,**
**கொழும்பு-07**

### தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு

# டவர் மண்டப அரங்க மன்றம்

## பதவி வெற்றிடங்கள்

இலங்கையின் நாடகம் மற்றும் அருங்கலைத் துறையை ஊக்கப்படுத்துவதற்காக டவர் மண்டப அரங்க மன்றத்தில் பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கு இயைபான தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்தப் பதவிகள் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கான உரித்துகளைக் கொண்ட நிரந்தர பதவிகளாகும்.

**சிரேஷ்ட முகாமைத்துவ சேவை வகுதியின் பதவி - (HM 1-1)**

**01. பணிப்பாளர் (நாடக மேம்பாடு, கல்வி மற்றும் நிகழ்ச்சிகள்) - 01 பதவி**

**பணி விபரம்**

டவர் மண்டப அரங்க மன்றத்தின் பொறுப்பாளர் சபையின் தீர்மானங்கள் மற்றும் நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரியான பணிப்பாளர் நாயகத்தின் அறிவுரைகள் மற்றும் வழிகாட்டல்கள் மற்றும் ஒப்புதலின் கீழ் டவர் மண்டப அரங்க மன்றத்தின் நோக்கங்களை நிறைவேற்றி நாடகம் மற்றும் அரங்கியலை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் நிறுவனத்தின் நாடக மேம்பாடு, நிகழ்ச்சிகள், கல்வி எனும் மூன்றையும் மற்றும் டவர் மண்டப அரங்க மன்றத்துடன் இணைந்த நாடகம் மற்றும் அரங்கியலை பாடசாலைகளை சிறப்புடன் மற்றும் போதுமான அளவில் மேம்படுத்துதல் மற்றும் கண்காணித்தலுக்கு பொறுப்பு கூறல் இந்தப் பதவிக்குரித்தான பிரதான பொறுப்பாகும்.

**வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்குத் தேவையான அடிப்படைத் தகைமைகள் மற்றும் அனுபவம்**

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொண்ட நாடகமும் அரங்கியலும், கல்வி, அழகியற் கலை, வெகுசன ஊடகம் போன்ற விடயத்துறையில் பட்டத்துடன் இயைபுடைய துறையில் பட்டப் பின்படிப்பு பட்டமொன்றைப் (Master) பெற்றிருத்தல்.

**மற்றும்**

அரச, அரச கூட்டுத்தாபனத்தில், நியாயாதிக்கச் சபையில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தில் ''முகாமைத்துவ மட்டப்'' பதவியொன்றில் இயைபுடைய துறையில் ஆகக்குறைந்தது பதினைந்து (15) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு (பின்வரும் 1 அல்லது 2)**

1. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.
2. முகாமைத்துவ (MM) சேவை வகுதியின் 1ஆம் தரப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது ஐந்து (05) வருட காலம் இயைபுடைய விடயத்துறையில் திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்

**சம்பள அளவு** : 80295 - 2270x15 = 114,345
**வயது** : 35 வயதிற்குக் குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
**தெரிவு செய்யும் முறை :** கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் மூலம்

**இந்தப் பதவிக்குரித்தான வரப்பிரசாதங்கள்**

I. திறைசேரியினால் அங்கீகரிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவுப் படி மற்றும் தொழில்சார் கொடுப்பனவுகள் உட்பட ஏனைய அனைத்து அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள்
II. அரச தொழில்முயற்சி சுற்றுநிருபம் 02/2022 பிரகாரம் தொலைபேசி கொடுப்பனவு
III. சாரதி சகிதம் உத்தியோகபூர்வ வாகனம் அல்லது PED 01/2015 மற்றும் PED 01/2015(i)ஆம் இலக்க அரச தொழில்முயற்சி சுற்றுநிருபத்தின் பிரகாரம் போக்குவரத்துக் கொடுப்பனவு
IV. 01/2015(ii)ஆம் இலக்க அரச தொழில்முயற்சி சுற்றுநிருபத்தின் பிரகாரம் மாதாந்த எரிபொருள் கொடுப்பனவு
V. நிறுவனத்தினால் செயற்படுத்தப்படும் மருத்துவ காப்புறுதித் திட்டத்தின் நன்மைகள்

**முகாமைத்துவ சேவை வகுதியின் பதவி - (MM 1-1)**

**01. உதவி / பிரதிப் பணிப்பாளர் (நிதி) - 01 பதவி**

**பணி விபரம்**

டவர் மண்டப அரங்க மன்றத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக நிறுவனக் கோவை, நிதி ஒழுங்குவிதிகள், அவ்வப்போது வெளியிடப்படும் அரச சுற்றுநிருபம், அரசாங்க கொள்கைகளுக்கு ஏற்ப நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையினால் அவ்வப்போது மேற்கொள்ளும் தீர்மானங்களை பணிப்பாளர் நாயகத்தின் அறிவுரைகள் மற்றும் வழிகாட்டல் மற்றும் கட்டளைகளின் பிரகாரம் மற்றும் டவர் மண்டப அரங்க மன்றத்தின் கையேட்டின் பிரகாரம் செயற்பட்டு நிறுவனத்தின் நிதி முகாமைத்துவம், வருடாந்த மதிப்பீட்டைத் தயாரித்தல், வருடாந்த நிதி அறிக்கைகளைத் தயாரித்தல் இந்தப் பதவியின் பிரதான பொறுப்பாகும்.

**வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்குத் தேவையான அடிப்படைத் தகைமைகள் மற்றும் அனுபவம்**

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொண்ட முகாமைத்துவம், வர்த்தகம், கணக்கியல் தொடர்பான பட்டம் மற்றும் பட்டய கணக்காளர் நிறுவனத்தின் ICASL/ACA/ ICMA/ACCA இடைநிலைப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் மற்றும் கணக்கியல் நடவடிக்கைகளுக்கு இயைபாக 01 வருட கால அனுபவம்

**உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு**

மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

**அல்லது**

''கனிஷ்ட முகாமைத்துவ'' JM சேவை வகுதிக்கு இயைபான பதவியொன்றில் ஆகக் குறைந்தது ஐந்து (05) வருட காலம் திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்

**ஏனைய தகைமைகள்**

(அ) கணனிப் பாவனை மற்றும் ஆங்கில மொழியில் வேலை செய்யும் ஆற்றல்
(ஆ) இலங்கை கணக்காளர் நிறுவனத்தின் அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்

**வயது** : 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
**சம்பள அளவு** : ரூபா 53175 - 10x1375 - 15x1910 = 95,575
**தெரிவு செய்யும் முறை:** கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் மூலம்

**இந்தப் பதவிக்குரித்தான வரப்பிரசாதங்கள்**

I. திறைசேரியினால் அங்கீகரிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவுப் படி மற்றும் தொழில்சார் கொடுப்பனவுகள் உட்பட ஏனைய அனைத்து அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள்
II. அரச தொழில்முயற்சி சுற்றுநிருபம் 02/2022 பிரகாரம் தொலைபேசி கொடுப்பனவு
III. நிறுவனத்தினால் செயற்படுத்தப்படும் மருத்துவ காப்புறுதித் திட்டத்தின் நன்மைகள்

**முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப சேவை வகுதி - (MM 1-1)**

**01. வேலை மேலாளர் (சிவில்) - 01 பதவி**

**பணி விபரம்**

டவர் மண்டப அரங்க மன்றத்திற்குரித்தான அரங்கம் மற்றும் அனைத்து வளவுகளிலுமுள்ள நிர்மாணம், மின்சாரம், வளிச்சீராக்கம், நீர் மற்றும் கழிவுநீர் அப்புறப்படுத்துதல் உட்பட ஏனைய தொழில்நுட்ப வேலைகள் போன்றே பராமரிப்பு வேலைகளை நாளாந்தம் மேற்கொள்ளல், அது தொடர்பான சிபாரிசுகளை வழங்குதல், பராமரிப்பு மற்றும் திருத்தவேலைகளை வெளி நிறுவனங்கள் மூலம் மேற்கொள்வதானால் அது தொடர்பில் கண்காணித்தல், அந்த வேலைகள் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டதாக சிபாரிசுகளை வழங்கும் பொறுப்பு இந்தப் பதவிக்குரியதாகும்.

**விண்ணப்பதாரர்களுக்குத் தேவையான தகைமைகள்**

மூன்றாம் நிலை தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப / தொழிற் பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழிற்றிறன் NVQ ஐந்தாம் (05) மட்டத்திற்குக் குறையாத வேலை மேலாளர் சிவில் வேலைகளுக்கு இயைபான தொழில்நுட்ப கற்கை நெறியொன்றைப் பூர்த்தி செய்திருத்தல்.

**வயது** : 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
**சம்பள அளவு :** 30310 - 10x300 - 7x350 - 4x495 - 20x660 = 50940
**தெரிவு செய்யும் முறை:** கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் மூலம்

**ஆரம்ப திறன் சேவை வகுதி - (PL -3)**

**01. பராமரிப்பாளர் - 01 பதவி**

**விண்ணப்பதாரர்களுக்குத் தேவையான தகைமைகள்**

I. க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் குறைந்தபட்சம் 02 திறமைச் சித்திகள் சகிதம் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**தேர்ச்சி -** பராமரிப்பு வேலைகள் தொடர்பில் மூன்றாம் நிலை தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப / தொழிற் பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழிற்றிறன் NVQ 4 மட்டத்திற்குக் குறையாத மட்டத்தில் தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

**வயது :** 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
**சம்பள அளவு :** ரூபா 26290 - 10x270 - 10x300 - 10x330 - 12x350 - 39490/-
**தெரிவு செய்யும் முறை:** கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் மூலம்

**02. அரங்க ஒளியமைப்பாளர் - 01 பதவி**

**விண்ணப்பதாரர்களுக்குத் தேவையான தகைமைகள்**

க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் குறைந்தபட்சம் 02 திறமைச் சித்திகள் சகிதம் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**தேர்ச்சி -** பராமரிப்பு வேலைகள் தொடர்பில் மூன்றாம் நிலை தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழிற்றிறன் NVQ 4 மட்டத்திற்குக் குறையாத மட்டத்தில் தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

**வயது :** 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
**சம்பள அளவு :** ரூபா 26290 - 10x270 - 10x300 - 10x330 - 12x350 = 39490/-
**தெரிவு செய்யும் முறை:** கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் மூலம்

**ஆரம்ப அரைத் திறன் சேவை வகுதி - (PL -3)**

**01. அரங்க ஒளியமைப்பு உதவியாளர் - 03 பதவிகள்**

**வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்குத் தேவையான தகைமைகள்**

அரங்க ஒளியமைப்பாளர் பதவியின் வேலைகளுக்கு இயைபாக மூன்றாம் நிலை தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப / தொழிற் பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழிற்றிறன் NVQ 4 மட்டத்திற்குக் குறையாத மட்டத்தில் தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

**வயது :** 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
**சம்பள அளவு :** ரூபா 25750 - 10x270 - 10x300 - 10x330 - 12x350 = 38950/=
**தெரிவு செய்யும் முறை :** கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் மூலம்

முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப சேவை வகுதியில், ஆரம்ப நிலை சேவை வகுதியில் மற்றும் ஆரம்ப அரைத் தேர்ச்சி சேவை வகுதியின் பதவிகளுக்கு திறைசேரியினால் அங்கீகரிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவுப் படி உட்பட ஏனைய அனைத்து அனுமதிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் வழங்கப்படும். நிறுவனத்தினால் செயற்படுத்தப்படும் மருத்துவ காப்புறுதித் திட்டத்தின் நன்மைகளும் உரித்தாகும்.

மேற்குறிப்பிடப்பட்ட பதவிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பப் படிவத்தை 2022-04-20ஆம் திகதிக்கு முன் பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் அபிவிருத்தி), டவர் மண்டப அரங்க மண்டபம், சவ்சிரிபாய, இல. 123, விஜேராம மாவத்தை, கொழும்பு - 07 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது நேரில் கொண்டு வந்து ஒப்படைத்தல் வேண்டும் என்பதுடன் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தாம் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். அரச, கூட்டுத்தாபன, நியாயாதிக்கச் சபைகளில் சேவையாற்றும் விண்ணப்பதாரர்கள் தமது நிறுவனத்தின் தலைவரின் ஊடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். (அரச மற்றும் நியாயாதிக்கச் சபைகளில் சேவையாற்றுபவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.)

**கவனிக்கவும்:** * அடிப்படை தகைமைகளைப் பூர்த்தி செய்திராத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
* இது தொடர்பில் மேற்கொள்ளப்படும் சகல அழுத்தங்களும் தெரிவு செய்வதற்கு தகுதியீனமாகக் கருதப்படும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**டவர் மண்டப அரங்க மன்றம்,**
**சவ்சிறிபாய, இல. 123, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.**

# நியூ ஸ்டார் சம்பியன் மாவட்டப் போட்டிக்கு தகுதி



**ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்**

கிழக்கு மாகாண விளையாட்டுத்திணைக்களத்தின் ஏற்பாட்டில் அட்டாளைச்சேனை பிரதேச செயலகக் கழகங்களுக்கிடையில் நடைபெற்ற கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் அட்டாளைச்சேனை நியூ ஸ்டார் விளையாட்டுக் கழகம் சம்பியனாகி அம்பாறை மாவட்டப்போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டது.

அட்டாளைச்சேனைப் பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் எம்.எச்.எம்.அஸ்வத் தலைமையில் பாலமுனை பொது விளையாட்டு மைதானத்தில் (15.03.2022) நடைபெற்ற இச்சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டிக்கு அட்டாளைச்சேனை நியூ ஸ்டார் விளையாட்டுக் கழகமும் பாலமுனை அல்அறபா விளையாட்டுக்கழகமும் தெரிவு செய்யப்பட்டது.

அட்டாளைச்சேனைப் பிரதேச செயலகப்பிரிவில் பதிவு செய்யப்பட்ட ஒலுவில், பாலமுனை, அட்டாளைச்சேனைப் பிரதேசங்களில் இருந்து 30 கழகங்கள் இச்சுற்றுப் போட்டியில் கலந்து கொண்டனர்.

5 ஓவர் 11 பேர் என்ற அடிப்படையில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூ ஸ்டார் அணியினர் குறிப்பிட்ட ஓவர் நிறைவில் 4 விக்கட் இழப்புக்கு 67 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர்.

பதிலுக்கு வெற்றி பெற துடுப்பெடுத்தாடிய அல்அறபா அணியினர் 5 ஓவர் நிறைவில் 8 விக்கட்களையும் இழந்து 33 ஓட்டங்களைப் பெற்று கொண்டனர்.

33 ஓட்டங்களால் அட்டாளைச்சேனை நியூ ஸ்டார் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று அம்பாறை மாவட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இறுதிப்போட்டியில் நியூ ஸ்டார் அணியின் அப்னான் 23,முஆன்னத் 26 ஓட்டத்தினைப் பெற்றதுடன் நிரோசன் 3 விக்கட்டினையும் வீழ்த்தினார்.

நியூ ஸ்டார் அணி வீரர் முஆன்னத் கழகத்தின் வெற்றிக்கு வழிவகுத்தார்.

இவ்வாண்டுக்கான அட்டாளைச்சேனைப் பிரதேச செயலக கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் நியூ ஸ்டார் அணி வெற்றி பெற்று தங்கப்பதக்கதையும், இரண்டாமிடம் பெற்ற அல்அறபா அணியினர் வெள்ளிப்பதக்கத்தையும் தனதாக்கிக் கொண்டனர்.

இறுதிப்போட்டியில் அட்டாளைச்சேனை பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் எம்.எச்.எம்.அஜ்வத் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட மாவட்டப் பயிற்றுவிப்பாளர் ஏ.சப்ரீன் நசார், நியூ ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் முகம்மட் றியாஸ் உட்பட கழகங்களின் வீரா்கள் கலந்து கொண்டனர்.

கடந்த 2020ம் ஆண்டு இறுதியாக நடைபெற்ற அட்டாளைச்சேனைப் பிரதேச செயலக கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் ஒலுவில் இலவன் ஸ்டார் அணி வெற்றி பெற்று தங்கப்பதக்கதையும், இரண்டாமிடத்தினை பெற்ற அட்டாளைச்சேனை மாக்ஸ்மேன் அணியினர் வெள்ளிப்பதக்கத்தையும் தனதாக்கிக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## தென்னாபிரிக்காவுடனான 3ஆவது ஒருநாள் போட்டியில்

# பங்களாதேஷ் அணி வெற்றி தொடரையும் வென்றது



3ஆவது ஒருநாள் போட்டியில் பங்களாதேஷ் வெற்றி பெற்ற தென்னாபிரிக்காவிற்கு எதிரான ஒருநாள் தொடரை வென்றது.

இந்த வெற்றியின் மூலம் தென் ஆபிரிக்காவை அதன் சொந்த மண்ணில் வீழ்த்தி பங்களாதேஷ் அணி வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது.

தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வரும் பங்களாதேஷ் அணி 3 ஒரு நாள் போட்டிகள் மற்றும் 2 டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது.

இரு அணிகளுக்கும் இடையிலான முதல் ஒருநாள் போட்டியில் பங்களாதேஷ் அணியும், 2வது போட்டியில் தென் ஆபிரிக்க அணியும் வெற்றி பெற்றிருந்தன.

இந்நிலையில் 3வது ஒருநாள் போட்டி செஞ்சூரியனில் நேற்று முன்தினம் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்கா முதலில்துடுப்பெடுத்தாடியது .



தொடக்கம் முதலே பங்களாதேஷ் அணி வீரர்களின் பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் தென்னாபிரிக்க வீரர்கள் தடுமாறினர்.

37 ஓவர்கள் முடிவில் 154 ஓட்டங்களுக்கு தென்னாபிரிக்கா அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. அதிகபட்சமாக அந்த அணியின் ஜனிமேன் மாலன் 39 ஓட்டங்கள் எடுத்தார். பங்களாதேஷ் பந்து வீச்சாளர் தஸ்கின் அகமது 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார் .

பின்னர் 155 ஓட்டங்கள் என்ற எளிய இலக்கை நோக்கி விளையாடிய பங்களாதேஷ் அணி 26.3 ஓவர்களில் 1 விக்கெட் இழப்பிற்கு 156 ஓட்டங்கள் எடுத்தது.

தலைவர் தமீம் இக்பால் 87 ஓட்டங்கள் குவித்து கடைசிவரை ஆட்டமிழக்காமல் இருந்தார். இதையடுத்து 9 விக்கெட் வித்தியாசத்தில் அந்த அணி வெற்றி பெற்றது .

இதன் மூலம் 3 போட்டிகள் கொண்ட தொடரை 21 என்ற கணக்கில் பங்களாதேஷ் அணி கைப்பற்றியதுடன், தென்னாபிரிக்காவை சொந்த மண்ணில் முதல் முறையாக வீழ்த்தி சாதனை படைத்துள்ளது.

# செமன்யா உலக சம்பியன்ஷிப் 5,000 மீற்றர் போட்டிக்கு தகுதி



இரட்டை ஒலிம்பிக் சம்பியனான காஸ்டர் செமன்யா, 2022 உலக சம்பியன்ஷிப்பில் 5,000 மீற்றர் ஓட்டத்திற்கு தகுதி பெறுவதைக் கண்காணித்து, புதன்கிழமையன்று 3,000 மீற்றர் ஓட்டத்தில் தனிப்பட்ட சிறந்த நேரத்தில் எட்டு நிமிடங்கள் 54.97 வினாடிகளில் வெற்றி பெற்றார்.

கேப் டவுனில் உள்ள க்ரீன்பாயிண்ட் மைதானத்தில் தடகள தென்னாபிரிக்க கிராண்ட் பிரிக்ஸ் தொடரை வென்றபோது, அவர் தனது முந்தைய சிறந்த 3,000 மீற்றர் நேரத்தை கிட்டத்தட்ட 10 வினாடிகளில் வீழ்த்தினார்.அமெரிக்க நகரமான யூஜினில் நடைபெறும் உலக சம்பியன்ஷிப் 5,000 மீற்றர் ஓட்டத்திற்கான தகுதி நேரம் 15:10.00 ஆகும், மேலும் செமன்யா வெற்றி பெறுவார் என்ற நம்பிக்கை உள்ளது.

வெற்றிக்குப் பிறகு செய்தியாளர்களிடம் அவர் கூறுகையில், நான் அங்கே அல்லது அங்கே இருக்கிறேன். அது நடந்தால், அது நடக்கும்.

டெஸ்டோஸ்டிரோனைக் குறைக்கும் மருந்துகளை எடுக்க மறுப்பதால், தென்னாபிரிக்காவினால் தனக்குப் பிடித்தமான 800 மீற்றர் ஓட்டத்தில் போட்டியிட முடியவில்லை .ஒலிம்பிக் பெருமை மற்றும் உலக சாதனைகளை அவர் அடைந்த தூரம்.

அதிக டெஸ்டோஸ்டிரோன் அளவைக் கொண்ட பெண்கள் விளையாட்டு வீராங்கனைகள் 400மீற்றர் முதல் ஒரு மைல் வரையிலான பந்தயங்களில் போட்டியிடுவதை உலக தடகளப் போட்டிகள் தடுக்கின்றன, ஏனெனில் ஹார்மோன் தசை வெகுஜனத்தையும் ஆக்ஸிஜன் உறிஞ்சுதலையும் அதிகரிக்கிறது என்று ஆளும் குழு கூறுகிறது.

இந்த தீர்ப்பை இரத்து செய்ய செமன்யா பல தோல்வியுற்ற சட்ட முயற்சிகளை மேற்கொண்டார்.

தடையை ஆதரித்து, உலக தடகள முகாமையாளர் செபஸ்டியன் கோ, 10 ஆண்டு கால திடமான அறிவியலில் விதிமுறைகளை ஆதரிக்கிறது என்றார்.

# எக்ஸ்போ லங்கா யூத் கிண்ண கால்பந்தாட்ட போட்டியில் ஜாவாலேன் யூத் அணி வெற்றி



**வட கொழும்பு தினகரன் நிருபர்**

இலங்கையின் பெரும் வரலாற்றுப் புகழ் கொண்ட பிரபல கால்பந்தாட்ட அணிகளான ஜாவாலேன் யூத் அணி கொழும்பு எப்.சி.யூத் அணிக்கும் மத்தியிலான எக்ஸ்போ லங்கா யூத் கிண்ண கால்பந்தாட்ட இறுதி போட்டியில் 05 – 03 கோல்கள் வித்தியாசத்தில் ஜாவாலேன் யூத் அணி வெற்றியை சுவீகரித்து சம்பியன் கிண்ணத்தையும் கைப்பற்றினர்.

சிட்டி புட்போல் லீக்கினால் நடாத்தப்பட்ட எக்ஸ் போ லங்கா யூத் கிண்ணத்திற்கான இறுதிப் போட்டியின் ஜாவாலேன் கழக யூத் அணி தன் தலைமையத்துக்கு அண்மையில் உள்ள கொழும்பு பிரதேசத்தில் மிகப் பழமை வாய்ந்த சிட்டி லீக் மைதானத்தில் எக்ஸ்போ லங்கா யூத் கிண்ணத்தைக் கைப்பற்றியமை விசேட அம்சமாகும்.

இவ் இறுதிப் போட்டியில் இரு பிரபல யூத் அணிகளுக்கும் பெரும் பலப் பரீட்சையாகவும், கௌரவப் பிரச்சினையாகவும் காணப்பட்டது. இரு அணிகளின் ஆதரவாளர்களும் சிட்டி லீக் மைதானத்தில் வெள்ளம் போல் குவிந்திருந்தனர்.

இரு அணிகளின் ரசிகர்கள் போட்டியின் ஆரம்ப நிலை முதல் இறுதி வரை தங்களின் ஆதரவு அணியை வெற்றி பெற வைப்பதற்காக தங்களின் குரல்களை எழுப்பி தாங்கள் சார்ந்த அணியின் வீரர்களை உற்சாகப் படுத்துவதில் பெரும் ஆர்வத்தை

வெளிப்படுத்தினர். அனைவரும் வியக்கும் வகையில் சுமார் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட ரசிகர்கள் சிட்டி லீக் மைதானத்தை நிரம்பியிருந்தமை இப்போட்டியின் மற்றுமொரு சாதனையாகும்.

கொழும்பு 02 கொம்பெனித் தெரு ஜாவா லேன் மக்கள் கால்பந்தாட்ட விளையாட்டில், இந் நாட்டில் பெரும் ஆர்வத்தை வெளிப்படுத்தியவர்கள். இலங்கையின் பிரதான பல கால்பந்தாட்ட கழகங்களிலும், இலங்கை தேசிய அணியிலும் இப் பிரதேச கால்பந்தாட்ட வீரர்கள் பல தசாப்த காலங்களாக இடம் பிடித்துள்ள பிரபல கால்பந்தபட்ட வீரர்களை உருவாக்கிய பூமியே கொம்பெனித் தெரு பிரதேசமாகும்.

இந்நிலையில் கொழும்பு எப்.சி. யூத் அணி ஜாவா லேன் யூத் அணி வீரர்கள் இப் போட்டியின் போது பல கோல்களை பெறும் சந்தர்ப்பங்களை நழுவ விட்டனர். இரு அணிகளும் தடுமாற்றத்துடன் விளையாடினர். இருந்தும் இரு அணிகளின் கோல் தடுப்பு வீரர்களும் எதிர் தரப்பினரால் பந்தை கோல் வலையத்திற்குள் புகுந்து விடாத வகையில் மிக நுட்பமாக பந்தை தடுத்து நிறுத்தி மைதானத்தில் குழுமியிருந்த ரசிகர்களை வியக்க வைத்தனர்.

போட்டியின் 59ஆவது நிமிடத்தில் கொழும்பு எப்.சி.யூத் அணி வீரர்

ஏ.எல்.எம்.காலிக் போட்டியின் மத்தியஸ்தர் தரங்க புஷ்பகுமாரவினால் சிவப்பு அட்டை காட்டப்பட்டு களத்திலிருந்து வெளியேற்றப்பட்டார்.

பத்து வீரர்களுடன் இவ் ஆட்டத்தில், பங்கு கொண்ட கொழும்பு எப்.சி.யூத் அணியின் வீரர் மொஹமத் லபார் போட்டியின் 62 ஆவது நிமிடத்தில் தன் அணிக்கான ஒரு கோலை பெற்றார்.

போட்டியின் 72 ஆவது நிமிடத்தில் ஜாவா லேன் யூத் அணி வீரர் எம்.என். நதீம் வழங்கிய பந்தை மிக இலகுவாக பெற்றுக் கொண்ட இவர் அணியின் வீரர் மனோகான் யதுசன் மிகத் துள்ளியமாக பந்தை கோல் வளைய எல்லைக்குள் புகுத்தி தன் அணிக்கான ஒரு கோலை பெற்று போட்டியை சம நிலைக்கு கொண்டு வந்தார்.

போட்டி நிறைவை எட்டும் வரை இரு அணிகளும் 01 – 01 எனப்பட்ட கோல்கள் அடிப்படையில் காணப்பட்டன. இப்போட்டிக்கான நேர கால எல்லை நிறைவை எட்டிய போட்டி மத்தியஸ்தர் தாரங்க புஷ்பகுமாரவினால் வெற்றி அணியை தெரிவு செய்யவதற்கான பெனால்டி முறை அறிமுகம் செய்யப்பட்டது.

ஜாவா லேன் யூத் அணி வீரர்களான எப்.ஆர்.பரீத் அணித்தலைவர் டொனால்ட் டெறிக் நீல் பெர்னாண்டோ, ஆர்.கேதிசன், எம். ஐ.இமானுல்லா, எம்.என்.ஹமீட் ஆகியோர் மிக நுட்பமாக தன் அணிக்காக பெனால்டி கோல்கள் ஐந்தை சுவீகரித்தனர்.

கொழும்பு எப்.சி.யூத் அணி வீரர்களான சமுனி தரிந்து, அணித் தலைவர் நிக்சன் அந்தனி, எம்.ஐ.எம். இஹ்லால் ஆகியோர் தனது அணிக்காக மூன்று கோல்களை கைப்பற்றினர்.

இப்போட்டியின் பெனால்டி முறைமையில் 05 – 03 என்ற கோல்கள் வித்தியாசத்தில் ஜாவாலேன் இப்போட்டியில் அபார வெற்றியை தன் வசமாக்கி சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்தது.

இப்போட்டிச் சுற்றில் ஆறு கோல்களை புகுத்திய கொழும்பு வெட்டரன்ஸ் யூத் அணி வீரர் தேஷான் துஷ்மிக்க தங்கப் பாதணி விருதை பெற்றார். அதிசிறந்த வீரருக்கான விருதை ஜாவா லேன் யூத் அணியின் வீரர் மனோகரன் யதுசன் தங்கப் பந்தை சுவீகரித்தார்.

இச் சுற்றுப் போட்டியில் சம்பியனான ஜாவாலேன் யூத் அணி எக்ஸ்போ லங்கா வெற்றிக் கிண்ணத்தையும், அணிவீரர்களுக்கான தங்கப் பதக்கங்களையும் ஒரு இலட்சம் ரூபா பணப்பரிசையும் பெற்றனர்.




இரண்டாம் இடத்தை கைப்பற்றிய கொழும்பு எப்.சி.யூத் அணி வீரர்கள் வெள்ளிப் பதக்கங்களையும் எழுபத்தையாயிரம் ரூபா பணப் பரிசையும் பெற்றனர்.

எக்ஸ்போ லங்கா குழுமத்தின் பெரிலொஜிஸ்டிக்ஸ் நிறுவனத்தின் பிரதி பொது முகாமையாளர் அஹ்மத் ஷாஜீர் பிரதம அதிதியாகவும், இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் அனுர டி சில்வா சம்மேளத்தின் உதவித் தலைவர் ஓய்வு நிலை பிரதி பொலிஸ் மா அதிபர் கே.பி. பி. பத்திரன, சிட்டிபுட் போல் லீக் தலைவர் இராமநாதன் புவனேந்திரன் ஆகியோர் இப்பரிசளிப்பு நிகழ்வில் இணைந்து சிறப்பித்தனர்.

# இலங்கை விமானப்படை கடற்கரை கரப்பந்து அணி பொதுநலவாய போட்டிகளுக்கு தெரிவு




2022 ம் ஆண்டுக்கான பொதுநலவாய போட்டிகளுக்கான ஆசிய கடற்கரை கரப்பந்து தெரிவு போட்டிகள் கடந்த 2022 ம் மார்ச் 19 ம் திகதி நீர்கொழும்பு கடற்கரையில் நிறைவுக்கு வந்தது இந்த போட்டிகளில் மலேசியா மாலைதீவு , சிங்கப்பூர் இலங்கை ஆகிய அணிகள் பங்கேற்றன.

இந்த போட்டிகளில் இலங்கை விமானப்படை வீரர்களான கோப்ரல் யாப்பா மற்றும் கோப்ரல் ஜயசிங்க ஆகியோர் தோற்கப்படாத அணியாக இந்த போட்டிகளில் தங்கப்பதக்கத்தினை சுவீகரித்தனர். மேலும் இங்கிலாந்தில் இடம்பெறவுள்ள 2022 ம் ஆண்டுக்கான பொதுநலவாய போட்டிகளுக்கு இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி இலங்கை விமானப்படை வீரர்கள் விளையாட உள்ளனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 மார்ச் மாதம் 25ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.